www.gnanam.info www.gnanam.lk
ISSN 2478-0340
ஜூன் 2016

ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

193

விலை : ரூபா 100/=

17 ஆவது அகவையில் ஞானம்

தகைசார் தமிழ்ப் பேராசிரியர்

பொன். பூலோகசிங்கம்



தரமான தங்க நகைகளுக்கு....

Nagalingams Jewellers

Designers and Manufacturers of
22kt Sovereign Gold
Quality Jewellery

101, Colombo Street, Kandy.
Tel: 081 - 2232545

CENTRAL ESSENCE SUPPLIERS

Suppliers to Confectioners & Bakers

**Dealers in all kinds of Food Essences,
Food Colours, Food Chemicals,
Cake Ingredients Etc.**

**76B, Kings Street, Kandy.
el: 0?1 - 2224187, 081 - 2204480, 081 - 4471563**

ஞானம்
ஒளி:17
சுடர்:01
193

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞா. பாலச்சந்திரன்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka

ஒரு வருடம்	:ரூ 1,000/=
ஆறு வருடம்	:ரூ 5,000/=
ஆயுள் சந்தா	:ரூ 20,000/=

	ஒரு வருடம்
Australia (AU$)	50
Europe (€)	40
India (Indian Rs.)	1250
Malaysia (RM)	100
Canada ($)	50
UK (£)	40
Singapore (Sin. $)	50
Other (US $)	50

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**
உ. நிசார் 05
மட்டுவில் ஞானக்குமாரன் 06
ஆ. முல்லை திவ்யன் 16
விவேகானந்தனூர் சதீஸ் 21
கலைமகன் பைரூஸ் 29
எம்.எம்.மன்ஸூர் 38
பாலமுனை பாறூக் 41

⊙ **சிறுகதைகள்**
எஸ்.கருணானந்தராஜா 07
வேல் அமுதன் (குறுங்கதை) 19
ஷெல்லிதாசன் 23

⊙ **கட்டுரைகள்**
முருகபூபதி 03
மொழிவரதன் 20
புலேந்திரன் நேசன் 33

⊙ **இலக்கிய உரை**
தி. ஞானசேகரன் 12

⊙ **விமர்சனம்**
சை. பீர்முகம்மது 30

⊙ **ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள்**
என். செல்வராஜா 39

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**
கே. பொன்னுத்துரை 50

⊙ **பத்தி**
பேரா. துரை மனோகரன் 47
கே.ஜி.மகாதேவா 44

⊙ **வாசகர் பேசுகிறார்** 56

ஆசிரியர் பக்கம்

பதினேழாவது அகவையில் ஞானம்

ஞானம் இதழ் தனது பதினேழாவது அகவையில் தடம்பதிக்கும் இத்தருணம் எமக்குப் பெரும் மகிழ்வைத் தருகிறது.

ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மாதம் தவறாது பதினேழு ஆண்டுகளாக வெளிவரும் சிற்றிதழ் என்றால் அது ஞானம் மட்டுந்தான் என்பதில் நாம் பெருமை கொள்கிறோம்.

அதே வேளையில் தரமான சஞ்சிகையாகவும் ஞானம் வெளிவந்து கொண்டிருக்கிறது என்பதற்குச் சாட்சியாக இலங்கையிலும் தமிழகத்திலும் உள்ள பல்கலைக்கழகங்களில் அதிக எண்ணிக்கை கொண்ட மாணவர்களால் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் சஞ்சிகையாகவும் ஞானம் மிளிர்கிறது. அந்தவகையில், பல்கலைக்கழக மாணவர்கள் பலர் ஞானம் சஞ்சிகையை ஆய்வுக்கு உட்படுத்தி முனைவர்-கலாநிதி (Phd.), எம். பில், (M.Phil) முதுகலைமாணி, (M.A.) சிறப்புக் கலைமாணி (B.A. Hons.) ஆகிய பட்டப்படிப்பினை நிறைவு செய்திருக்கிறார்கள்.

நவீனத் தமிழ் இலக்கியத்தில் போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் என்ற தனியான பகுப்புக்களை உருவாக்கிய பெருமை ஈழத்துப் படைப்பாளிகளையே சாரும் என்ற உண்மையை வெளிச்சமிட்டுக்காட்டி அவற்றை உறுதிப்படுத்தும் வகையில், ஞானம் 150ஆவது இதழை 600 பக்கங்களில் **போர் இலக்கியச் சிறப்பிதழாக** வெளிக்கொணர்ந்தோம். நமது நாட்டிலும் தமிழ்நாட்டிலும் உள்ள பல்கலைக் கழகங்களிலும், புத்திஜீவிகளிடையேயும் இலக்கிய ஆர்வலர்களிடையேயும் இந்த இதழுக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது.

அதேபோன்று ஞானம் 175ஆவது இதழை **ஈழத்துப் புலம் பெயர் இலக்கியச் சிறப்பிதழாக** 976 பக்கங்களில் வெளிக்கொணர்ந்தோம். இந்தச் சிறப்பிதழுக்கு எமது நாட்டிலும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் கிடைத்த வரவேற்பு எம்மைப் பிரமிக்க வைத்தது. குறிப்பாக டென்மார்க், ஜேர்மனி, சுவிஸ், பாரிஸ், இலண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இந்த இதழுக்குக் கிடைத்த பெரும் வரவேற்பை அங்கு வாழும் எழுத்தாளர்கள் பலருடன் நேரில் சந்தித்த வேளையில் அறியக்கூடியதாக இருந்தது. கனடா நாட்டில் இந்த இதழுக்கான ஓர் அறிமுகவிழா சிறப்பாக நடந்தேறியது.

இன்று ஞானம் சஞ்சிகையானது ஈழத்தில் இருந்து வெளிவரும் சர்வதேசம் தழுவிய சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல எழுத்தாளர்கள் ஞானம் சஞ்சிகை மூலம் அறிமுகமாகி பிரபல்யம்பெற்ற எழுத்தாளர்களாக மிளிர்கின்றனர். உலகம் தழுவிய நவீன தமிழ் இலக்கியப் போக்குகளை அறிமுகம்செய்யும் சஞ்சிகையாகவும் ஞானம் திகழ்கிறது.

மாதம் தோறும் ஞானம் சர்வதேச அளவில் முதலில் இணையத்தில் வாசிக்கக் கிடைக்கிறது. ஏறத்தாழ மாதாமாதம் 10000 பேர் ஞானம் இதழை இணையத்தில் வாசிக்கிறார்கள் என்பதைக் கணக்கிடமுடிகிறது. அதனைத் தொடர்ந்து அச்சு வடிவில் வெளிவருகிறது. ஞானத்தின் இத்தகைய வருகையானது வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர் குழுவினர் ஆகியோரிடையே பரஸ்பர நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்ப வகை செய்கிறது. அத்தோடு உலகளாவிய ரீதியில் புதியவர்கள் மாதாமாதம் ஞானத்துடன் இணைந்து கொள்ளவும் வகைசெய்கிறது என்பதை எம்மால் அனுபவ ரீதியாக உணர்ந்துகொள்ளமுடிகிறது.

எதிர்வரும் காலத்திலும் இத்தகைய பல காத்திரமான இலக்கியப் பணிகளை ஞானம் சஞ்சிகையூடாக ஆற்றுவோம் என உறுதி கூறுகிறோம்.

அட்டைப்பட அதிதி

தமிழ் உலகில் கொண்டாடப்படவேண்டிய தகைசார் பேராசிரியர் பொன். பூலோகசிங்கம்

எங்கள் நாவலர், 'வசனநடை கைவந்த வல்லாளர் ஆறுமுகநாவலர்' - என்று அறிந்திருக்கின்றோம். தமிழ்நாட்டில் கடலூரில் ஒரு காலத்தில் வள்ளலார் சுவாமிகளுக்கு எதிராக நீதிமன்றில் அவர் வழக்காடியதையும் அறிந்திருப்போம்.

ஆனால், அவர் தமது இளமைக்காலத்தில் கோபமும் மூர்க்க குணமும் கொண்டவர் என்பதை அறிந்திருப்போமா? தமது உறவினர் மீது தமக்கு வந்த கோபத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு அவர் துரத்திய கதை எத்தனை பேருக்குத் தெரியும் ?

ஆறுமுகநாவலர் நூற்றாண்டு இலங்கையில் நாடுதழுவிய ரீதியில் கொண்டாடப் பட்ட வேளையில் நடைபெற்ற விழாக்களில் உரைநிகழ்த்தியவர்தான் அந்த சுவாரஸ்யத்தை வெளிப்படுத்தினார்.

அவர்தான் தகைசார் பேராசிரியர் பொன். பூலோகசிங்கம்.

இவ்வாறு கூட்டங்களிலும் விழாக்கள் மற்றும் சந்திப்புகளிலும் பல சுவாரஸ்யங்களை அவிழ்த்து கலகலப்பூட்டும் பூலோகசிங்கம் அவர்கள் தற்பொழுது அவுஸ்திரேலியா, சிட்னியில் ஒரு முதியோர் பராமரிப்பு நிலையத்தில் கட்டிலில் சயனித்தவாறு கடந்த காலங்களை நனவிடை தோய்ந்துகொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு மனிதர் வாழ்விலும் முதுமை வரும். அந்த முதுமை மேலும் இரண்டு 'மை'களையும் அழைத்துக்கொண்டு அருகிலிருந்து உறவாடும். அவைதான் தனிமை - இயலாமை.

அந்தத் தனிமையும் எழுதமுடியாதிருக்கும் இயலாமையும்தான் இன்று அவரை வாட்டிக் கொண்டிருக்கின்றன.

பூலோகசிங்கமும் அங்கதச் சுவையுடன் உரத்துச்சிரித்து மகிழ்வூட்டுபவர். ஆறுமுகநாவலரைப்பற்றி நாம் அறியாத பல பக்கங்களை, அவரது நூற்றாண்டு காலத்தில் தான் பேசிய மேடைகளில் சொன்னவர்.

ஒரு சமயம் கடும்கோபத்துடன் தமது உறவினர் ஒருவரை வெட்டுவதற்காக ஒரு வெட்டுக்கத்தியுடன் நாவலர் ஓடியிருக்கும் செய்தியைச் சொல்லி, தனது பேச்சுக்களினால் எங்களை சிலிர்க்கச்செய்த சிங்கம், தற்போது நான்கு சுவர்களுக்குள் அமர்ந்து, தான் கடந்தவந்த பொற்காலங்களை நினைத்துக் கொண்டிருக்கிறது.

சிலவருடங்களுக்கு முன்னர் சிட்னியில் ஒரு நாள் வெளியே நடந்துசென்றபோது , எதிர்பாராதவிதமாக தடுக்கியோ மயங்கியோ விழுந்திருக்கிறார். அதனைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு, படிப்படியாக தேறியிருந்தாலும், பவளவிழா நெருங்கியிருந்த காலப்பகுதியில் விதியானது தன்னை இப்படி



முருகபூபதி - அவுஸ்திரேலியா

முடங்கியிருக்கச் செய்துவிட்டதே என்ற கவலையையும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் கடந்துவிட்டார்.

அந்த முதியோர் இல்லத்தில் அவர் தங்கியிருந்த அறையில், அருகில் மற்றும் ஒரு கட்டிலில் படுத்திருந்து சிகிச்சை பெற்றுவந்த அவருடைய மனைவியும் பல மாதங்களுக்கு முன்னர் நிரந்தரமாக விடைபெற்றுவிட்டார்.

இன்று தனிமையும், எதனையும் எழுதமுடியாத இயலாமையும் அவரைச் சூழ்ந் திருக்கிறது.

தம்மிடமிருந்த பெறுமதியான நூல்கள் பலவற்றை சிட்னி அறிவகம் நூல் நிலை யத்திற்கு வழங்கிவிட்டார்.

நாமெல்லோரும் எதிர்காலத்தில் கடக்க விருக்கும் பாதையை, இன்று அவர் நிதானமாக அந்த முதியோர் இல்லத்தில் நான்கு சுவர்களுக்குள்ளிருந்து கடந்து கொண்டிருக்கிறார்.

பூலோகசிங்கம் - கல்விமான். பேராசிரியர், பேச்சாளர், ஆய்வாளர், எழுத்தாளர், பதிப்பாசிரியர்.

1936 ஆம் ஆண்டு வவுனியாவில் செட்டிக்குளத்தில் பிறந்த பூலோகசிங்கம் அவர்களுக்கு தற்பொழுது 80 வயதாகிறது. ஈழத்து இலக்கிய உலகில் சிறந்த ஆய்வாளராகவும், கல்வித்துறையில் சிறந்த கல்விமானாகவும் விளங்கிய இவர், இலங் கையில் ஆறுமுகநாவலர் சபையில் அங்கம் வகித்தவர்.

ஆறுமுகநாவலரின் நூற்றாண்டு இலங் கையில் கொண்டாடப்பட்டபோது நாடுதழுவிய ரீதியில் நடைபெற்ற பல கருத்தரங்குகளிலும் நாவலர் விழாக்களிலும் கருத்துச்செறிவான உரைகளை நிகழ்த்தியவர்.

நாவலரின் சமயப்பணி - தமிழ் உரை நடை வீச்சு தொடர்பாக மட்டுமன்றி குறிப் பிட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் அவர் மேற்கொண்ட சமுதாயப்பணிகளையும் இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ளத் தக்க விதமாக சான்றாதாரங்களுடன் கட்டுரை களும் எழுதிய பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்த பின்னரும் தனது ஆய்வுப் பணி களைத் தொடர்ந்தார்.

இவரிடம் பல்கலைக்கழகங்களில் கற்ற பல மாணவர்கள் பின்னாளில் எழுத்தாளர்களாகவும் ஆய்வாளர்களாகவும் மிளிர்ந்திருக்கிறார்கள். எளிமையாகவும் அதேசமயம் கருத்தா ழத்துடனும் பேச வல்லவர்.

இவரது தமிழ் ஆய்வுப்பணிகளுக்காக இலங்கை அரசின் கலாசார அமைச்சு கலாகீர்த்தி என்ற அதிவிசேட பட்டத்தை (1993) வழங்கிப் பாராட்டி கௌரவித்துள்ளது.

2008 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச்சங்கம் சிட்னியில் நடத்திய எட்டாவது எழுத்தாளர் விழாவில் இவர் அயராது மேற்கொண்ட தமிழ்ப்பணிக்காக பாராட்டி விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தமிழுக்குத் தொண்டாற்றிய பத்தொன பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பேறிஞர் ஜே.ஆர். ஆனல்ட் சதாசிவம் பிள்ளை அவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்திருக்கும் புலவர்பெருமக்கள் பற்றிய வரலாற்று நூலை எழுதியவர்.

பாவலர் சரித்திர தீபகம் என்னும் அந்த நூலை தேடிஎடுத்து மீள்பதிப்புச்செய்வதற்கு கொழும்பு தமிழ்ச்சங்கம் 1975 ஆம் ஆண்டில் முன்வந்தபொழுது, அதற்காக ஆக்கபூர்வமாக ஆதரவும் ஒத்துழைப்பும் தந்தவர்தான் பேராசிரியர் பொன். பூலோக சிங்கம்.

'அந்த நூலை அரிய பல ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பதிப்பித்து தந்தவர்தான் பூலோகசிங்கம்' என்று தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் வாழ்ந்து மறைந்த க.இ.சு. கந்தசுவாமி அவர்கள் பதிவுசெய்துள்ளார்.

குறிப்பிட்ட நூல் இரண்டு பாகங்களாக வெளியாகியிருக்கிறது.

பேராசிரியர் அவர்கள், தமது ஆரம்பக்கல்வியை செட்டிகுளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியிலும் கற்று, அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று - பேராசிரியர்கள் வி. செல்வநாயகம், ஆ. சதாசிவம், ச. தனஞ்சயராசசிங்கம், சு. வித்தியானந்தன் ஆகியோரின் மாணவராக விளங்கியவர்.

இலங்கை அரசின் பல்கலைக்கழகப் புலமைப்பரிசில் பெற்று 1963 முதல் 1965 வரை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியலறிஞர் பேராசியர் தோமஸ் பரோவின் கீழ் மொழியியல் ஆராய்ச்சி மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார்.

வவுனியாவில் முதலாவதாக கலாநிதிப்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டவரும் இவரே என்பது சிறப்புக்குரியது.

கொழும்பு பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணி புரிந்தவர்.

1997 ஆம் ஆண்டின் பின்னர் அவுஸ்தி ரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார். பூலோகசிங்கம் எழுதிய நூல்களில் தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழறிஞரின் பெருமுயற்சிகள், ஈழம் தந்த நாவலர் என்பன இலங்கை அரசின் விருதுகளைப் பெற்றுள்ளன.

இந்துக் கலைக்களஞ்சியம், நாவலர் பண்பாடு, சிலப்பதிகார யாத்திரை, Poet Thambimuthu – a profile ஆகிய நூல்களையும் வரவாக்கியிருக்கும் பேராசிரியர் இவை தவிர, பல்வேறு மலர்கள், இதழ்களில் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு - சமயம் - இலக்கணம் பற்றியும் எழுதியிருப்பவர்.

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் நெறி, தத்தை விடுதூது, பதி னெட்டாம் நூற்றாண்டு வரையான ஈழத்துத் தமிழ் இலக்கியம், பத்தொன்பதாம் நூற் றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி, ஈழத்துப் புராணங்கள், வன்னி நாட்டின் வரலாறு. கோணேசர் கல்வெட்டு, முருகவழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் இலக்கண விசாரம் முதலான கட்டுரைகளும் எழுதி யிருக்கிறார்.

இவ்வாறு அயற்சியின்றி இயங்கியிருக்கும் பேராசிரியர், இன்று முதியோர் இல்லத்தில் நான்கு சுவர்களுக்குள் முடங்கியிருப்பதைப் பார்க்கும்பொழுது நெஞ்சம் அடைக்கிறது.

அவருடைய மாணாக்கர்கள், இலக்கிய நண்பர்கள் இந்தப்பூமிப்பந்தெங்கும் வாழ் கின்றனர். அவருடைய வாழ்வையும் பணி களையும் அருகிருந்து பார்த்தவர்களும் அவர்தம் படைப்புகளை படித்திருப்போரும் அவர் வாழும் காலத்திலேயே தமிழ் உலகின் கவனத்திற்கு சமர்ப்பிப்பதற்கு ஆவன செய்வதே தனிமையில் வாடும் அவ ருக்கு வழங்கும் ஊக்கமாத்திரைகளாக விளங் கும்.

'பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள் தமிழ் உலகில் கொண்டாடப்படவேண்டியவர்' என்ற வார்த்தை வெற்றுப்புகழாரம் அல்ல.

○○○

உதவாத முதுமை

இன்னும் இருளகலாத.... ஒரு
அதிகாலைப் பொழுது
இல்லாமை இயலாமை... வாட்ட
தள்ளாடும் வயதில் ஒரு மூதாட்டி
கந்தல் உடைகளை அணிந்து
தன் மானத்தைக் காத்த வண்ணம்
தயக்கத்துடன் வந்து நிற்கிறாள்
பஸ்தரிப்பு நிலையமொன்றில்

நடுங்கும் குளிரில்
அவள்... தனது
மங்கிய கண்களை ஏற்றி
கொட்டும் பனித்துளிகளை எறிக்க...
சற்றுத் தொலைவில் தென்படுகிறது
அவள் வாழ்ந்து ... வளம்பெற்று...
வந்தவர்களை வரவேற்ற
அவளது குடிசை

அங்கே... அவளது மகன்
ஐயோ... அம்மா...
ஏனிந்த முடிவை எடுத்தாய்?
என்பது போல
பதற்றத்தடன் தனது நடையை
முன்னெடக்க
பின்னால் வந்த
அவனது மனைவியின் ஒரு கை
அவனை இழுத்து... நிறுத்தி... அச்சுறுத்த
அவனது நடை தளர்கிறது

உடனே அவள்
தனது மறு கையில் ஏந்திய
ஒரு பொதியை எறிந்து விடுகிறாள்
குப்பை மேட்டில்
தனது கணவனின் பார்வையை
திசை திருப்ப

விழுந்த பொதிக்குள்
சில கந்தல் உடைகள்
அவற்றுடன்...
யாருக்கும் உதவாத முதுமையும்
தலை குனிந்து கொள்கிறது.

- உ. நிசார்

மட்டுவில் ஞானக்குமாரன்

பட்டதெல்லாம் போதுமினி என்று போய்விட்டாள் தமிழ் இனி

வரலாற்றை நினைத்தால்
புரியாமலே இருக்கிறது
கொள்ளைகாரியையே மந்திரியாக்கிய மனிதர்கள்
தீவிர கொள்கைக்காரி உனை
தீராப்பெரும் தொல்லைக்காரியாக
நினைத்திருக்கிறார்கள் என்பதால்

உனக்காக சிலர் எழுதாமல் கிடக்கிறார்
அவை அடக்கமா அல்லது
பயமெனும் புலன் அடக்கமாவெனத்
தெரியாமலிருக்கிறது

சீன வெடி வெடிச்சாலே
சிச்சா அடிப்பவர்கள்
யானை வெடிக்கு மத்தியிலே நின்று
சேவையாற்றிய உனைப்பற்றி அவதூறாய்
எழுதுகிறார்கள்

அவள் செய்த அரசியலென்பது
மேடை போட்டு செய்யும் ஊத்தை
அரசியல் அல்ல
சாக்கடையைக்கூட சந்தனமாய்
மாத்தும் நேர்த்தி அரசியல்

அவள் கை சுத்தமானதென்பதை
கடலை விற்று வாழ்க்கை நடாத்தும்
அவள் தாயின்
வறுமை சொல்லுகிறது

எண்பதுக்கு முன்னரே
நாட்டை விட்டு ஓடிப்போனவர்கள்தான்
இப்போ வந்து
அவள் கண்களே கழன்று விழுமளவிற்கு
எரிச்சல் விமர்சனத்தை
எழுதி தள்ளுகிறார்கள்

ஏசி அறையிலிருந்து
அவளை தூசிக்கும் பரிமேலழகர்கள்
பூச்செண்டேந்தியவள் கையில்
வெடிகுண்டு வந்ததன் காரணத்தை
ஏனோ மறந்துவிடுகிறார்கள்

எந்த வேர்வைக்கும்
வெற்றிகள் வேர்வைக்குமெனும் நம்பிக்கை
பொய்யாகிப்போக
உண்மையை எழுதியதால்
கண்களில் நீர்வைக்கும் நிலைக்கு
ஆளானது அவள் பெண்மை

- எஸ். கருணானந்தராஜா
(இலண்டன்)

தொல்லை பேசி

14-01-16

அன்பு மனைவி ஜெயாவுக்கு

நீ இப்படியொரு முடிவையெடுப்பாயென்று நான் கனவிலும் எண்ணவில்லை. திடீரென்று ஒன்றையும் எழுதிவைக்காமல், ரெலிபோனில்கூட ஒரு மெஸேஜ் அனுப்பாமல் குழந்தையையும் தூக்கிக்கொண்டு போய்விட்டாய். எத்தனை நாளைக்கு நீ கொண்ணன் வீட்டில் இருக்கப்போகிறாயென்று நானும் பார்க்கத்தான் போகிறேன். கொண்ணியோடு உனக்கு அடியோடு பொருந்திவராது. உங்கள் இருவருக்குள்ளும் இருக்கும் பனிப்போர் எனக்கு நன்றாகத்தெரியும். ஏன்? கொண்ணனுக்கும் நன்றாகத் தெரியும். எப்படித்தான் நீ அவர்களோடு ஆறுமாதக் குழந்தையையும் வைத்துக்கொண்டு சமாளிக்கப்போகிறாயோ தெரியவில்லை. தம்பி எப்படி இருக்கிறான். கொஞ்சம் குழந்தையையாவது கொண்டுவந்துகாட்டு. எங்கு வரவேண்டுமோ அங்குவருகிறேன்.

நான் உனக்குச் சவால்விடுகிறேனென்று எண்ணாதே! உள்ள நிலைமையைத்தான் கூறுகிறேன். ஏற்கனவே உன்னை லண்டனுக்கு இறக்குவதற்காக கொண்ணனிடம் நான் வாங்கிய கடனால் உனது அண்ணி கொதித்துப் போயிருக்கிறா. இப்போது நமக்கு வந்திருக்கும் நிலைமையால் உன்மீது அவவுக்கு மேலும் இளக்காரம் கூடுமெயொழியக் குறையாது. ஆரம்பத்தில் கொஞ்சம் அனுதாபம் காட்டுவார்கள். ஆனால் போகப்போகத்தான் தெரியும். 'நித்தம் போனால் முற்றம் சலிக்குமென்பார்கள்' ஆனால் நீயோ நிரந்தரமாகவே அவர்களோடு தங்க முடிவெடுத்துவிட்டாய் போலிருக்கிறது. தயவுசெய்து அந்த முடிவை மாற்றிக்கொள்.

நீ எடுத்திருக்குமிந்த முடிவால் எனக்குமட்டுமல்ல நம் இருவருக்கும்தான் அவமானம். தயவுசெய்து யோசித்துப்பார். நன்கு ஆராயாமல் என்னைக் குற்றவாளியாக்கிவிட்டாய். ஒருவனது வாழ்விலும் தாழ்விலும் இதைத்தானே ஏற்றுக்கொண்டு இருவரும் கையெழுத்துப் போட்டோம்.

நான் வேலைவிட்டு வரும்போதெல்லாம் குழந்தையை நித்திரையாக்கிவிட்டு எதையாவது படித்துக்கொண்டிருப்பாயே. தற்காத்துத்தற் கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற குறளை நீபடிக்கவில்லையா? தன்னையும் காத்து தனது கணவனுக்கிருக்கும் நற்பெயரையும் கெடுத்துவிடாமல் பேணி, சோர்ந்துவிடாமல் இருப்பவள்தானாம் பெண்சாதி. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் என்னை நீ குற்றவாளியாக எல்லோரிடமும காட்டுவது எவ்வளவு அறிவீனம். திடீரென்று நீஎடுத்த

இந்தமுடிவால் என்ன லாபம்வரப்போகிறது? இந்த அந்நியநாட்டில் வந்து தனித்துவாழ்வது எவ்வளவு சிரமம்?

அந்தப் போலந்துக்காரி எப்படியாவது ஒரு வழிப்பண்ணி என்னைப் பழிவாங்கி விடலாமெனப் பார்க்கிறாள். மனேஜருக்கும அதுதெரியும். செய்த முறைப்பாட்டுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றுதான் எல்லோரும் என்னை விசாரிக்கிறார்கள். நீவிசயம் விளங்காமல் சும்மா என்னோடு கோபித்துக்கொண்டு போய்விட்டாய். எனக்கு அங்குவரவே வெட்கமாயிருக்கிறது. அவர்களுக்கு எனது நிலைமை விளங்காது. ஒருமாதிரியாகத்தான பார்ப்பார்கள்.

நான் பிள்ளையைப் பார்க்கவேண்டும். அதற்காக நான் இன்னொரு கேஸ்போட்டு அலையமுடியாது. தயவுசெய்து வீட்டுக்கு வந்துவிடு. இந்த வழக்கு முடியும் வரைக்கும் பொறுமையாக இரு. நான் குற்ற வாளியில்லையென்று தீர்ப்பு வரும்வரைக்கும் என்னால் சட்டப்படி வேலைக்கும் போக முடியாது. எங்காவது கள்ளமாகத்தான் வேலை செய்யவேண்டும். அதனால கொஞ்சம் பயமாக இருக்கிறது. தற்செயலாகப் பிடிபட்டால் இப்போதுள்ள படிப்பதற்கான விசாவையும் இல்லாமற் செய்துவிடுவார்கள். எனது விசா வால்தான் நீயும் லண்டன் வந்தாயென்பதை மறந்துவிடாதே. எனது விசாரத்தானால் உனக்கும் விசாவை நீடித்துத் தரமாட்டார்கள். தயவுசெய்து இதைப்புரிந்துகொள்.

நீ இதற்கெல்லாம் பயப்படாதே. தற்போ தைக்கு பதிந்து செய்தவேலையைத்தான் தொடர முடியாமல் போய்விட்டது. குடும்பத்தை ஓட்ட என்னால் முடியும். இப்போதும் கள்ளமாக வேலைசெய்ய இட மிருக்கிறது. நீபோய்விட்டதால் கொஞ்சம் நிம்மதியிழந்துபோய்விட்டேன். வேலைக்குப் போகமனமில்லாமல் இருக்கிறது.

நீயாவது அருகிலிருந்தால் எதையாவது கதைத்துப்பேசி மனமாறலாம். ஆனால் நீயும் கொண்ணர் வீட்டுக்கு ஓடிவிட்டாய். நான்தனியே இங்கிருந்துகொண்டு என்னசெய்வதென்று தெரியாமல் தவிக்கிறேன்.

யோசித்தால் தலையைச் சுற்றுகிறது. எனக்கு அடியோடு நித்திரையில்லை. ஜி.பி. (பொதுவைத்தியர்) என்னைப்பரிசோதித்துவிட்டு மன அழுத்தமிருப்பதாகவும் அதற்கு கவுன்சிலிங் (மனஅழுத்தக்குறைப்புக்கானஅறிவுரை) செய்யவேண்டுமென்றும், அங்கு போகும் படியும் கடிதம் தந்திருக்கிறார். ஒருமுறை போனேன். அங்கு வீட்டில் தனியே யோசித்துக் கொண்டிருக்காமல் வெளியில் சென்று நன்கு உலவிவிட்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். முடிந்தவரை நண்பர்கள், சொந்தக்காரர்களுடன் கதைத்து நேரத்தைப் போக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள். எனக்கு எனது பிரச்சனை முடியும் வரைக்கும் யாருடனும் கதைக்க விருப்பமில்லை. எல்லோரும் என்னைச் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கிறார்கள். உன்னோடு மட்டும்தான் மனம்விட்டுப் பேசலா மென்றால் நீயுமில்லை.

உன்னைக் கூட்டிவர என்னால் லிவர்ப்பூலுக்கு வரமுடியாது. பிள்ளையுடன் பஸ்எடுத்துவா! லண்டனுக்குக் கிட்டத்தில் வந்ததும் மொபைலில் அறிவி. எனது பழைய மொபைலைப் பொலீஸ் கொண்டுபோய்விட்டது. எனது புதுநம்பரை ரெக்ஸ்ரில் அறிவிக்கிறேன்.

அன்புடன்

செல்வா.

18-01-16

உங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் எப்படிக் கெஞ்சினாலும் நான் அங்கு வரப்போவதில்லை. நீங்களும் என்னைக் கூட்டிப்போக வரவேண்டாம். தம்பி சுகமாயிருக்கிறான். இங்கு எனக்கும் அண்ணிக்கும் ஒருபிரச்சனையுமில்லை.

இப்படிக்கு

ஜெயா

22-01-16

அன்பின்ஜெயா

உனது சுருக்கமான கடிதம் கிடைத்தது. ஆகக்குறைந்தது ஒருபதிலாவது போட்டி ருக்கிறாய். அதுவே மனதுக்கு ஆறுதலா யிருக்கிறது. அதற்கு நன்றி. தம்பியைப் பற்றியும் சுருக்கமாக எழுதி யிருக்கிறாய். அவனைப் பற்றி இவருக்கென்ன அக்கறை யென்று எழுதாமல்விடவில்லை.

தம்பி பிரளி பண்ணுகிறானா? எப்படிச் சமாளிக்கிறாய்?. இரவில் விழித்து அழும் போது மற்றவர்களுக்கு இடைஞ் சலாயி ருக்கும். "எலி வளையானாலும் தனி வளை வேண்டுமென்பார்கள்" நமது வீடு போல வருமா? வீணாகப்போய் குழந்தையோடு அங்கு நின்றுகொண்டு அலைக் கழிகிறாய். அவர்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள் அளவுக்குமீறி அவர்களைத் தொல்லைப்

படுத்துவது நல்லதல்ல. பேசாமல் பஸ்ஸேறி வந்துவிடு. விக்ரோறியாவுக்குக் கிட்டவரும் போது அறிவி. கூட்டிவர நான்வருவேன்.

அன்புடன்
செல்வா

26-01-16

தயவுசெய்து என்னை எதிர்பார்க்காதீர்கள். நான் இப்போதைக்கு வரப்போவதில்லை. உங்களுக்கும் வேலையில்லை. நானும்தம்பியும் உங்களுக்கு இன்னும்பாரம். அண்ணன் என்னைப் பேசாமல் கொஞ்சக்காலம் தன்னோடு இருக்குமாறு சொல்கிறார். அண்ணியும் அப்படித்தான் சொல்கிறா. ஆகவே நான்வரமாட்டேன். எங்களை எண்ணிக் கவலைப்படவேண்டாம். உங்கள் விடயத்தைக் கவனியுங்கள்.

அன்புடன்
ஜெயா

1-02-16

அன்பின் ஜெயா

ஏன் என்பிள்ளையை என்னிடமிருந்து பிரித்து வைத்திருக்கிறாய். அதற்கு உனக்கு உரிமையில்லை. சாதுமிரண்டால் காடு கொள்ளாது. அதை அறிந்துகொள். உனது அண்ணனுக்கு நமது குடும்பத்தைப் பிரித்து வைக்க என்ன அதிகாரம். எப்படி உன்னைத் தடுத்து வைக்கலாம். நிலைமை எல்லை மீறிப்போகிறது. நான் கடன்வாங்கிவிட்டேன் என்பதற்காக என்னைக் கிள்ளுக்கீரையாகக் கொண்ணன் மதிக்கமுடியாது.

உன்னை நான் துன்பப்படுத்தவில்லை. எந்தக் கஸ்டமும் கொடுக்கவில்லை. உன்னை யும் பிள்ளையையும் சாப்பாடில்லாமல் பட்டினி போடவில்லை. அன்போடும் பாசத்தோடும் தானே வைத்துப் பார்த்தேன். பிரச்சனை நமக்குள்ளிருந்து உருவாகவில்லை. வெளியிலி ருந்துதான் வந்தது. யாரோ தெரியாதவர் களிடமிருந்துதான் வந்தது. அதைப்பற்றி யோசிக்காமல், உன்னையும் பிள்ளையையும் என்னிடமிருந்து பிரிக்க அவர் தீர்மானித்திருப்பது சுத்தமான கழிசடைத்தனம். தனது கடனை அறவிட அவர் உங்களிருவரையும் அடைக்கல மென்ற போர்வையில் பிணைக்கைதியாக வைத்திருக்கப் பார்க்கிறார்.

நான் பொலீஸில் முறைப்பாடொன்றைக் கொடுத்து உங்களிருவரையும் மீட்பது அல்லது பிள்ளையைப்பார்க்க கோட்டில் அனுமதி பெறுவதைத்தவிர எனக்கு வேறுவழியில்லை. இதெல்லாம் வீண்செலவைத்தான் கொண்டு வரும். நமது குடும்பத்துக்குத்தான் இவைகளால் பாதிப்பு அதிகம். தேவையில்லாமற் போய்கொண்ணனிடம் மாட்டிக்கொண்ட நீதான் அங்கிருந்து விடுபட்டும் வரவேண்டும். மற்றும் படி நான் வலுக்கட்டாயமாக உன்னைவந்து இழுத்துவர முடியாது. உனது கடைசி முடிவென்ன? அதை உடனே பதிலில் தெரிவி. எனது சொலிசிட்டர்பிள்ளையையிடம் நமது பிரச்சினையைச் சொல்ல, பிள்ளையைப் பார்க்க வழக்குப்போடவேண்டுமா என்றுகேட்கிறா.

இப்படிக்கு
செல்வா

5-02-16

உங்கள் கடிதம் கிடைத்தது. ஏன் அவசர முடிவுகளை யெடுக்கிறீர்களோ தெரியவில்லை. உங்கள் பிள்ளையைப்பார்க்க நீங்கள் கோட்டுக்குப் போகத்தேவையில்லை. நான் கொண்டுவருவேன். தயவுசெய்து அண்ணன்மீது பழிசுமத்தவேண்டாம். அவருக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. என்னிடம் அவர் எதையும் விசாரிக்கவுமில்லை. திடுதிப்பென்று நான் அங்குபோய்நிற்க, ஏதோ பிரச்சனை போலிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு உங்கள் இருவரின் பிரச்சனை தீருமட்டும் இங்கே என்னோடிரு என்றுகூறிவிட்டுப் போய்விட்டார். அவர் பிரித்துவைத்துக் கூத்துப்பார்க்கும் ஆளில்லை. முடிந்தால் அவருக்கு உங்கள் பிரச்சனையைப்பற்றி ஒரு கடிதமெழுதுங்கள். அதன்பிறகு அவர் என்னசொல்கிறாரென்று பார்ப்போம்.

அன்புடன்
ஜெயா.

9-02-16

அன்பு மைத்துனர்அறிவது

திடீரென்று உங்கள் தங்கை என்னிடம் எதுவும்சொல்லாமல் ஆறுமாதக்குழந்தையையும் தூக்கிக்கொண்டு உங்கள்வீட்டுக்கு வந்து விட்டா. அவவைத் திரும்பிவரும்படிகூறி நான் எழுதிய கடிதங்களுக்குச் சாதகமான பதிலைத் தரவில்லை. உங்களுக்கு விடயத்தை விளக் கட்டுமாம். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படி செய்கிறாவாமென்கிறா.

நான் வேலைசெய்யும் ரெஸ்ராரண்ட்டில் என்னோடு வேலைபார்க்கும் போலந்துக்காரி, நான் அவளை எனது மோபைலில் இரகசியமாக நிர்வாணப் படமெடுத்ததாகப் பொலீஸில் முறைப்பாடு கொடுத்திருக்கிறாள். பொலீஸ் என்னை விசாரித்துவிட்டு எனது மொபைலை எடுத்துக்கொண்டு போய்விட்டது.

ரெஸ்ராறண்ட் மனேஜர் என்னை பாத்ரூமிலுள்ள பழுதடைந்த காற்று வெளி

யேற்றும் பம்பை மாற்றச்சொன்னான். நான் கையிலிருந்த மொபைல்போன் வெளிச்சத்தைப் பாவித்து பழைய பம்பைக் கழற்றி விட்டு புதுசைமாற்றிக் கொண்டிருந்தேன். போலந்துக்காரி வேலைமுடிந்து உடுப்பு மாற்றவந்தாள். என்னைக் கொஞ்சம் வெளியே போகுமாறு கேட்டாள். நான்காற்றுப்போகும் ஓட்டைக்குள் வைத்த மொபைலை எடுக்க மறந்து வெளியேறி விட்டேன். அவள் போனதும் நான் பாத்ரூமுக்குத் திரும்பிவந்து தொடங்கிய வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குப் போய் விட்டேன். அடுத்தநாள் பொலீஸ் ரெஸ்ராரண்டுக்கு வந்து என்னை விசாரித்துவிட்டு எனது போனையும் வாங்கிக் கொண்டு போய்விட்டது.

தற்போது போனைக்கேட்டால் அதைப் பரிசோதித்துக் கோட்டில் அறிக்கை கொடுக்க வேண்டுமென்கிறார்கள். நான் படமெதுவும் எடுக்கவில்லை. லைட்போடத்தான் போனைப் பாவித்தேனென்றால், கோட்டில் வழக்குப் போட்டாகிவிட்டது. விசாரித்து முடிவெடுத்த பிறகுதான் தரலாமென்கிறார்கள். போலந்துக்காரி நான் எடுத்த படத்தை கொப்பியெடுத்துவிட்டு அழித்திருக்கலாமென்று சந்தேகப்படுவதாகக் கூறுகிறார்கள். நிபுணர்கள் மூலம் அதை ஆராயப் போகிறார்களாம். நித்தியானந்தாக் கேஸ்மாதிரியிருக்கிறது.

எனக்கு மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை வைத்தவர்கள்தான் நிரூபிக்கவேண்டும். ஆனால் நான்பிரதிவாதி, ஒரு சட்டத்தரணிமூலம் எனதுதரப்பு அறிக்கையைத் தயார்செய்து கொடுக்கவேண்டும். சொலிசிட்டர் எனக்கு வெற்றிவரும்என்றுகூறுகிறா. எனது மனைவியின் சார்பில் ஒருநற்சான்று அறிக்கையையும், எனது அறிக்கையுடன் இணைக்கவேண்டுமாம் என்று நேற்றுச்சொன்னா.

இந்த இக்கட்டான நேரத்தில் நீங்கள் இவவை உங்களோடு வைத்திருப்பது நியாயமில்லலாதவேலை. நான் இதிலிருந்து விடுபட்டு மீண்டும் ஒழுங்காக வேலைக்குப் போனாற்தான் உங்களது கடனையும் விரைவாக அடைக்கமுடியும். தயவுசெய்து இவவையும் பிள்ளையையும் பஸ்ஸேற்றி அனுப்பிவிடுங்கள். நான் விக்ரோறியாவுக்கு வந்து கூட்டிப்போகிறேன்.

அந்தப் போலந்துக்காரி பாத்ரூமிலிருந்த போனைவைத்து என்னசெய்தாளோ தெரியாது. நான் அதைச்சரியாகப் பார்க்கவில்லை. பொலீஸ் வந்து விசாரித்தபிறகுதான் எனக்குத்தெரியும், பிரச்சனை என்னவென்று.



அவள்வேலைக்கு வந்ததிலிருந்து என்னோடு பிரச்சனை. அவள் தனக்கென்று கேட்கும் சாப்பாடுகளை நான்நெடுக அனுமதிப்பதில்லை. ஸ்டோர்பொறுப்பு என்னுடையது. விலைகூடிய சாப்பாடுகளைத்தான் செய்யச்சொல்லுவாள். வேலைசெய்வோருக்கு அதைஅனுமதித்தால் பிறகு ஸ்டாக்கில் இல்லாமற்போனால் நான்தான் முதலாளிக்குப் பொறுப்புக் கூறவேண்டுமென்று ஓரிரண்டுதடவைகள் அனுமதித்துவிட்டு பிறகு இல்லையென்று சொல்லிவிடுவேன். அதனால் என்னோடு மனேஜருட்பட பலருக்கும் கோபம். ஆனால் நானொன்றும் செய்யமுடியாது. றெஸ்ராரண்டில் வேலைசெய்பவர்கள் கேட்பதையெல்லாம் கொடுத்தால் முதலாளி என்னோடுதான் கோபிப்பார். அவர்களிடம் எதையும் காட்டிக்கொள்ளமாட்டார். அதனால் கோபம் எல்லோருக்கும் என்மீதுதான்வருகிறது.

லோயர் என்னைப் பயப்பிடவேணாமாம். கேஸ் எனக்குத்தான் வெல்லுமாம். மோபைலில அவள் தன்னத்தானே செல்பி படமெடுத்துப்போட்டு அதை இருந்த இடத்திலவச்சிருந்தால் மொபைல் நிபுணர் அதைக் கண்டுபிடிப்பாராம். இவள் ஆள் ஒருமுட்டாள் அப்பிடி அவள் செய்திருந்தால் கேஸ் அவளுக்கெதிராகத்தான் திரும்பும்.

இது எல்லோரும்சேர்ந்து செய்த கூட்டுச்சதியென்றே நினைக்கிறேன். சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி எனதுபோனை யெடுத்து அதில் சிலபடங்களையெடுத்துவிட்டு என்னில் குற்றம்சாட்டியிருக்கிறார்கள். நான்போனைப் பார்க்கவில்லை. பார்க்குமுன்பே அதைப் பொலீஸ் எடுத்துக்கொண்டுபோய்விட்டது. அதில் என்னஇருக்கிறதோ தெரியாது. அதை நினைத்தாற்தான் பயம்.

எனக்கு எப்படி இந்தச் சிக்கலிலிருந்து விடுபடுவது என்றுதெரியவில்லை. நல்லகாலம் மொபைல்போனோடு நின்றுவிட்டது. தற் செயலாக பாத்ரூமில் நான் அவளைப் பலவந்தப் படுத்தியதாகக் கூச்சல்போட்டு மனேஜரும் மற்றவர்களும் அதற்குச் சாட்சியாக வந்திருந்தால் என்னால் என்ன செய்திருக்க முடியும்.

எனது சட்டத்தரணி மனைவியிடமிருந்து ஒரு நற்சான்று அறிக்கையை கோட்டில் தாக்கல் செய்யக்கேட்கிறா. இவ இப்படி அங்கு வந்துநின்றால் நான்கோட்டில் என்னத் தைக்கூறுவது. மனைவியே நற்சான்று தரவில்லை, ஆகவே நீகுற்றவாளிதானென்று கூறி விடுவார்கள். ஆகவே தயவுசெய்து இவவையும் பிள்ளையையும் உடனே பஸ்ஸே ற்றி அனுப்பிவிடுங்கள். எனது பழையபோன் என்னிடமில்லை. புதியபோனொன்று வாங்கியி ருக்கிறேன். காசுபோட்டுத்தான் கதைக்கலாம். செலவு அதிகம். நம்பரை ரெக்ஸரில் அனுப்பு கிறேன். உங்களிடம் ப்ரீபோனிருந்தால் தொடர்பு கொள்ளவும்.

இப்படிக்கு
செல்வன்

11-02-16
டிரிங்டிரிங்டிரிங்
கலோ! யார் பேசிறியள்

கலோசெல்வன்! நான்தான் மச்சான்பேசுறன். உங்கடகடிதம்கிடைச்சுது.

ங்ஆ சொல்லுங்கோ!

நாளைக்கு எனக்குலீவு! தங்கச்சியைக் கூட்டிக்கொண்டுவாரன். நீங்கள் விக்ரோறி யாவுக்கு வரத்தேவையில்ல.. என்னடாப்பா நான் ஏதோ பிள்ளையையும் தாயையும் பிணைக்குப் பிடிச்சுவச்சிருக்கிறனெண்டு குற்றஞ்சாட்டுறியள். நான் அப்பிடியென்ன கேவலங்கெட்ட ஆளே!

“இல்லையடாப்பா! இவ அங்க சொல்லாமக் கொள்ளாம ஓடிவந்திற்றா. எனக்கும் கடுப்பாப் போட்டுது. அப்பிடி எழுதி விட்டுட்டன் குறையெடுக்காதீங்கோ! அதை உங்க சொல்லிப் போட்டாவே!

சரிசரி அதுபிரச்சினையில்ல. லோயருக்குக் குடுக்கக்காசுஇருக்கே!

“இப்போதைக்குக் கட்டவேண்டியதக் கட்டிப் போட்டன். வழக்குவென்றால் தேவை யில்லை. தோற்றால் அப்பீல்பண்ணத் தேவைப் படலாம். அதையும் நான்சமாளிப்பன். நீங்கள் உவவையும் பிள்ளையையும் கூட்டிக் கொண்டுவாங்கே! ஏலுமெண்டால் அக்காவை யும் கூட்டிக்கொண்டுவாங்கோ!”

லோயர்என்னசொல்கிறா?

லோயர் என்னைப் பயப்பிடவேணாமாம். கேஸ் எனக்குத்தான் வெல்லுமாம். மோபை லில் அவள் தன்னத்தானே செல்பி படமெடுத்துப்போட்டு அதை இருந்த இடத்திலவச்சிருந்தால் மொபைல் நிபுணர் அதைக் கண்டுபிடிப்பாராம். இவள் ஆள் ஒருமுட்டாள் அப்பிடி அவள் செய்திருந்தால் கேஸ் அவளுக்கெதிராகத்தான் திரும்பும். அதால கொஞ்சம் மனநிம்மதியோட இருக்கிறன். இவவுட்ட அதச்சொல்லுங்கோ. அவவும் கவலையோட இருப்பா. கொஞ்சம் ஆறுதலா இருக்கும்.

“சரிசெல்வன். சொல்லுறன். அப்ப நான்வைக்கிறன். ஒண்டுக்கும் யோசிக்க வேணாம். பிள்ளையளக் கூட்டிவாறன். வந்துகதைப்பம்.”

– முற்றும் –

ooo

ஈழத்து இலக்கிய மரபின் இன்றைய நிலை

ஈழத்தமிழ் இலக்கியமானது, புகலிடத் தேசியத் தமிழ் இலக்கியத்தினூடாக உலகத் தமிழ் இலக்கியம் என்ற பரிமாணத்தை எய்தியுள்ளது

(04-06-2016 அன்று கன்பரா இலக்கிய வட்டமும் அவுஸ்திரேலியா தமிழ் இலக்கியச்சங்கமும் இணைந்து நடத்திய விழாவில் ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரனது கௌரவிப்பு நிகழ்வின்போது ஆற்றிய உரை)

இந்தத் தலைப்பு பரந்துபட்ட ஈழத்து இலக்கிய வளர்சிப்போக்கினை உள்ளடக்கியது. எனக்குத் தரப்பட்ட 30 நிமிடத்தில் இதனை அடக்குவது என்பது இலகுவான காரியமல்ல.

ஈழத்து இலக்கிய வரலாறு 2000 ஆண்டுக்கும் மேற்பட்ட காலப் பரப்பினைக் கொண்டது என்பதை பழந்தமிழ் இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன.

ஈழத்துப் பூதந்தேவனார் ஈழத்துக்குரிய தனி அடையாளத்தை வழங்கிய முதல் புலவராவார். இவரது ஏழு பாடல்கள் சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றன.

அதன்பின்னர் ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஒரு நீண்ட இடைவெளி காணப்படுகிறது.

தற்போது ஈழத்திலே கிடைக்கின்ற பழைய நூல் போசராசப் பண்டிதர் எழுதிய சரசோதிமாலை என்ற சோதிட நூல் ஆகும். இது கி. பி. 1309ல் வெளிவந்தது.

15 ஆம் நூற்றாண்டிலே நான்காவது தமிழ்ச் சங்கத்தை யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கள் அமைத்தார்கள்.

யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் காவியம், சோதிடம், வைத்தியம், வரலாறு, தல புராணங்கள், பள்ளு, உலா, மொழிபெயர்ப்பு எனப் பல்வகை நூல்கள் எழுந்துள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பெரும் பாய்ச்சல் நிகழ்ந்துள்ளதைக் காணலாம்.

தமிழ்மொழிபற்றிய தேடல்களும் ஆய்வுகளும் மேல்நாட்டார் வருகையின்பின் தொடங்கின. செய்யுள் மரபு கைவிடப்பட்டு உரைநடை மரபு செல்வாக்குப் பெற்றது.

அச்சு இயந்திரத்தின் வருகை தமிழ் இலக்கியங்கள் நூல்பெற உதவின.

ஈழநாட்டில் இடம்பெற்ற இலக்கிய முயற்சிகளை சில புலவர்கள் அக்காலத்தில் பதிவு செய்தனர்.

தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழ்வளர்த்து ஈழத்துக்குப் புகழ்தேடித் தந்தவர்கள் ஏறத்தாழ 20 பேர் உள்ளார்கள். இவர்கள் செய்யுள் நூலாக்கம், உரைநடை நூலாக்கம், உரை நூலாக்கம், நூற்பதிப்பு, மொழிபெயர்ப்பு நூலாக்கம், தமிழ்ச்சொல் அகராதி நூலாக்கம் ஆகிய பணிகளைச் செய்துள்ளனர்.

ஈழத்து நவீன தமிழ் இலக்கியம்

மங்களநாயகம் தம்பையா எழுதிய ஈழத்தின் முதல் தமிழ் நாவல் நொறுங்குண்ட இதயம் 1914ல் வெளியாகியது. ஈழத்து நவீன இலக்கியம் 1930 களிலிருந்து உணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது எனலாம்.

- தி. ஞானசேகரன்

மறுமலர்ச்சி ஈழத்தின் முதலாவது நவீன இலக்கிய சஞ்சிகை.

"முற்போக்கு இலக்கியம் இவ்வளவு மிகச் செழிப்பாகத் தொடங்கி வளர்வதற்கு காரணமாக இருந்தது ஏற்கனவே இருந்த சூழல். அந்தச்சூழல் மறுமலர்ச்சி இயக்கத்துக்குள்ளால் வந்தது. ஈழத்தின் தன்மைகளைக் கொண்டு இலக்கியம் வளருகின்ற ஒரு தன்மையைக் காண்கிறோம்" எனப் பேராசிரியர் சிவத்தம்பி ஞானம் சஞ்சிகைக்கு அளித்த நேர்காணல் ஒன்றிலே குறிப்பிட்டுள்ளார்.

1956ல் சோஷலிச அரசாங்கம் பதவிக்கு வந்தது.

மார்க்சியக் கோட்பாட்டுடன் இலக்கியம் படைத்தல் அறிமுகமாகி வளர்ச்சி பெற்றது.

இதன் பிதாமகர்களாக பேராசிரியர்கள், கைலாசபதி சிவத்தம்பி ஆகியோர் விளங்கினர்.

நமது நாட்டுக்கே உரிய இலக்கியம் மண்வாசனையுடன் நமது மொழியில் படைக்கப்படவேண்டும் என்ற கருத்து முனைப்புப் பெற்றது.

வர்க்கம், சாதியம், இலங்கைத் தேசியம் போன்றவை கருத்தியல் அடிப்படையில் முக்கியத்துவம் பெற்றன.

இதனை முற்போக்கு இலக்கியம் என்றனர்.

ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தொடங்கிய பின்னர் ஈழத்து இலக்கியச் செல்நெறியில் மாற்றம் ஏற்பட்டது. இக்கால கட்டத்தை 'தமிழ்த் தேசிய உணர்வுக் காலகட்டம்' எனச் செங்கை ஆழியான், பேராசிரியர் சிவத்தம்பி முதலியோர் குறிப்பிட்டுள்ளனர்.

இக்காலகட்டத்தில் போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் ஆகிய புதுவகை இலக்கியங்கள் தோன்றின.

உள்நாட்டில் போர் இலக்கியங்கள் உருவாகியபோது, புலம் சிதறிச் சென்ற இலங்கையர்கள் புலம்பெயர் இலக்கியங்ளைப் படைத்தனர்.

'போர் இலக்கியம்' என்ற பகுப்புமுறை முதலாம் உலக மகாயுத்தத்திலிருந்தே ஆரம்பமாகியது எனலாம்.

ஏனஸ்ற் எமிங்வே எழுதிய
'போரே நீ போ' (FAREWELL TO THE ARMS)
'யாருக்காக மணி அடிக்கிறது? (FOR WHOM THE BELL TOLLES)

போன்ற நாவல்கள் உலக அரங்கில் போர் இலக்கியங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

போர் இலக்கியத்தின் முக்கிய பரிமாணம் அதன் ஆவணத் தன்மையாகும்.

அவை போரின் சாட்சியங்கள் ஆக விளங்குகின்றன.

போர் இலக்கியத்தின் பண்புகள்
(WAR LITERATURE)

- Ø நிகழ்வுளை ஆவணப்படுத்தல்
- Ø போர்ச் சூழலை ஆவணப்படுத்தல்
- Ø மனித அவலங்கள்
- Ø போர்க்களம்
- Ø பெண் போராளிகளின் படைப்புக்கள்
- Ø உளத்தாக்கங்களை வெளிப்படுத்தல்
- Ø பாலியல் வன்முறைகள்
- Ø அகதி வாழ்க்கை
- Ø இடப்பெயர்வு
- Ø எதிர்ப்பு இலக்கியங்கள் போன்றனவாகும்

தற்போது போர் முடிந்து பல வருடங்கள் ஆகிவிட்டன.

ஈழத்து இலக்கியச் செல்நெறியின் இன்றைய நிலை

போருக்குப்பின்னரான இலக்கியம்
(POST WAR LITERATURE)

உலக அரங்கில் போர்முடிந்த பின்னர் போரினால் ஏற்பட்ட பாதிப்புகளை விபரிக்கும் இலக்கியங்கள் பல வெளிவந்துள்ளன. இத்தகைய இலக்கியங்களில் வியட்னாம் யுத்தத்திற்குப்பின்னர் வெளிவந்த இலக்கியங்கள் முக்கியமானவை. THE SARROW OF WAR என்ற நாவல் வட வியட்னாம் போராளியால் எழுதப்பட்டது. VIETNAM: THE TEN THOUSAND DAY WAR என்ற நாவல் MAC LEAR என்பவரால் எழுதப்பட்டது. 2001ல் THE GIRL IN THE PICTURE வியட்னாம் போரில் அகப்பட்டு குண்டுத்தாக்குதலினால் எரிகாயங்களுடன் உடம்பிலே உடுப்புகள் ஏதுமின்றி ஓடிவரும் 7 வயதுச் சிறுமி பற்றிய நாவல். அவள் ஓடிவரும் காட்சியை உலகு எங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் TELE VISION இல் பார்த்தார்கள். அதன்பின்னர் மேற்குலக மக்களின் அபிப்பிராயம் போருக்கெதிராக மாறியது. போர்நிறுத்தப்பட்டது.

போருக்குப்பின்னரான இலக்கியங்கள் மக்களின் மனச் சாட்சியைத்தூண்டி போரினால்

சீரழிந்த நாட்டை சமூகத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்து கின்றன.

நமது நாட்டிலும் போருக்குப்பின்னரான பாதிப்புகள், அவல நிலைகள் குறித்த இலக்கியங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

தற்போது எவ்வித சுய தணிக்கைகள் எதுவுமின்றி தமது படைப்புகளை எழுதக் கூடய சூழ்நிலை அங்கு உள்ளது. போரில் இடம்பெற்ற தவறுகளை விமர்சிக்கும் எழுத்துக்கள் வருகின்றன. போராளிகள் சிலர் வெளிப்படையான தமது எண்ணங்களை எழுதுகின்றனர்.

அகதி நிலை, சிறை வாழ்க்கை, கணவன்மார்களை இழந்த கைம்பெண்கள், தாய்தந்தையரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த தாய்தந்தையர், ஊனமுற்ற போராளிகளின் வாழ்க்கைப் போராட்டம், போராளிப் பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சொந்த நிலங்களை இழந்து பிறிதோர் இடத்தில் வாழ நேரிடும் அவலம், இராணுவப்பிரசன்னம், போரின் பின்னர் சமூகத்தில் ஏற்படும் சமூகச் சீரழிவு, பண்பாட்டுச் சீரழிவு போன்றவை இன்றைய ஈழத்து இலக்கியச் செல்நெறியின் பாடு பொருளாகியுள்ளன. இவை போருக்குப்பின்னரான இலக்கியங்கள்.

ஏராளமான சிறுகதைகளும் கவிதைகளும் சிலநாவல்களும் வெளிவந்துள்ளன.

குறிப்பாக அதிக கவிதைத் தொகுதிகள் போருக்குப் பின்னரரான விடயப் பரப்பைக் கொண்ட தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

கருணாகரன் யுத்தகளத்தில் போராளியாக இருந்தவர். தற்போது அவரது அந்த நிலைமை மாறி போரின் சரி பிழைகளை விமர்சிக்கும் கவிதைகளை எழுதிவருகிறார். யுத்தம் பற்றிய சிறந்த ஆவணமாக இவரது பலி ஆடு, எதுவுமல்ல இதுவும் போன்றவை திகழ்கின்றன.

தீபச்செல்வனின் பதுங்குகுழியில் பிறந்த குழந்தை, கிளிநொச்சி – போர்தின்ற நகரம், பாழ்நகரத்தின் பொழுது ஆகியவை முக்கியமான தொகுதிகள்.

கி. பி. நிதுன் எழுதிய துயரக்கடல் தொகுதியில் யுத்தம் இடம்பெற்றபோது முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் பட்ட அவலங்கள், இழப்புகள், போருக்குப்பின்னான முகாம் வாழ்க்கை, மீள் குடியேற்றம் போன்றவை பாடுபொருளாயுள்ளன.

சேரனின் காட்டாற்று ஒரு முக்கியமான தொகுதி.

2010ல் குட்டி ரேவதியால் தொகுக்கப்பட்ட 'முள்ளிவாய்க்காலுக்குப் பின்' முக்கியமான ஒரு தொகுதி.

சித்தாந்தனின் துரத்தும் நிழல்களின் யுகம் இறுதி யுத்தம்பற்றிய சிறந்ததொரு ஆவணமாகத் திகழ்கிறது.

மன்னார் பெனில் எழுதிய ஈரநிலத்தை எதிர்பார்த்து என்ற தொகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், மாவீரர் இல்லங்கள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டமை தொடர்பான கவிதைகளும் அடங்கியுள்ளன.

நிலாந்தனின் யுகபுராணம், குணேஸ்வரனின் 'மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்' பெரிய ஐங்கரனின் கறுப்பு மழை, கு. றஜீபனின் பேசற்க தொகுதிகள் மற்றும்

த. அஜந்தகுமார், யாத்திரீகன், செ.சுதர்சன், இ. சு. முரளிதரன், ஐ. வரதராசன், பெ.கை. சரவணன், த. ஜேயசீலன், ஸ்ரீபிரசாந்தன், ந.சத்தியசீலன், றஷ்மி, அ. யேசுராசா, வே. குமாரசாமி, சோ. பத்மநாதன், ந. சத்தியபாலன், வெற்றி துஷ்யந்தன், மருதம் கேதீஸ், மகாலிங்கசிவம், கோகுலராகவன், புலோலியூர் வேல்நந்தன், அல்வாயூர் சிவநேசன், பா. அகிலன், தானா விஷ்ணு, ந. மயூரரூபன், போன்றோரின் கவிதைகள் பல போருக்குப் பின்னரான அவலங்களைச் சித்திரிக்கும் கவிதைகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

போருக்குப் பின்னரான சிறுகதைகளை அடக்கிய தொகுதிகள் பலவும் வெளிவந்துள்ளன. கடவுளின் மரணம் கருணை ரவி என்பவர் எழுதியது. போர்நடைபெறும் களத்தில் இடம்பெறும் கதைகள் சிலவும் இத்தொகுதில் அடங்கியுள்ளன. போரின் மூலத்தையும் அதன் இயங்கு தளங்களையும் நுட்பமாகத் தெரிவிக்கும் கதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

யோ. கரணன் போராளியாக இருந்தவர். இவர் எழுதிய சேகுவேரா இருந்த வீடு சிறுகதைத் தெகுதியில் 13 கதைகள் உள்ளன. அவற்றில் இரண்டு கதைகளைத் தவிர்ந்த ஏனைய கதைகள், இறுதி யுத்தத்தையும் முள்ளிவாய்க்காலையும், முள்ளுவேலி முகாமையும் புனர்வாழ்வையும் அவற்றுக்குள் அகப்பட்ட மக்களின் துன்பங்களையும் பேசுகின்றன. சில போராளிகளை மக்கள்

எதிர்கொண்ட வரலாற்றையும் மக்கள் இறுதி யுத்தத்தில் அனுபவித்த கொடுமைகளையும் பேசும் கதைகள்.

வன்னிவலி இரா உதயணன் எழுதிய சிறுகதைகள் அடங்கிய தொகுதி. போருக்குப்பின்னரான இழப்பின் துயரங்களும் உளநெருக்கீடுகளும் சுரண்டல்களும் இலக்கிய வெளிக்குக் கொண்டுவரப்படுகின்றன.

இவர்களைவிட இராகவன், மருதம் கேதீஸ், சித்தாந்தன், இராஜேஸ்கண்ணன், சீனா உதயகுமார், தாட்சாயணி, சாரங்கா, விஷ்ணுவர்த்தனி, இயல்வாணன், தெணியான், குப்பிழான் ஐ. சண்முகன், நந்தினி சேவியர், குந்தவை, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சட்டநாதன், கே. ஆர் டேவிட், த. கலாமணி, அநாதரட்சகன், கொற்றை பி. கிருஷ்ணானந்தன், மு. பொன்னம்பலம், சூசை எட்வேட் ஷெல்லிதாசன், வி.என். சந்திரகாந்தி ஆகியோர் அவ்வப்போது போருக்குப்பின்னரான அவலங்களைக் கதைகளாக வெளிக்கொணர்கின்றனர்.

போருக்குப்பின்னரான நாவல்கள் என்று பார்க்கும்போது தமிழ்க்கவியின் ஊழிக்காலம் நாவல் முக்கியமானது.

குணா கவியழகன் 20 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறையில் வாடியவர். இவரது முதலாவது நாவல் நஞ்சுண்டகாடு. தன் இன மக்களால் மீட்பர்களாக, போரளிகளாக மதிக்கப்பட்டு உலகத்தால் பயங்கரவாதி என முத்திரை குத்தப்பட்டு, எதிரியால் கைதியாக்கப்பட்டு வெவ்வேறு நிலைகளில் தத்தளிக்கும் போராளிகளை கதாபாத்திரங்களாக்கியுள்ளார். போருக்குப்பின்னரான போராளிகளின் பாடுகளே இந்நாவலின் பாடுபொருள்.

இவரது இன்னுமொரு நாவலான விடமேறிய கனவு போராளியாக போராடவந்தவர்கள் தொடக்கம் கட்டாய ஆட்சேர்ப்பில் போராளிகளாக் கப்பட்டவர்கள் வரை சிறைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டவர்களின் கதை.

சிவ ஆரூரன் என்ற சிவலிங்கம் ஒரு பொறியியல் பட்டதாரி. மெகசீன் சிறையில் 9 வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் எழுதிய யாழிசை நாவல் முன்னாள் பெண் போராளிகளின் வாழ்க்கை நிலைமைகளைச் சித்திரிக்கிறது. இந்தப்பெண்கள் சமூகத்தில் படுகின்ற துன்பங்களையும் கஷ்டங்களையும் கதையினூடாக காட்டிச் செல்கிறார்.

இத்தகைய சில நாவல்கள் சமீபகாலமாக புலம்பெயர் நாடுகளிலிருந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் சயந்தனின் ஆறாவடு ஒரு முக்கிய நாவல். சயந்தன் தற்போது சுவிஸ் நாட்டில் வாழ்கிறார். இந்த நாவல் எதிர்ப்பு அரசியல் பேசுவதாகவும் ஒரு விமர்சனம் வைக்கப்பட்டுள்ளது. ஷோபாசக்தியின் BOX, இரா. உதயணன் எழுதிய பனிமலர் மற்றும் சமீபத்தில் வெளிவந்த வலியின் சுமைகள் தமிழினி ஜெயக்குமாரன் எழுதிய கூர்வாளின் நிழல் (சுயசரிதை)போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன.

சிறுகதைகளைப்பொறுத்தவரை கே. எஸ். சுதாகர் கற்றுக்கொள்வதற்கு என்ற சிறுகதையை எழுதியுள்ளார். கதை வியட்நாமில் நடைபெறுகிறது. நூஜ்ஜின் வியட்நாம் நாட்டவன் அவுஸ்திரேலியாவில் வேலை செய்கிறான். அவன் தனது நாட்டுக்கு ஸ்ரீலங்கா நண்பனை அழைத்துச் செல்கிறான். வியட்நாமியரின் தோற்றம் பழக்க வழக்கங்கள் கதையில் விபரிக்கப்படுகின்றன. அமெரிக்கர்களின் வியட்நாம் போர் ஆங்காங்கே ஈழப்போருடன் ஒப்பிடப்படுகிறது. நூஜ்ஜின் தந்தை ஒரு விவசாயி. ஒரு போராளி. எங்கள் நாட்டுப் பிரச்சினையும் கிட்டத்தட்ட வியட்னாமின் பிரச்சினைக்கு ஒப்பானதுதான்.

“வெளியிலிருந்து பார்ப்பவர்கள் போர்முடிந்து விட்டது என்றுதான் சொல்வார்கள். ஆனால் போர் அதற்குப்பிறகுதான் ஆரம்பமாகிறது. எங்கள் நாட்டைக்கட்டி எழுப்ப வேண்டும்.” எனக்கூறும் நூஜ்ஜின் அதற்காக உழைக்கிறான். தனது நாட்டிலும் அவுஸ்திரேலியாவிலும் உழைக்கிறான்.

இக்கதையில் நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல, போரின் பின்னரான சமூகப்பிரச்சினைகளில் ஒன்றான விதவையாகிப் போனவர்களின் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும் என்ற சிந்தனையும் எழுப்பப்படுகிறது.

வி. ஜீவகுமாரன் தவம் என்றொரு கதை எழுதியிருக்கிறார். அக்கதையில் ஜேர்மனியில் வாழும் தந்தை தனது மகனைப் போருக்கு அனுப்பிவிட்டு போர்முடிந்த நிலையில் அவரது மகன் சிறையில் இருக்கிறான் என்ற நம்பிக்கையில் அவன் வரும்வரை சோறு சாப்பிடுவதில்லை என்று சபதம் எடுத்து மரக்கறிகளை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நிலை விபரிக்கப்படுகிறது. மேலும் இக்கதையில்

மூன்றாம் தரம் படிக்கும் போது போர் நிறுத்த காலத்தில்....

ஆ.முல்லை திவ்யன்

வள்ளிபுனத்து சந்திக்கு
அருகில் நின்ற புளியமரத்துக்குகீழே
ஒடிப்பிடிச்சு கிளித்தட்டு
விளையாடினது
இன்னும் ஞாபகமாய்....

சின்னாத்தங்காட்டு
ஆற்றில நீச்சல் போட்டு
அடிவேகத்தை அள்ளியாந்து
யூதாகோயில்ல மெழுகுவர்த்தி
கொழுத்தி கும்பிட்டது
இன்னும் மனசுல யேசுபிரானின்
ஒளிக்கதிராய்....

கனகம்மா ஆச்சியின்ர தோட்டத்து மாங்காய்ய
திருட்டுத்தனமா ஆய்ஞ்சு
உப்பு மிளகாய்த்தூளை
மாங்காய்யில தடவி
நறுக்கென்டு கடிச்ச ருசி
இன்னும் உள் நாக்கில ஒட்டிக்கிடக்கு

பாலை மரம் ஏறி காலால உலுப்பிவிட
விழுந்த பழங்களை பொறுக்கி
தின்றதுவும் முள்ளியவளை தண்ணீர் ஊற்றுத்
தண்ணியை குடிச்சதுவும்
சக்கரையா இனிச்சதுவும்
இன்னும் தொண்டைக்குள்ள
ஈரமாக்கிடக்கு....

போர் நிறுத்தம்
முடிஞ்சு போய்
பாய் பெட்டிகளோட
அப்பாவின் சைக்கிள்
இருக்கையில் அமர்ந்து

சைக்கிளில் கொழுவியிருந்த
வானொலிப் பெட்டியில் ஒலித்த கம்பீரமான
குரலை கேட்டபடி
முல்லை வீதியில்
பயணித்ததுவும் இப்போதும்
மனதிடையே....

அழியாத
ஞாபகங்களாய்.....

தனது மகனை சிறை மீட்டுத் தருவதாகக் கூறும் இடைத்தரகர்களின் பணம்பறிக்கும் தில்லு முல்லுகளும் விபரிக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் இலக்கியம்

போர்காரணமாக உள்நாட்டில் இருப்பது பாதுகாப்பில்லை என்று அஞ்சி பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றவர்கள் தமது நாட்டினைப் பிரிந்த ஏக்கத்தினையும் சென்றடைந்த நாடுகளில் தமக்கு ஏற்பட்ட துன்பம் நிறைந்த அனுபவங்களையும் பதிவு செய்யும் இலக்கியங்கள் புலம்பெயர் இலக்கியம்.

இவர்கள் படைக்கும் இலக்கியங்கள் DIASPORA LITERATURE என்று வழங்கப்பட்டது. இதனையே தமிழில் புலம்பெயர் இலக்கியம் என்றனர்.

பாரம்பரிய மண்ணிலிருந்து வேருடன் பிடுங்கி எறியப்பட்டவர்கள் படைத்த இலக்கியம்.

இது ஈழத்தமிழ் இலக்கியத்தின் நீட்சி எனக்கொள்ளலாம். எவ்வித சுய தணிக்கை களுமின்றி சுதந்திரமாக புலம்பெயர் இலக்கிய வாதிகள் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

புலம்பெயர் இலக்கியத்தின் நிலை மாற்றம்

புலம் பெயர் இலக்கியம் என்ற அடையாளப்படுத்தல் உருவான காலப்பகுதியில் இருந்த சூழல் இன்று இல்லை. ஆயுதப் போராட்டச் சூழல் முடிவுக்கு வந்து விட்டது.

பலநாடுகளிலும் புகலடைந்தவர்கள் அங்கு காலூன்றி நிலைத்துவிட்டார்கள். இவர்களுக்கு அறிவு விருத்தி, அனுபவ விசாலம், தொழில் நுட்பத்தேர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி, கலாசாரப்புரிந்துணர்வு முதலியன ஏற்பட்டுள்ளன. இவற்றிற்கு ஏற்ப படைப்புகளின் உள்ளடக்க அம்சங்கள் மாற்றம் பெறத் தொடங்கிவருகின்றன.

புலம்பெயர் இலக்கியம் டயஸ்போறா என்பதன் அடையாளத்துடன் தொடர்வதற்கான சூழல் இன்றில்லை.

இலக்கியங்கள் தேசிய புவியியல் பண்பாடு மற்றும் வாழ்வியல் அமைவுகளுக்கு ஏற்ப பெயர்கொண்டு சுட்டும் மரபே வழக்காக இருந்து வந்திருக்கிறது.

இந்நிலையில் புலம்பெயர் தமிழர்கள் பெருந்தொகையாக வாழ்கின்ற கனடா, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பிய

நாடுகள் ஆகியவற்றின் புவிச் சூழல்களை மையப்படுத்திய எழுத்துக்கள் அந்தந்த நாடுகளின் அனுபவங்களின் பதிவாக அமைவதைக்காண முடிகிறது. இவற்றை அடையாளப்படுத்த அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கியம், ஐரோப்பியத் தமிழ் இலக்கியம், வட அமெரிக்கத் தமிழ் இலக்கியம், கனடியத் தமிழ் இலக்கியம் முதலிய தொடர்களைப் பயன்படுத்துவதே பொருத்தமாயுள்ளது.

உதாரணமாகக் கூறுவதானால் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து மலேசியா சென்றவர்கள் அங்குள்ள சூழலை மையப்படுத்தி படைக்கும் இலக்கியங்கள் மலேசிய இலக்கியம் என்று கூறப்படுவதுபோல, தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து சிங்கப்பூரில் இலக்கியம் படைப்பவர்களின் இலக்கியங்கள் சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் எனக் கூறப்படுவதுபோல, தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றவர்கள் படைக்கும் இலக்கியங்கள் இலங்கை மலையகத் தமிழ் இலக்கியம் எனச் சுட்டப்படுவதுபோல புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் தாம் சென்றடைந்த நாடுகளின் புவிச்சூழலுக்கும், அங்கு தமது சமகால வாழ்வியல் அனுபவங்களுக்கும் அமையப் படைக்கும் இலக்கியங்கள் அந்த அந்த நாட்டின் தமிழ் இலக்கியம் என்று சுட்டப்படுவதே சரியானது.

உலகத்தமிழ் இலக்கியம்

தற்போது அடுத்த கட்டமாக தமிழ் இலக்கியப் பரப்பானது உலகத்தமிழ் இலக்கியம் என்ற பொதுஅடையாளத்தைப் பெற்றுவிடுவதற்கான சாத்தியப்பாடுகளையும் காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு நாட்டின் தேசிய புவியியல் பண்பாடு மற்றும் அங்குள்ள வாழ்வியல் அமைவுகளையும் தாண்டி இலக்கியங்கள் புலம்பெயர் நாடுகளில் படைக்கப்படுவதைக் காண்கிறோம்.

இந்நிலையில் அ.முத்துலிங்கம் மற்றும் ஆசி கந்தராஜா போன்றோர் தமது தொழில் நிமித்தம் தாம் பன்னாடுகளிலும் பெற்ற அனுபவங்களை தமிழ் உலகுக்கு கொண்டுவருகின்றனர். இது சமகால தமிழ் இலக்கிய உலகுக்குப் புதிய பரிமாணங்களைத் தருகின்றது. அ. முத்துலிங்கத்தின் எழுத்துக்கள் யாவற்றையும் கனடியத் தமிழ் இலக்கியம் என்ற பரப்புக்குள் அடக்கிவிடமுடியாது. அதுபோல ஆசி கந்தராஜாவின் படைப்புகள் யாவற்றையும் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கியப்பரப்புக்குள் அடக்கிவிட முடியாத நிலை உள்ளது.

அ. முத்துலிங்கம் பூகோள ரீதியாக இடத்துக்கு இடம் மாறுபடும் மொழி இனம் நிறம், உணவுப்பழக்கங்கள், சடங்குகள், சமய வழிபாடுகள், போன்ற இயல்பான வேறுபாடுகளினால் உருவாகும் முரண் தன்மைகளைப் பதிவு செய்கிறார். வம்சவிருத்தி என்ற சிறுகதைத் தொகுதியில் இந்தியா, சூடான், பாகிஸ்தான், சியராலியோன், சுவீடன், அமெரிக்கா கதைக் களங்களாகின்றன.

ஆசி. கந்தராஜாவின் சிறுகதைகள் சிலவும் உலகத்தமிழ் இலக்கியம் என்ற வகைமைக்குள் வரக்கூடியன. ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழில் அவரது தலைமுறை தாண்டிய காயங்கள் கதை முதலாவது கதையாக அமைந்துள்ளது.

இங்கே அவுஸ்திரேலியாவில் வாழும் ஆசி கந்தராஜா லெபனான் பல்கலைக்கழகப் பின்னணியில் கதையை நகர்த்தி ஆர்மேனியர்களின் வரலாற்றை விபரித்து அதனை ஈழத்தமிழர் போராட்டத்துடன் இணைத்து கதையைப் பின்னியிருக்கிறார்.

இக்கதை அவுஸ்திரேலியாவின் தமிழ் இலக்கியத்தில் அல்ல உலகத் தமிழ் இலக்கியத்தில் அடங்கவேண்டிய சிறுகதை.

இன்று உலகளாவிய ரீதியில் போரின் பாதிப்புகள் இருக்கின்றன. நான் குறிப்பிட்ட சில கதைகள் உலகத் தளத்திலிருந்து போரின் பின்விளைவுகள் பற்றியும் அவை தீர்க்கப்படவேண்டிய முறைமை பற்றியும் பேசுகின்றன.

ஜேர்மன் எழுத்தாளர் பார்த்திபன் எழுதிய தெரியவராதது சிறுகதையில் ஜேர்மனியில் தஞ்சமடைந்த பாலகிருஷ்ணன் தொழில்கஷ்டம் போதிய சம்பளம் கொடுக்கப்படாமை காரணமாக கனடா செல்ல முயற்சிக்கிறான். பலமுறை முயன்று கைதாகி பின்னும் ஆசை தீராது அமெரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர் பிலிப் என்பவரின் அடையாளத்துடன்கூடிய பாஸ்போட் தயாரித்து பிராங்போட் எயர்போட்டில் ஏறி பயணம் செய்த விமானம் லண்டனில் தரித்து மீண்டும் பறந்தபோது ஆகாயத்தில் வெடித்துச் சிதறி பரிதாபமாக மரணம் அடைகிறான்.

இத்தகைய கதைகள் உலகத்தமிழ் இலக்கியம் என்ற வகைமைக்குள் வைத்துப் பார்க்கப்படவேண்டியன. இத்தகைய

கதைகள் வேறு சில எழுத்தாளர்களாலும் எழுதப்பட்டுள்ளன. நேரக்கட்டுப்பாடு கருதி அவற்றை என்னால் இங்கு விபரிக்க முடியவில்லை.

நாவல்களைப் பொறுத்தவரையில் நடேசனின் அசோகனின் வைத்தியசாலை உலகத்தமிழ் இலக்கியம் என்ற வகைமைக்குள் வைத்து நோக்கப்பட வேண்டியது.

அசோக மன்னர் மிருகங்களுக்காக ஒரு வைத்தியசாலையை அமைத்தார் என்பது வரலாறு. ஓர் அம்மையார் தர்மத்துக்கு அமைத்த வைத்திய சாலையில் சிவாவின் அனுபவங்களாக இந்த நாவல் விரிகிறது.

மிருகங்களின் நோயுலகத்துக்கு சமாந்தரமாக அந்த வைத்தியசாலையின் ஊழியர்களின் பலதரப்பட்ட இயங்கு நிலைகள் இந்தநாவலில் பரந்து செல்கின்றன. இவர்களின் வாழ்க்கைப் பின்புலத்தை இவர்களது வரலாற்றை விளக்கிச்செல்கிறது நாவல். அராபியர்கள், சீனர்கள், ஐரோப்பியர்கள் இந்த நாவலின் மாந்தர்களாகின்றனர். இந்தக் கதாமாந்தர்களின் பண்பாட்டுக் கோலங்கள் சங்கமித்து உருவாகும் ஒரு கலவைப் பண்பாட்டின் தரிசனத்தை இந்த நாவலில் காணமுடிகிறது. ஒரு அந்நிய நாட்டின் சமூக இயங்கியல் பண்பாடு ஆகியவை மிக நேர்த்தியாக விவரணம் ஆகின்றன.

இந்த நாவல் புதுமையானது வழக்கமான தமிழ் நாவல் இலக்கியப் போக்கிலிருந்து மாறுபட்டது.

இத்தகைய உலகத் தமிழ் இலக்கியம் என்று சுட்டக்கூடிய நாவல்களாக ஷோபாசக்தியின் BOX, தேவகாந்தனின் கனவுச்சிறை, நோர்வே இ.தியாகலிங்கத்தின் திரிபு, கருணாகரமூர்த்தியின் பெர்லின் நினைவுகள், ஜீவகுமாரனின் கடவுச்சீட்டு, விமல் குழந்தைவேலின் வெள்ளாவி, கஜகறணம், மாத்தளை சோமுவின் நான்காவது உலகம் மற்றும் பார்த்திபன், வ.ந கிரிதரன், அகில், குரு அரவிந்தன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் நாவல்கள் சிலவற்றில் உலகத்தமிழ் இலக்கியம் சார்ந்த பார்வைகள் உள்ளன.

இலங்கையில் வாழும் எனக்கு முழுமையாகப் புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களின் படைப்புகள் யாவும் கிடைப்பதில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். எனவே இங்கு நான் குறிப்பிட்ட பட்டியல் முழுமையானதல்ல.

வெளியீட்டுத் தளங்கள்

அச்சு ஊடகத்திலிருந்து படைப்பிலக்கியத்தின் பிரசுரகளத்தை மின்னியல் ஊடகத்துக்கு மாற்றிய பெருமை புலம்பெயர் தமிழருக்கு உரியது.

இணைய இதழ்கள், மின்னிதழ்கள் இணையத்தளங்கள், வலைப்பூக்கள் முதலிய வற்றினூடாகப் பலர் தமது படைப்புகளை வெளியிட்டு வருகின்றனர். இத்தகைய மின்னியல் ஊடகங்களுக்கு ஊடாக புலம்பெயர்ந்து வாழும் இலக்கியவாதிகள் படைக்கும் இலக்கியத்தைப் பற்றிய மிகப்பெரும் உரையடல் வெளியை ஈழத்தமிழர்கள் ஏற்படுத் தியிருக்கின்றனர். கணத்துக்குக் கணம் நிழும் மாறுதல்களை, வெளிவரும் படைப்புகளை, சிந்தனைகளை மின்னியல் ஊடகங்களினூடாகப் பகிர்ந்து உலகத்தமிழ் இலக்கியப்பரப்பில் தமது வகிபாகத்தை உணரச்செய்து வருகிறார்கள்.

மொழிபெயர்ப்புகளினூடாக வேற்றுமொழி நிலைப்பட்ட இலக்கியப் பரிமாற்றம்

புலம்பெயர்ந்த படைப்பாளிகளில் சிலர் புகலடைந்த நாடுகளின் மொழியை பண்பாட்டை வாழ்வியல் அம்சங்களை உள்வாங்கி மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது தமிழ் நிலைப்பட்ட அனுபவம் வேற்று மொழிக்குக் கையளிக்கப்படுவதும் வேற்று மொழி நிலைப்பட்ட அனுபவம் தமிழ் மொழிக்குக் கையளிக்கப்படுவதுமான இலக்கிய நிலைப்பட்ட அனுபவப்பகிர்வாகும். இதனால் தமிழ்ப்படைப்புலகின் புவியியல் மற்றும் அனுபவ எல்லைகளைத்தாண்டி விரிவடைந்து சர்வதேச மயப்பட்ட தமிழ்ப்படைப்புலகப் பரிமாணத்தை தமிழ் எட்டியுள்ளது.

புலம்பெயர் இலக்கியத்தில் ஏற்பட்டுவரும் வளர்ச்சிப் போக்குகள் பற்றி இங்கு நான் கூறிய கருத்துக்கள் ஏற்கனவே ஞானம் சஞ்சிகையின் ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழின் (டிசம்பர் 2014 – 175 ஆவது இதழ்) முன்னுரையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிறைவாக, ஈழத்தமிழ் இலக்கியமானது, புகலிடத் தேசியத் தமிழ் இலக்கியத்தினூடாக உலகத் தமிழ் இலக்கியம் என்ற பரிமாணத்தை எய்தியுள்ளது என்பதே இன்றைய நிலையாகும்.

○○○

கால மாற்றம்

ராகினிக்கு இதுவரை அறுநூற்று எட்டுச் சாதகக் குறிப்புகள் பொருத்தம் பார்த்தும், அவற்றுள் சில அற்புதமாகப் பொருந்திவந்தும், ராகினி எந்தொன்றையும் ஏற்றுக்கொள்ள வில்லை

தேடி அலைந்து - சிரமப்பட்டு- பெருந்தொகை காசு செலவழித்துப் பெற்ற சாதகக் குறிப்பு ஒன்று சரிவரும் - ராகினி அதற்குச் சம்மதிப்பார் என்று ராகினியின் தந்தை தனபாலசிங்கத்தின் வலுவான நம்பிக்கை.

அச்சாதகம் ஒரு வைத்திய நிபுணருடையது. அவ்வைத்தியரின் வெளித்தோற்றம் ஜோர்!, ஆஜானுபாகுவானது. நிறம் சிவலை, வயது முப்பத்தைந்து, சுருங்கச் சொன்னால், 'சாதகம் சொல்லிவைத்த மாதிரி'.

கால தாமதமின்றி, உடன் நடவடிக்கையில் இறங்கும் ஆவலில் தனபால் தனது குடும்ப ஜோதிடரைச் சந்தித்தார்.

சாதகங்கள் உத்தமத்தில் உத்தம பொருத்தம், தொண்ணூற்று ஐந்து வீதம்!

மலர்ந்த முகத் தோடு வீடுவந்த தனபால் விடயத்தை ராகினிக்குத் தெரியப்படுத்தினார்.

ஆனால் ராகினி சொன்னார்,

"உவரை எனக்கு நல்லாகத் தெரியும், உவர் வீட்டில் அதிகப்படியாக உடுப்பது வெறும் சாரம், ஸ்ரையில் (Style) பண்ணக் கொஞ்சமும் தெரியாத ஆள் உவர், உவரை எனக்கு வேண்டவே வேண்டாம்!"

வேல் அமுதன்

அவுஸ்திரேலிய "வானமுதம்" தமிழ் ஒலிபரப்புச்சேவையின்

உலகளாவிய சிறுகதை, கவிதைப்போட்டிகள் (2016)

அவுஸ்திரேலியாவில், மெல்பேணிலிருந்து ஒலிபரப்பாகும் 'வானமுதம்' தமிழ் ஒலிபரப்புச்சேவையின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி, அனைத்துலக ரீதியான சிறுகதை, கவிதைப் போட்டிகளை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் 3000 சொற்களுக்கு மேற்படாமலும் 750 சொற்களுக்கு உட்படாமலும் அமைதல் வேண்டும்.

மரபுக்கவிதையாயின் 40 வரிகளுக்கு குறையாமலும், புதுக்கவிதையாயின் 240 சொற்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

கவிதைகள் பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைப் பற்றியதாக இருக்கவேண்டும்.

1) **உலகமொழியாக உயர்ந்த தமிழ்!**
2) **ஊடகங்கள் தமிழை உருக்குலைக்கலாமா?**
3.) **தாயகங்களில் தமிழ் நிலைக்குமா?**
4.) **செந்தமிழ் மொழியின் சிறப்பினைப் போற்றுவோம்!**
5.) **வீரம் நிறைந்த தமிழினமே, சோரம்போகலாமா?**

அனுப்ப வேண்டிய முகவரி:- அஞ்சலில்:
Vaanamutham
Whittlesea Tamil Association
P.O.Box: 93, Thomastown, Victoria – 3074, Australia
மின்னஞ்சலில்:vaanamutham@hotmail.com

சிறுகதை -

முதலாம் பரிசு	200
இரண்டாம் பரிசு	150
மூன்றாம் பரிசு	100

அவுஸ்திரேலிய வெள்ளிகள்

கவிதை -

முதலாம் பரிசு	150
இரண்டாம் பரிசு-	100
மூன்றாம் பரிசு	50

அவுஸ்திரேலிய வெள்ளிகள்

முடிவுத்திகதி: 05 செப்டம்பர் 2016

பதுளையில் பூங்குன்றத்தை வெளிக்கொணர்ந்த செ.சற்குருநாதன்

பதுளையில் இலக்கியச் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு ஈடுபட்ட பலரில் பதுளை செ.சற்குருநாதனும் ஒருவர். பதுளை அச்சக உரிமையாளராக பதுளை லோவர் வீதியில் வர்த்தகர்களால் அறியப்பட்டிருந்தாலும் உண்மையில் அவர் ஒரு வெறும் வியாபாரி அல்லர் என்பதனை இலக்கியச் செயற்பாட்டாளர்கள் நன்கறிந்து வைத்திருந்தனர். ஊவாவில் அக்காலத்தில் திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் எழுத்தாளர் தமிழோவியன் (ஆறுமுகம்) மிக முக்கியமானவர். மேலும் ஆலி.எலயில் பாண்டியன் நடராஜா, சண்மோகன் காந்தி(இந்தியா சென்று விட்டார்) இப்படிப் பலர். அந்த வகையில் செ.சற்குருநாதனும் திராவிடக்கொள்கை பற்றாளராகவும், மொழிப்பற்றாளராகவும், பகுத்தறிவுக் கொள்கை பற்றாளராகவும் விளங்கினார் என்பதனை அவரது வாழ்க்கைப் பின்புலத்தினை நன்கறிந்தோர் விளங்கிக் கொள்வர்.

சடங்கு, சம்பிரதாயங்களை விமர்சித்த செ.சற்குருநாதன் தனது திருமணத்தில் 'தாலி' கட்டிடவும் மறுத்தவர். அவரது வாழ்வு அப்படித்தான் சென்று கொண்டிருந்தது.

சுமாரான உயரமும், நல்ல ஒளி வீசும் கண்களும், காது, கை, நெஞ்செல்லாம் மயிர் வளர்ந்து அடர்ந்ததாகவும் அவரது உருவம் இருந்தது. கண்டிப்பான பேச்சு, வெட்டொன்று துண்டொன்று என வந்துவிழும் சொற்கள், அதிகம் அலட்டாமை, நேரடியாகத் தன் உள்ளத்துணர்வை வெளிக்காட்டுகின்றமை, சொன்னதைச் செய்கின்றமை இப்படி அவரது குணாதிசியங்கள் இருந்தன. இந்த பிளஸ்ஸான (சாதகமான) அமிசங்களே மற்றொருபுறத்தில் . பாதகமானதாகவும் காணப்பட்டது எனலாம். அதாவது சமரசம் செய்து கொள்ளாத அவரது பிடிவாதபோக்கு "நீங்கள் எப்படி இவ்வளவு காலம் அவருடன் சுமுகமாக பழகுகிறீர்கள்?"

என்றொரு வினாவையும் சிலரால் கேட்க வைத்தது எனலாம். எது எவ்வாறெனினும் அவருக்கென ஒரு கொள்கை இருந்தது என்பதும், அதில் அவருக்குத் திடமான நம்பிக்கை இருந்தது என்பதும், அதன் வழி நடக்க அவர் சித்தம் கொண்டார் என்பதும் ஓர் உண்மையாகும்.

வெறும் கல்லாப்பட்டியை மாத்திரம் பார்த்தவர் அவரல்லர் என்பதனாலேதான் அவரால் பதுளையில் 'பூங்குன்றம்' எனும் ஓர் இலக்கிய சஞ்சிகையைக் கொணர முடிந்தது.



மொழிவரதன்

செ.சற்குருநாதன் அவர்கள் மலையகத்தில் சிறு சஞ்சிகைகளை வெளிக்கொணர்ந்தவர்களுள் ஒருவராகக் கணிக்கப்பட்டு சிலாகித்துப் பேசப்பட வேண்டியவர் ஆவார். திறனாய்வாளர் மு.நித்தியானந்தன் அவர்கள் பல இடங்களில் பூங்குன்றம் தொடர்பான குறிப்புகளைப் பதிவு செய்துள்ளார் எனின் தவறிருக்காது.

எனினும் மேலும் சற்று தெளிவாக சற்குருநாதனின் இலக்கிய செயற்பாடுகளை வெளி உலகிற்கு கூறமுடியுமா என்றொரு எத்தனமே



ஏது செய்யப் போகிறது!

கந்தபுராணக் கலாசாரம்
கலையப் படுகிறதாம்
காளையர் கன்னியர்
கட்டின்றித் திரிகின்றனராம்...

மேல் நாட்டு மோகத்தால்
தன்மானங்கள் மலிகிறதாம்
பாவையர் மங்கையர்
பண்பாட்டைப் பிரிகின்றனராம்...

மூத்த வயதோர் கூட
மோசம் போகின்றனராம்
மாற்று இனத்தோரும் வந்து
மகிழ்ந்து செல்கின்றனராம்....

நாகரீக தோரணையில்
நம்மண் நாசமாகிப் போகிறதாம்
எச். ஐ. வி. தொற்றால்
எண்ணிக்கை அதிகரிக்கின்றதாம்...

யாழிசைக்கும் குடாநாடு
ஏது செய்யப் போகிறது?

விவேகானந்தனூர்
சதீஸ் (கிளிநொச்சி)



அப்பாவுக்காக...

அப்பா வருவார் என்று
ஆண்டுகள் ஒன்பது காத்திருக்கிறேன்...
அரசாங்கம் மாறியது
அதிகாரிகள் மாறினார்கள்
அப்பா இன்னும் வரவில்லை!

அரசியல் கைதி என்று
அப்பாவை சொல்கிறார்கள்
அம்மாவிடம் கேட்டால் அவ சொல்கிறா
அந்த நேரம்
"அவையின்ற" கட்டுப்பாட்டில் இருந்ததாலாம்....

அப்பா உண்ணாவிரதம் இருக்கின்றாராம்
அப்படியெண்டால் நானும் உண்ணாவிரதம் இருந்து
அப்பாவை விடுவிக்க போறன்
அதிபரிடம் சொல்லுங்கோ அம்மா
அடிக்க வேண்டாம் என்று!

அடம் பிடிக்கிறாள் அன்பு மகள் ஒருத்தி

இக்கட்டுரையாகும். மிகவும் கையடக்கமான அளவில் 25/= என்ற விலையுடன் பூங்குன்றம் வெளிவந்தது. முன் அட்டையில் மஹாகவி, ஸி.வி. வேலுப்பிள்ளை போன்றோரின் கவிதைகள் வெளிவந்த இதழ்கள் எனது கரங்களில் உள்ளன. மேலும் பத்திரிகை வடிவிலும் ஒரு பூங்குன்றம் வெளிவந்தது எனக்கு ஞாபகத்தில் உள்ளது.

பெப்ரவரி 1971, சூலை 1971 என அச்சிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ 28 அல்லது 30 பக்கங்களில் இவ்விதழ்கள் வெளிவந்துள்ளன.

அழகான பூக்கள் பூத்துக்குலுங்கிடும் ஒரு பின்னணியில் 'பூங்குன்றம்' என மகுடமிட்டு இதழ்கள் மலர்ந்துள்ளன.

உள்ளே அலுவலகம் 235, லோவர் வீதி, பதுளை என்றுள்ளது. பூங்குன்றத்தின் முதலாவது இதழில் பூங்குன்றம் இதழின் நோக்கம் பற்றி ஆசிரியர் செ.சற்குருநாதன் எண்ணம் எனும் தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறிச் செல்கின்றார்.

'ஈழ நாட்டில் இன்று எழுத்துத் துறையில் புதிய ஆர்வம் காணப்படுகின்றது. 'தமி முக்கு துறைதோறும்' பணி செய்யப்பலர் முன் வந்துள்ளனர்.

மலை நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்கள் பல துறைகளில் அநாதைகளாக்கப்பட்டது போன்றே கல்வித்துறையிலும் அநாதைகளாக்கப்பட்டுள் ளனர். இன்றுவரை என்றாலும் கிடைத்த சிறு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு படித்துப் பட்டம் பெற்ற சிலர், சீரழிந்து கிடக்கும் தங்கள் சமுதாயத்துக்கு தொண்டு செய்ய முன்வந்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.'

என்று எழுதிச் செல்லும் ஆசிரியர் 'தரமான இலக்கியம் படைக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு, பொது மக்களிடம் இருந்து விலகி, தந்தக் கோபுரத்திலிருந்துகொண்டு இலக்கியம் படைப்பதும் ஜனரஞ்சகமான இலக்கியம் என்று சொல்லிக்கொண்டு கேவலமான 'வியாபார

இலக்கியம்" படைப்பதும் பூங்குன்றத்தின் எண்ணமல்ல........'

என்று பூங்குன்ற இலக்கிய இதழின் நோக்கம் பற்றி கூறிச் செல்லுகின்றார்.

பூங்குன்றம் ஒரு சில இதழ்களே வெளிவந்தன எனலாம். இந்த இலக்கிய இதழில் கவிதை, சிறுகதை, கட்டுரை, விமரிசனம், இலக்கியம் பற்றிய சில செய்திகள் போன்றன இடம் பிடித்திருந்தன.

கவிஞர் குமாரராமநாதன், கவிஞர் சாரணாகையூம், அ.சண்முகநாதன், மொழி வரதன், பரிபூரணன், அ.சா.மல்லிகை காதலன் (காந்திமணி) தமிழோவியன், ஜசிந்தாசேவியர், மு.நித்தியானந்தன், சுழியோடி முனியன், கந்தேகெதர "சுவை", கலைப்பிரியன், வ.ஆறுமுகம் எனப்பலர் எழுதினர். மேற்குறிப் பிட்டோர்களின் மேதாவிலாசம் பற்றி நாம் இன்று கண்டு கொண்டுள்ளோம்.

1970களில் எழுதிய இவர்களுள் பலர் இன்னும் எழுதியவண்ணம் (2016) உள்ளனர். பல நூல்களை வெளியிட்டுள்ளனர். கவிஞர் குமாரராமநாதன், அ.சா.மல்லிகை காதலன், தமிழோவியன் போன்றோர் அமரராகிவிட்டாலும் பூங்குன்றம் இதழில் அவர்களின் படைப்புக்கள் இன்றும் அவர்களின் பெயர் சொல்லுகின்றன. தரமான படைப்புக்களை பூங்குன்றம் தாங்கி வந்தது எனில் மிகை இல்லை.

ஒரு சில கதைகளே எழுதியுள்ள அ.சா. மல்லிகை காதலனின் சிறுகதைகள் பற்றி மு.நித்தியானந்தன் எழுதிய விமரிசனம் ஒன்று பூங்குன்றம் இதழில் வெளிவந்தது ஞாபகத்தில் உள்ளது. துரதிஸ்டவசமாகப் பத்திரிகை வடிவில் வந்த அந்தப் பூங்குன்றம் இதழ் கை தவறி விட்டது. அல்லது **Displace** ஆகிவிட்டது. என எண்ணுகிறேன். எவ்வாறெனினும் மு.நித்தியானந்தன் அவர்கள் அ.சா.மல்லிகை காதலன் பற்றி மேலும் பல இடங்களில் பதிவு செய்துள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும். (துங்கிந்த சாரலிலே தினகரன் ஜுன் 16, 1996)

ஒரு சில விளம்பரங்களுடனும் செ.சற்குரு நாதனின் முதலீட்டுடினாலும் (அச்சகப் பதிப்புடன்) பூங்குன்றம் வெளி வந்தது. செ.சற்குருநாதன் பதுளையில் இடம்பெற்ற இலக்கியச் செயற்பாடுகளில் ஏதோ ஒரு வகையில் தன்னை இணைத்துக் கொண்டவர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

பதுளையில் பல்வேறு சிந்தனைகளை உடையோரையும், புத்திஜீவிகளையும் இலக்கிய ஆர்வலர்களையும், படைப்பாளி களையும் ஒன்றிணைத்து 'சிந்தனை ஒன்றியம்' எனும் தலைப்பில் ஓர் அமைப்பை உருவாக்குவதில் மூலகர்த்தாவாக இருந்தார். இதன் தலைவராக இயங்கிய அவர் **24/7/1982** இல் பாரதி நூற்றாண்டு விழா ஒன்றினை முன்னெடுப்பதிலும், மலர் ஒன்றினை வெளிக்கொணர்வதிலும் பிரதான இடம் வகித்தார். இவ்விடயம் தனியாக விரிவாக ஆராயப்படவேண்டிய ஒன்றென எண்ணுகிறேன்.

குருவிக்கூட்டுக்கு கல் எறிந்தது போல் அல்லது தேன் கூட்டிற்கு கல் எறிந்து கலைத்தது போல் 1983 ஜுலை இனக்கலவரம் வெடித்தது. தமிழர்களை, உடைமைகளை காப்பாற்ற எவரும் இருக்கவில்லை. தனிப்பட்ட ஒருசில தனிமனிதர்களான சிங்கள, முஸ்லிம் சகோதரர்களின் கருணைப்பார்வையால் தமிழர்கள் பலர் காப்பாற்றப்பட்டனர்.

'பேய் அரசு செய்தால்
பிணந்தின்னும் சாத்திரங்கள்'

என்ற பாரதியின் அடிகளை அரசும், இராணுவமும் உண்மையாக்கின. தமிழர்கள் கடைகள் எரிக்கப்பட்டன. தமிழர்கள் எரிக்கப்பட்டனர். செ.சற்குருநாதனின் பதுளை அச்சகமும் எரியுண்டது. அவரது பல அரிய நூல்கள் தீ நாக்குகளுக்கு உணவாகின. பதுளை அல்லோலகல்லோலப்பட்டது. எந்த வகையிலும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றானது. எல்லாவற்றையும் இழந்த அவர் மட்டக்களப்புக்குச் சென்று சில காலங்களுக்குப் பின்னர் அச்சகம் ஒன்றினை நடத்த முயன்றார் எனினும் அது வெற்றி பெறவில்லை.

என்றாலும் செ.சற்குருநாதன் மனைவி, மகன், மருமகளுடன் கொழும்பில் வாழ்கிறார். மலையக இலக்கிய, இதழியல் வரலாற்றிலும் ஊவா மாகாண இலக்கிய வளர்ச்சிக்கான பங்களிப்பிலும் நிச்சயம் செ.சற்குருநாதனின் பெயர் பேசப்படும். அவர் எல்லா நலன்களுடனும் மேலும் பல்லாண்டு வாழ்தல் வேண்டும். எமது கடமை அவரது செயற்பாடுகளைச் சிலாகித்துப் பேசுவதும், அதனை வெளிக்கொணர்வதும் பதிவு செய்வதும் ஆகும்.

○○○

சிறை உடைப்பு

பிள்ளைகள் மூன்றும் பசிக்கொடுமை தாங்காது களைப்பு மேலிட சுருண்டு படுத்து உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டன. அவளுக்கும்கூட பசி குடலைச் சாப்பிட்டது. மயக்கம் மயக்கமாக வந்தது.

நேரம் இரவு ஒன்பதைத் தாண்டிவிட்டதால் ஊரே உறக்கத்தின் போர்வைக்குள் மெல்ல மெல்ல ஆட்பட்டுக்கொண்டிருந்தது.

நேரம் செல்லச்செல்ல, கந்தோருக்குச் சென்ற கணவன் இன்னும் வீட்டுக்கு வரவில்லையே என்ற கோபம் அவளது பசிக்கு மேலால் அவளைக் கொதிப்படையச் செய்தது.

மதியம் பாடசாலையால் வந்த பிள்ளைகள் மூன்றுக்கும் கைப்பிடியளவு கிடந்த அரிசியை உப்புப் போட்டுக் கஞ்சி காச்சிக் கொடுத்து அவர்களின் பசியை ஒருவாறு சமாளித்தாள். ஆனாலும் வளரும் பிள்ளைகளுக்கு 'ஆனைப் பசிக்கு சோளப் பொரி' தான் அது என்பதை அவள் அறியாதவளல்ல.

தனது பசியை ஒரு வெறும் தேநீருடன் சமாளித்துக் கொண்டாள்.

இரவுக்காவது ஏதாவது ஆமான சாப்பாட்டைச் செய்து பிள்ளைகளின் பசியைப் போக்கலாமென கணவனின் வருகைக்காக காத்திருந்த அவள், நேரம் செல்லச் செல்ல பொறுமையற்றவளாய் கணவனை வாய்வலிக்க தன்பாட்டிற்கு திட்டியபடியிருந்தாள்.

'ஒரு குடும்பப் பொறுப்பில்லாத தேவாங்கு எனக்கு வாச்சிருக்கு. எந்தப் பிறவியிலை இது திருந்தப்போகுதோ தெரியாது. பெரிய அரசாங்க உத்தியோகமாம். மண்ணாங்கட்டி. அரசாங்க மாப்பிள்ளையக் கட்ட நான் கொடுத்து வைச்சிருக்க வேணுமாம். எண்ணத்துக்கு மாத்திரம் குறைச்சலில்லை. இஞ்சை அரசாங்க உத்தியோகக்காறன்ரை மனிசியும் பிள்ளையளும் படுகிறபாடு நாய்படாப்பாடு'.

உனக்கென்னடி செல்லப்பிள்ளை. எங்கட புருஷன்மார் அன்றாடம் கூலி வேலைக்கு போனால்தான் சம்பளம். அதுவும் கடும்மழை காலமெண்டால் அதுவும் கிடையாது. மாதக் கணக்கிலை பட்டினி கிடக்க வேண்டியதுதான்.

எந்தமழை கொட்டினாலும், வெய்யில் சுட்டெரிச்சாலும், புயலடிச்சாலும் உன்ரை புருஷனுக்கு டாண் என மணியடிச்ச மாதிரி மாதாமாதம் இருபத்தைஞ்சாம் திகதி சம்பளம். எங்களுக்கு அப்பிடியே? நீ கொடுத்து

ஷெல்லிதாசன்

வைச்சவளடி. உம் எங்கடை தலைவிதி அப்படி.

இப்படியெல்லாம் என்னைப் பார்த்துக் கதைக்கிற பொம்பளையளுக்கு கன்னத்திலை அறைய வேணுமென கோவம்வரும்.

அந்தாளின்ரை உழைப்பின்ரை சீத்துவக் கேடு அவளைவக்கு தெரிஞ்சாத்தானே. கந்தோ ரிலை எடுக்கக்கூடிய 'லோன்' எல்லாத்தையும் எடுத்துப்போடுவான் பாவி மனிசன். ஆனா எடுத்த லோனிலை ஒண்டும் வீட்டுக்கு வந்ததா நானறியன்.

சம்பளத்திலை அரைவாசித் தொகையை லோனுகள் விழுங்கிப்போடும். மிச்சம் அரைவாசியிலை, பென்சன், இன்சூரன்ஸ், நலன்புரிச்சங்கம் எண்டு கொஞ்சத் தொகையை அவை விழுங்க, கலியாண வீடு, சாமத்தியச் சடங்கு, கோயில் திருவிழா லிஸ்டுகளுக்கெண்டு ஒரு தொகைபோக மனிசன் கையிலை எடுக்கற சம்பளம் எட்டு ஒன்பதாயிரம் மட்டுந்தான்.

அப்படிக் கையிலை கிடைக்கிற காசாவது வீட்டுக்கு வருமோ? அதுவும் கிடையாது.

சம்பள நாளண்டு கந்தோர் வாசலிலை கந்துவட்டிக்காரன், கள்ளு, சாராயக்கடைக் காரன்கள் கந்தோர் பெருங்குடி மக்களிடமிருந்து கடன் வசூலிக்க காத்திருப்பாங்கள். அவங்களிட் டையிருந்து ஆவியும் தப்பேலாது. கழுத்துப் பிடியிலை கடனுகளை உருவி எடுப்பதிலை கில்லாடிகள் அவங்கள்.

குறைஞ்சது இரண்டாயிரத்துக்காவது மனிசன் கடனுக்கு குடிச்சிருப்பான். அதுவும் போதாதெண்டு கந்துவட்டிக்காரனிட்டையும் வட்டிக்குக் காசுவாங்கி தண்ணி அடிச்சிருக்கும் அந்தாள். கையிலை கிடக்கிற மீதிக் காசோடை வீட்டுக்கு வர வெளிக்கிடும் மனிசனை கந்தோரிலை இருக்கிற ஓசிக் குடிகாறன்கள் விட்டால்தானே.

சில குடிகாரரை தள்ளு ஸ்ராட் காரன்களெண்டு சொல்லுவாங்கள். ஓட மறுக்கும் வாகனத்தை ஒருக்கா உந்தித் தள்ளினால் போதும். ஸ்ராட் பண்ணிச்சோ அதுக்குப் பிறகு அதுதானே எத்தினை கட்டையும் ஓடுமாம். என்ரை மனிசனும் இந்த ரகமெண்டு அவரோடை குடிக்கிறவங்களுக்கு நல்லாத் தெரியும். முதல் ஒரு மில்லியை வாங்கிக் குடுத்தாக் காணும். பிறகென்ன மனிசனிட்டை இருக்கிற காசெல்லாம் தண்ணிபட்டபாடாய்.... போத்திலாய் உருளும். இந்தச் சூட்சுமத்தை அறிஞ்ச அந்த அறுவான்கள் அந்தாளைப் போட்டு முறி முறியென முறிச்சு ஆட்டம் போடவைச்சு, தலை நிமித்த முடியாத நிறை வெறியிலை கைத்தாங்கலா தூக்கிக்கொண்டு வந்து வீட்டு முத்தத்திலை கிடத்திப்போட்டு நசுக்கிடாமல் போவாங்கள்.

மனிசிமாருக்குப் பயந்து அவங்கள் ஐஞ்சைப் பத்தை மாத்திரம் எடுத்திட்டு பத்திரமாய் சம்பளத்தை மனிசிமாரிட்டை குடுத்துப்போட்டு நல்ல பிள்ளையளுக்கு நடிப்பாங்கள். முறிக்கிறதுக்கு என்ரை மனிசனைப்போல இளிச்சவாயன் இருக் கேக்கை அவங்களுக்கு என்னகுறை. எல்லாம் என்னோடைதான் சண்டித்தனம். மற்றவை யளிட்டை அப்பாவிமாதிரி கறுமம்... என்ரை தலைவிதி!

'இன்டைக்கு பாரன்.... சம்பளமெடுத்து கூட்டாளியளோடை குடிச்சுப்போட்டு தலைதூ க்கேலாமை வரட்டும். செமையா குடுக்கிற குடுவையிலை கூட்டிவர்ர கூட்டாளிகளும் ஓடுறமாதிரி குடுக்கத்தான் நினைச்சிருக்கிறன்.'

அடி... கமலீ... க... க... கமலீ... ஊரே அடங்கிவிட்ட அந்த இரவு வேளையில் சித்திரவேலுவின் குரல் ஓங்கிஒலித்தது.

தெருப்படலையை ஓங்கி ஒரு உதை உதைத்தான் சித்திரவேல். படலை அவனின் உதையைத் தாங்க முடியாது அலறி அடித்தபடி ஓவெனத் திறந்துகொண்டது.

ஊர் நாயெல்லாம் சித்திரவேல் வீட்டுக்கு வந்துவிட்டானென பறையொலிப்பதுபோல குரைத்து ஓலமிட்டவண்ணமிருந்தன.

அடி..... கமலீ..... நான் கூப்பிடுறது உனக்குக் கொஞ்சமும் கேக்கலையாக்கும். வீட்டு முற்றத்திற்கு வந்து தள்ளாடியபடி நின்ற அவன், 'அடி எங்கையடி ஊர் மேயப் போனனி' என அகங்காரம் மேலிட உரத்துச் கத்தினான்.

'ஏன் இண்டைக்கு கூட்டாளியள் எங்கை போட்டினம். தூக்கிக்கொண்டு வந்து வாசலிலை கிடத்திட்டுப்போற அந்த அறுவான்கள் வரேல்லையோ' கோபம் பொங்க கமலியும் கத்தினாள்.

'அடி..... அடி..... மரியாதையா கதையடி. நான் ஒரு கவுண்மேந்து உத்தியோகக்காரணடி. என்னை நீ கலியாணம் கட்ட குடுத்து வைக்கவேணுமடி. உன்ரை கொப்பன் கொட்டித்தந்தவனல்ல சீதனம். அதுக்குள்ளை உனக்கு ஒரு கெப்பர் வந்திட்டுதோ. நானென்ன உன்ரை அயல்வீட்டுக் காரங்களைப் போல கூலிக்காரனே. என்ரை ரெஸ்ப்பெக்ட் உனக்கு

..... புருஷன் செத்தா பொம்பிளையள் குங்குமம் வைக்கக்கூடாது, நல்லமாதிரி உடுக்கக்கூடாது, நாலு பேரோடை பேசக்கூடாது, நல்ல காரியத்துக்கு முன்னாலை வரக்கூடாது, இதெல்லாம் எழுதாத சட்டமடி கமலி"

"இந்த எழுதாத சட்டங்களை எழுதிவைச்சவங்கள் ஆணாதிக்க திமிர் பிடிச்சவங்களாத்தான் இருக்க முடியுமடி. புருஷன் செத்த பொம்பிளையள் மொட்டை அடிச்சு வெள்ளை உடுக்க வேண்டுமெண்டு கூறுறாங்கள். மனிஷிமாரை இழந்த ஆம்பிளையள் அவள் இறந்து ஒரு மாதம் ஆகும் முதலேயே புதுமாப்பிள்ளையாகி புதுப் பெண்ணைத் தாலிகட்டி வீட்டுக்கும் கூட்டிக்கொண்டு வாறான்கள். இது என்ன நியாயம் எண்டு எனக்கு விளங்கேல்லையடி."

ஆம்பிளையளுக்கு ஒரு சட்டம் பொம்பிளையளுக்கு மாத்திரம் வேறை சட்டம்.

தெரியுமே நாயே. என்ரை பிறன்சிட்டை கேட்டுப்பாரடி'

'உங்களிட்டை காசுதட்டிப்பறிச்சு ஓசியிலை குடிக்கிறவங்கள் உங்களை தலையிலை வைச்சுக் கதைப்பினம்தானே. அவங்களுமொரு மனிசரெண்டு கதைக்கிறார்'

'எடி..... எடி..... ஆரைபத்தியும் கதை என்ரை பிறென்சைப்பத்தி கதையாதையடி. நாங்களெல்லாம் கவுன்மெந்து உத்தியோகக் காரரடி. சேந்து தண்ணியடிப்பம், கட்டிப் பிரளுவம். ஆரடி கேக்கிறது.'

'உங்கடை தரவளியளுக்கு ஒரு அரசாங்க உத்தியோகம். அரசாங்கத்துக்கு வந்தகேடு. வீட்டையே கவனிக்கத் தெரியாத மூதேவியள் அரசாங்க உத்தியோகத்தை எப்பிடிக் கவனிக்குதுகளோ. உங்கடை வெக்கங்கெட்ட கதையளை ஆரிட்டையும் போய் சொல்லுங்கோ காறித் துப்புவாங்கள்.'

❧ ❧ ❧

'பெடியன் தங்கமான பெடியன். கந்தோரிலை நடக்கிற கொண்டாட்டங்களிலைகூட சோடாத் தண்ணியைத்தான் குடிப்பான். அதுவும் கண்ட சோடாவும் குடிக்கமாட்டான். அதிலைகூட மதுசாரம் கலந்திருக்குதோ எண்டு ஆராஞ்சு அறிஞ்சுதான் அதை கையிலை எடுப்பான். பொறுப்பான பெடியன். சோலி சுரட்டுக்கு போகாதவன். அந்தப் பெடியனை நீங்கள் மருமகனா எடுக்க தவம் செய்யவேனுமண்ணை.'

என்ரை அப்பரிட்டை வந்து இப்பிடியெல்லாம் புழுகித்தள்ளி ஒரு கொள்ளிவால் பிசாசை என்ரை தலையிலை கட்டிவைச்ச புறோக்கர் பொன்னம்பலத்தை இப்ப கண்டனெண்டா நாரா உரிச்சு கயிறா திருச்சுப்போடுவன். புறோக்கர் காசுக்காக இப்படியெல்லாம் பொம்பிளைப் பிள்ளையளின்ரை வாழ்க்கையை கெடுக்கிறவங்கள் ஒருநாள் அனுபவிப்பாங்கள். ஐயோ..... கடவுளே..... என்னைப்போல் என்ரை தாய்தகப்பனைப்போல் ஏமாந்து எத்தனை சீவனுகள் இந்தப் பிசாசுகளிட்டை மாட்டுப்பட்டு கண்ணீரும் கம்பளையுமா வாழுகுதுகளோ..... ஆண்டவா' என தனது ஆதங்கங்களை சொல்லிச் சொல்லி தலையிலடித்தபடியிருந்தாள் கமலி.

'எடி..... எடி நானும் இத்தினை நேரமா பாத்துக் கொண்டுதானிருக்கிறன். பெரிய ஆலாபனை பண்ணுறா. வந்து ஒரு உதை உதைச்சனெண்டா உன்ரை குடல் வெளியிலை வருமடி தெரியுமோ.....?

'எங்கை உதைபாப்பம். இத்தினை காலமும் நானும் பொறுத்துக்கொண்டு வந்திட்டன் உன்ரை அக்கிரமங்களை இனிப் பொறுக்கேலாது.'

'ஆரடி..... உதுகளை சொல்லித் தந்தவன்'

இஞ்சைபார் உன்னைப்போல் மானங்கெட்ட வளில்லை நான். குடிச்சுப்போட்டு உரியானத் தோடை தெருவிலை மல்லாந்து விழுந்து கிடக்கிற உனக்கு தூ..... என்னைப் பற்றிக் கதைக்க என்ன யோக்கியதை இருக்கு, மானங் கெட்ட சாதி நீதான்'

'என்ன நான் மானங்கெட்ட சாதியோ'

குடிசையின் சுவருடன் சாய்ந்தபடி கதைத்துக் கொண்டிருந்த கமலியை நோக்கி ஒற்றைக் காலை தூக்கியபடி பலமாக அவளை உதைவதற்காக ஓடிச் சென்றான் சித்திரவேல்.

சட்டென அவனது உதை தன்னில் படாத வாறு கமலி விலத்திக் கொண்டாள்.

தள்ளாடியபடி விரைந்து ஓடிவந்த சித்திர வேலுவின் தலை சுவரோடு பலமாக மோத, தலையிலிருந்து இரத்தம் சீறிப்பாய நிலத்தில் தடாரென புரண்டு விழுந்தான் அவன்.

பீறிட்ட இரத்த வெள்ளம் பாய்ந்து ஓட அதற்குள் வீழ்ந்து துடிதுடித்துக்கொண்டிருந்த கணவனைக் கண்ட கமலி சற்று நேரம் நிலைகுலைந்து விறைத்துப்போய் நின்றாள். இப்படி ஒரு அவலம் நடந்தேறுமென்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை. சற்று நேரத்தில் சுயநினைவுக்குத் திரும்பிய கமலி தலையிலடித்தபடி வீரிட்டு பலமாகக் கத்தினாள்.

தாயின் கூக்குரலைக் கேட்டு திடுக்குற்று எழுந்து வெளியே வந்த பிள்ளைகள் தகப்பன் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து 'ஐயோ அப்பா.... அப்பா...' என கூக்கிரலிட்டு அலறினர்.

வழக்கமாக இரவு நேரத்தில் அந்தக் குடிசையில் கேட்கும் அழுகுரல்தானென நினைத்து அடுத்த வீட்டுச் சனம் எதுவும் எட்டிப்பார்க்கவில்லை.

இப்படியெல்லாம் ஆகுமென கனவிலும் நினைத்துப் பார்க்காத கமலி தன்னை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு பக்கத்துவீட்டுப் பாக்கியம் அக்கா வீட்டுக்கு பதறியடித்தபடி ஓடினாள்.

'பாக்கியம் அக்கா..... பாக்கியம் அக்கா..... என பாக்கியம் அக்காவின் வீட்டுப் படலையின் முன்னாள் நின்று கமலி பலமாகக் கத்தி கூப்பிட்டாள். அதற்கிடையில் தெருநாய் களெல்லாம் அவளது சத்தத்தைக்கேட்டு ஓலமிட்டு ஊரையே அழைத்தன. பாக்கியம் அக்கா மாத்திரமல்ல சற்று நேரத்தில் கமலியின் வீட்டு முற்றத்தில் ஊரே திரண்டு வந்து நின்றது.

சித்திரவேல் தலைசிதறுண்டு இரத்த வெள்ளத்தில் குற்றுயிராய் கிடந்தான். பிள்ளைகளும் கமலியும் அலறியபடி அவனுக்குப் பக்கத்தில் குந்தியிருந்து கண்ணீர் வடித்தபடியிருந்தனர்.

வந்து கூடிய சனங்கள் எதுவும் கமலிக்கோ பிள்ளைகளுக்கோ ஆறுதல் சொல்லவோ, விழுந்துகிடக்கும் சித்தரவேலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதில் நாட்டம் செலுத்துவதையோ காணோம். மாறாக கமலியை திட்டுவதிலும், விமர்சிப்பதிலும் முனைப்பாக நின்றனர்.

'குடிகாரனெண்டா அதுக்கேத்தபடி அவனோடை சமாளிச்சு நடக்கவேணும் ஊருலகத்திலை குடிகாரப் புருஷன்மாரோடை பெம்பிளையள் வாழேல்லையே. அடி உதைபட்டுத்தானே அதுகள் காலந்தள்ளுதுகள். இப்பபாரன் அவன் சாகக்கிடக்கிறான். அவ பெரிய விண்ணாளம் போட்டு நீலிக் கண்ணீர்வடிக்கிறா.

ஏன் பாக்கியம் அக்கா புருஷனிட்டை வாங்காத அடி உதையே இவ வாங்கினவ. அந்த மனிசியின்ரை புருஷன் நாகலிங்கம் குடிச்சுப்போட்டு அலவாங்காலை அந்த மனிசியை அடிச்ச அடியிலை பாக்கியம் அக்காவின்ரை வலதுகால் முறிஞ்சு போச்சு. அப்பிடியிருந்தும் முறிஞ்சகாலாலை நொண்டி நொண்டி கல்லானாலும் கணவன் புல்லா னாலும் புருஷன் எண்டு வாழ்ந்ததோடை ஆறேழு பிள்ளையளையும் பெத்து சந்தோஷமா யிருக்கேல்லையே. இப்ப இரண்டு மூண்டு பெடியளை வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு, அவங்கள் அனுப்பிற காசுகளை வட்டிக்குக் குடுத்திட்டு ராசாத்திபோல காலுக்கு மேலை காலைப்போட்டு வாழுறா.

தோளுக்கு மிஞ்சினா தோழன் எண்டமாதிரி பாக்கியமக்காவின்ரை பெடியள் வளந்து தகப்பனை தட்டிவைச்சிட்டுதுகள். மனிச்சிக்கு அலவாங்காலை அடிச்சதாலை அலவாங்கு நாகலிங்கமெண்டு பேரையும் வாங்கிக்கொண்டு கப்சிப்பெண்டு இருக்குது மனிசன்.

இதெல்லாம் இந்த கமலித் தேவடியாளுக்கு தெரியாதே. புருஷன் உதைக்க வந்தால் வாங்கிக்கொண்டு பொறுத்துப் போறதுதானே..... என்ன உயிரே போகப்போகுது. இப்பபாரன் அவன் தலையிலை அடிபட்டு சாகக்கிடக்கிறான். இனியென்ன செய்யப்போறா பாப்பம். பிள்ளையள்தான் தகப்பனில்லாமல் வளரப்போகுதுகள்.

இப்படியெல்லாம் பலவிதமாய் எந்த ஆம்பிளையளும் கதைக்கவில்லை. கூடி புதினம் பாத்துக்கொண்டிருந்த பெண்பிரசைகளின்ரை வாயிலையிருந்து உதிர்ந்து விழுந்த முத்துக்கள்தான் இவை. வந்த பெண்களின்ரை கதை இப்படியெண்டா ஆம்பிளையள் எப்படிக் கதைச்சிருப்பினமெண்டு சொல்லவும் வேணுமே.

தலையில் பலமான அடிபட்டு இரத்தப் பெருக்கு ஏற்றபட்டதால் வைத்தியசாலை வைத்தியர்களால் என்ன செய்தும் சித்திரவேலுவைக் காப்பாற்ற முடியவில்லை.

கமலியின் வாழ்க்கை போராட்டத்தின் ஒரு பகுதியும் முடிவுக்குவந்தது.

கமலியும் நானும் ஒரே கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். உயர் வகுப்புவரை படித்த கமலியால், குடும்ப வறுமை காரணமாக தொடர்ந்து படிக்க முடியவில்லை. குடும்பத்தில் மூத்தவள் அவள். அவள் பின்னால் ஆறு சகோதரங்கள். கூலிவேலை செய்யும் தகப்பனால் எல்லோரையும் படிப்பிக்க முடியாததால் முதல் பலிக்கடாவாக கமலிதான் தன் படிப்பை தியாகம் செய்ய வேண்டியிருந்தது. தாயும் ஒரு நோயாளி என்பதால் கமலி வீட்டில் நின்று ஏனைய சகோதரங்களை கவனித்துக்கொண்டாள்.

இதற்கிடையில் கமலியைக் கேட்டு கலியாணப் பேச்சுக்களும் வந்தன.

அவள் படித்துக்கொண்டிருந்த கல்லூரியின் முன்னாள் உள்ள கந்தோரில்தான் சித்திரவேல் ஒரு எழுதுவினைஞனாக வேலைசெய்து வந்தான். கல்லூரிக்கு போய்வந்த கமலியின் அழகு, எடுப்பான தோற்றம் அவனைக் கவர்ந்ததால் ஒரு புறோக்கர் மூலம் கமலியின் தகப்பனாரிடம் தூதுவிட்டான் அவன். பெரிசா சீதனம் தேவையில்லை எண்டும் சொல்லிவைத்தான்.

குறைஞ்ச சீதனத்தோடை வலிய வந்த சம்பந்தத்தை தட்டிக்கழிக்க விரும்பாத அவனது தகப்பனார் இதுதான் சந்தர்ப்பமென்று பதினேழு வயதும் ஆகாத அவளை கோயில்லை மாலைமாத்தி இரகசியமாக சித்திரவேலுவுக்கு தாரைவார்த்துக்கொடுத்து தனக்கு முதல் சுமையாக இருந்த அவளை சித்திரவேலு வீட்டுக்கு அனுப்பிவிட்டு சிவசிவா எண்டு ஆறுதல்பட்டுக்கொண்டார். அன்றிலிருந்து கமலியின் வாழ்க்கை நரகத்துக்குள் கொஞ்சம் கொஞ்சமாக அடியெடுத்துவைக்கத் தொடங்கியது.

நல்லகாலத்துக்கு என்ரை தகப்பன் தாய் கொஞ்சம் ஆற அமர எதையும் யோசிக்கும் வல்லமை படைத்தவர்கள். பொம்பிளைப் பிள்ளையள் எப்பவும் தங்கடை சொந்தக்காலிலை நிக்கவேண்டுமெண்டு கருதுகிற பெற்றோர் எனது பெற்றோர்.

இந்தக் காலத்து ஆம்பிளையள் சிலர் கலியாணம் முடிச்சு ஒண்டிரண்டு வருஷத்தோடை! 'போ உன்ரை கொப்பனிட்டை ஐஞ்சுலச்சம் பந்துலச்சம் வாங்கிட்டு வா. இல்லையெண்டா அங்கையே நில்' என வயித்து பிள்ளையோடை அவள் இருந்தாலும் துரத்திப் போடுவாங்கள். அது மாத்திரமல்ல புதிசா ஒருத்தியையும் கூட்டிக்கொண்டுவந்து குடும்பம் நடத்துவாங்கள்.

உத்தியோகம் பாக்கிற பொம்பிளையள் ஒருமாதிரி சொந்தக்காலிலை நிண்டு சீவியத்தைப் போக்கலாம். எதுவும் இல்லாததுகள்பாடு பிச்சை எடுக்கவேண்டியதுதான்.

இதையெல்லாம் கருத்திற்கொண்டு எனது பெற்றோர் என்னையும் எனது மூன்று சகோதரிகளையும் படிக்கும் மட்டும் படிக்கவைச்சதோடை ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு உத்தியோகத்திலை இருக்கிறம்.

விஞ்ஞான பட்டதாரியான நான், ஒரு ஆசிரியையாகி, என்ரை புருஷனுக்கு நிகரா இண்டைக்கு உழைக்கிறன். அதுக்கேத்த மாதிரி புருஷனும் வாய்த்ததால் சுதந்திரமாய், சுயமாய் சிந்தித்து சீவிக்கிறன். புருஷனின்ரை வேண்டாத் தலையீடுகள் எதுவுமில்லாததால் நிம்மதியாகவும் எனது வாழ்க்கை செல்கிறது.

பாவம் கமலி. அவளும் என்னைப்போல படிச்சிருந்தா ஏதாவது வேலையிலை இருந்திருப்பாள். நல்லாப் படிக்கக் கூடிய கமலியைப்போல எத்தினை பிள்ளையள் வறுமையாலை சகதிக்கை விழுந்துகிடந்து தத்தளிக்குதுகள்.

புருஷனை இழந்த கமலி, ஏதும் வருமானம் இல்லாது மூன்று பிள்ளையளோடையும் எப்படிச் சீவிக்கிறாளோ. அந்த வேதனையின் வெளிப்பாடாகவும், அவளைப் பார்த்து ஆறுதல் கூறி, என்னால் முடிந்த உதவியையும் செய்யவேண்டுமென்ற ஆதங்கத்தில் அன்றைய தினம் நான் அவளது குடிசையை தேடிச்சென்றேன். கமலியைப் பார்க்கச் சென்றநான் அவளது வீட்டின் முன்னால் நின்று 'கமலி... கமலி' எனக் குரல் கொடுத்தேன்.

எனது குரலைக் கேட்ட கமலி குடிசையிலிருந்து வெளியே வந்தாள். என்ன ஆச்சரியம் கமலியா அவள்?

என்னைக் கண்டுகொண்டதும் ஒரே தாவலில், பெரும் ஆவலுடன் என்னிடம் வந்து ஜெயமணி... நீயா... என என்னை கைகளால் இழுத்துத் தழுவிக் கொண்டாள் கமலி. தழுவலிலிருந்து சற்றுப்பின் விடுவித்த அவள் 'வா..... ஜெயமணி... வாடி என்ன இந்தப்பக்கம்?' என ஆவலுடன் என்னைப் பார்த்து வினா தொடர்த்தாள்.

ஆனால் என்னால் அவளது கேள்விக்கு உடனடியாகப் பதில் கூறமுடியாது திகைத்து

அவளையே பார்த்தபடி கண்ணிமைக்காது சில மணித்துணிகள் அசையாது நின்றேன்.

எனது திகைப்பின் அர்த்தத்தை புரிந்துகொண்ட அவள் 'ஜெயா..... என்னடி இவள் புருஷனைப் பறிகொடுத்த அபலை மாதிரி தலைவிரி கோலமாய், அழுக்கான உடையோடு காணப்படவில்லையே. அதுவும் உச்சிபிரித்து அழகாக தலையிழுத்து நெற்றியில் குங்குமப் பொட்டும் ஆளுமாய் நிற்கிறாளே என நீ ஆச்சரியப்படுவதுபோல தெரியுதடி... அப்படித்தானே' கமலி வெகு சாதாரணமாக நான் நினைத்ததை அப்படியே என்னிடம் ஒப்படைத்தாள்.

'சரி..... சரி வாடி உள்ளே போயிருந்து கதைப்போம்' என எனது சிந்தையைத் திசைதிருப்பிய கமலி வீட்டின் உள்ளே என்னை அழைத்துச் சென்றாள். அங்கே ஒரு பக்கத்தில் காணப்பட்ட தையல் இயந்திரத்துக்குப் பக்கத்தில் விரித்திருந்த ஓலைப்பாயில் பலவித வண்ணத்தில் புதுத் துணிகள் குவிந்துகிடந்தன.

கமலி என்னை ஒரு இருக்கையில் அமர்த்திவிட்டு, அந்த தையல் இயந்திரத்துக்குப் பக்கத்தில் அவள் அமர்ந்துகொண்டாள். மௌனமாக இருந்த எனது நிலையைக் கலைத்த கமலி 'என்னடி திடீரென இந்தப் பக்கம் நான் கேட்டதுக்கு பதிலையே காணம்?' இல்லை கமலி, நீ புருஷனை இழந்து கவலையில மூழ்கிக் கிடப்பாயெண்டு உன்னோடை கதைச்சு ஆறுதல் கூறுவமெண்டு வந்தேனடி'.

நீ எதிர்பார்த்தமாதிரி கவலையேதுமின்றி நான் கலகலப்பாயிருக்கிறன் அப்படித்தானே? எனக்குத் தெரியும்..... என்னடி இவள் புருஷன் செத்தாப் பிறகும் குங்குமப் பொட்டுவைச்சு..... வழக்கத்துக்கு மாறா நடக்கிறாள் எண்டு நீ யோசிக்கிறாய்..... மனசுக்குள்ளை நீ என்னை திட்டியுமிருப்பாய்..... நான் சொல்லுறது சரிதானே ஜெயமணி?

'ஓமடி..... புருஷன் செத்தா பொம்பிளையள் குங்குமம் வைக்கக்கூடாது, நல்லமாதிரி உடுக்கக்கூடாது, நாலு பேரோடை பேசக்கூடாது, நல்ல காரியத்துக்கு முன்னாலை வரக்கூடாது, இதெல்லாம் எழுதாத சட்டமடி கமலி'

'இந்த எழுதாத சட்டங்களை எழுதிவைச்சவங்கள் ஆணாதிக்க திமிர் பிடிச்சவங்களாத்தான் இருக்க முடியுமடி. புருஷன் செத்த பொம்பிளையள் மொட்டை அடிச்சு வெள்ளை உடுக்க வேண்டுமெண்டு கூறுறாங்கள். மனிஷிமாரை இழந்த ஆம்பிளையள் அவள் இறந்து ஒரு மாதம் ஆகும் முதலேயே புதுமாப்பிள்ளையாகி புதுப் பெண்ணைத் தாலிகட்டி வீட்டுக்கும் கூட்டிக்கொண்டு வாறான்கள். இது என்ன நியாயம் எண்டு எனக்கு விளங்கேல்லையடி.'

ஆம்பிளையளுக்கு ஒரு சட்டம் பொம்பிளையளுக்கு மாத்திரம் வேறை சட்டம் எனக் குமுறினாள் கமலி.

'இல்லையடி கமலி..... நாங்கள் சமுதாயத்தோடை ஒட்டிப்போகவேணும். இல்லையெண்டால் கரைச்சல்தானே'

என்னடி சமுதாயம்? ஒரு பெண் தன்ரை கவலையிலையிருந்து விடுபடக்கூடாது. ஆனா... ஆண் அதையெல்லாம் உதறித் தள்ளிப்போட்டு தேன் நிலவுகாணலாம். உதுதானோ சமுதாயத்தோடை ஒட்டிப்போற சங்கதி..... சொல்லு ஜெயமணி சொல்லு'

கமலி சொல்வதில் நியாயம் கண்டநான் எதுவுமே அவளிடம் கதைக்க முடியாது மௌனியாக இருந்தேன்.

'ஜெயமணி, உண்மையிலை அன்பான நல்ல கணவன் திடீரென இறந்தால் மனைவிக்கு அது பேரிழப்புத்தானடி. ஆனால் நான் கலியாணம் கட்டியவன் ஒரு பிசாசடி. அந்தப் பிசாசு இல்லாமல் போனதிலை, என்னை விட்டு அகன்றதிலை எனக்கு கவலை ஏதுமில்லையடி. மாறாக நிம்மதிதானடி எனக்கு. இப்பதானடி எனது வீடு வீடாயிருக்குதடி. இல்லையெண்டா நித்தமும் இங்கை அழுகையும் சண்டையுந்தானடி.

என்ரை மூண்டு பிள்ளையளும் இப்பத்தான் ஒழுங்கா நிம்மதியா சாப்பிடுதுகளடி. ஒழுங்கா பள்ளிக்கு போகுதுகள். மனிசன் இருக்கேக்கை பட்டினியிலை பிள்ளையள் துவண்டுபோன நாளுகள்தானடி அதிகம்.

நான் தையல் தைச்சு உழைச்சு மானத்தோடை வாழுறன். சந்தோஷமாயுமிருக்கிறன். ஏனடி ஜெயா நான் வெளியிலை துக்கமாயிருக்கிறன் எண்டு பாசாங்கு காட்டவேணும். தலைவிரி கோலமாயும், அழுக்கு உடுப்போடையும், போட்ட குங்குமப் பொட்டை அழிச்சுப்போட்டு மூழியாய் காட்சிதர வேண்டும். என்னைப் பத்தி எவனும், எவளும் எதையும் நினைக்கட்டும். அவங்களுக்குப் பயந்து இந்தக் கமலி வாழத்தயாரில்லை. இனியொரு ஆண்வாசனை எனக்குத் தேவையில்லை. ஒரு தடவை பட்டது போதுமடி. ஜெயா நீ கொடுத்து வைச்சவளடி. உனக்குக் கிடைச்ச மாதிரி நல்ல புருஷன் ஒருத்தன் எனக்குக் கிடைச்சு அவனை நான்

இழந்திருந்தால் நிச்சயம் வீட்டுக்குள்ளை சிறை இருந்திருப்பன். சிலவேளை அவனோடை சேர்ந்து அன்றில் பறவையைப்போல உசிரை விட்டிருப்பன். அடியும் உதையும், அடாவடியுமாய் மனைவிமாரை போட்டுப் பாடாய் படுத்திற கணவர்மாரை இழந்த பெண்கள் ஏன் போலித்தனமாய் சோக முகங்காட்டவேணும். அசோகவனத்துச் சீதையாய் மாறவேணும். இந்த ஆணாதிக்க சமுதாயத்திலை தலை நிமிர்ந்து மானத்தோடை நாங்கள் வாழ்ந்து காட்டவேணுமடி ஜெயா... வாழ்ந்து காட்டவேணுமடி'

ஆக்ரோஷமாகவும், ஆணித்தரமாயும் ஓர் எரிமலையாய் கொட்டி நின்ற கமலியைப் பார்த்த எனக்கு பாரதியின் புதுமைப்பெண் மறுபிறவி எடுத்து வந்துவிட்டாளோ என ஒரு மனப்பிரமை ஏற்பட்டது. அதுமாத்திரமல்ல எனக்குள்ளே இதுவரை நிலைகொண்டிருந்த பழைய,. சம்பிரதாயக்கோட்டை தடதடவென சரிந்து வீழ்வதுபோலொரு எண்ணப்பாட்டையும் தோற்றுவித்தது.

அதற்கிடையில் கமலி எனக்குத் தேநீர் கொண்டுவர அடுக்களைக்குள் நுழைந்தாள்.

'நான் ஒரு பட்டதாரி. ஆனால் நான் கற்றுக்கொள்ளாத பாடத்தை தனது வாழ்க்கையூடாக கமலி கற்றுத்தேறி ஒரு புதுமைப் பெண்ணாக தலைநிமிர்ந்து நிற்பதை எண்ணி வியந்து நான் என்னைமறந்து இருக்கையில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தேன்.

தேநீருடன் வந்த கமலியின் வருகை என்னை சுயநினைவுக்கு மீட்டெடுத்தது. அத்தருணம் பள்ளிக்கூடம்விட்டு திரும்பி வந்திருந்த அவளது மூண்டு பிள்ளைகளும் அழகிய சீருடையில் செவ்வந்திப் பூக்களைப் போல புன்னகைத்தபடி என்னை சூழ்ந்துகொண்டு புதினமாக என்னை நோக்கினர்.

அவள் தந்த தேநீரை அருந்திவிட்டு, எனது 'கான்பாக்கை' திறந்து கமலிக்குக் கொடுப்பதற்காகக் கொண்டுவந்த பணத்தை எடுத்து பிள்ளைகள் மூவரையும் அருகே கூப்பிட்டு அவர்களின் கைகளுக்குள் பணத்தை வைத்து வாஞ்சையுடன் அவர்களை கட்டித் தழுவி முத்தமிட்டேன்.

என்னை அறியாமல் கலங்கிய எனது கண்களிலிருந்து சொரிந்த கண்ணீர்த்துளிகள் அவர்களது சீருடைகளில் பட்டுத்தெறித்தது.

○○○

சாதி சாதித்ததென்ன சோதி!

சாதி சாதியென்றே சிறுமைத்தனத்து
சங்கடந்தான் பிறர்க்கீயும் சாதிபேசி
நீதவான் நாங்கள் தானெனப்பேசும்
நீதமற்றாரின் பண்பை ஏதென்பேன்!

உயர்சாதி நாமென்று பிறரைத்தான்
உயர்விலா இழிசாதி என்றுரைத்து
பெயர் புதியன அவர்க்கியற்றி
பெருமை பெற நினைப்பவர்னர்!

இறையைப் பணியுமிடமும் இதமான
இத்தரையும் நமக்கே சொந்தமென்று
மறைவாக கள்ளுண்டும் உள்தீயொடு
மற்றவரைத் தீண்டு மிவர் உயர்சாதியாம்!

சாதிகளிற் பல சாதிகள் சேர்த்து
சாதியுயர்வு எம்சாதிக்கென்றே ஓதி
நீதியான மானுடனை நல்லவனை
நிம்மதி யிழக்கச்செயு மிவனென் சாதி?

தம்முண்டி வளர்வதற்காய் பிறரைவைது
தம்மாளம் தப்புத்தப்பாய் பறையடித்து
இம்மண்ணின் வாழும் மானுடனின்
இன்பந்தான் கெடுக்கும் இவனென் சாதி?

தலித் என்ற பெயர் வைத்ததெங்ஙனம்நீ?
தரணியினின் நாற்சாதி உருவாக்கியதேன்?
கலியேதான் கண்கெட்ட செயலாற்றத்தான்
சாதிதான் சாதித்ததென்ன உன்னில்சோதி?

-கலைமகன் பைரூஸ்

குமரிக் கண்டமும் சேர்ந்தழியும் புலம்பெயர் இலக்கியமும்

நூலகவியலாளர் செல்வராஜாவின் புதியநூல் பற்றியதொரு குறிப்புரை

இந்தியாவை காலனித்துவ ஆட்சியின்கீழ் கொண்டுவந்த ஆங்கிலேயர்கள் அதற்கான வரலாற்றுப் பின்புலங்களைத் தேடினார்கள். அவர்கள் இந்தியாவில் வரலாறே ஆவணபூர்வமாக இல்லையென்பதை அறிந்து இந்தியர்களுக்கு வாய்வழி வரலாறு மட்டுமே உள்ளது என்றும் எழுத்துவடிவில் சரியாக எதுவும் இல்லை என்றும் அறிவித்தார்கள். அது இன்றளவும் ஓரளவு உண்மையாகவும் உள்ளது.

தமிழனின் வரலாறும் அவன் இலக்கியத்துக்கு ஆற்றிய தொண்டும் பாதி நீரில் அழிந்தது, மீது அழிக்கப்பட்டது.வெறும் ஓலைச்சுவடிகளில் இருந்ததால் எத்தனையோ அரிய படைப்புகள் செல்லரித்துப் போயிற்று.

இன்று எல்லா இலக்கியங்களையும் ஆவணப்படுத்தும் கணிணி வசதிகள் இருந்தும் 'மதுரைத்திட்டம்' என்ற ஓர் அமைப்பு இவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் இறங்கியது. மலேசியாவில் நடந்த கணினி பற்றிய மாநாட்டில் பத்தாயிரம் அமெரிக்க டாலர்களை அப்போது மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த டத்தோ ஸ்ரீ சாமிவேலு நன்கொடையாக வழங்கினார். இதுவரை எத்தனை புலம்பெயர் இலக்கியங்கள் அதில் ஆவணப்படுத்தியுள்ளார்கள் என்பது தெரியவில்லை.

இன்று ஒரு பதுங்குகுழியிலிருந்து குரல் எழுப்ப மட்டுமே நம்மால் முடிகிறது.

மலேசிய தமிழ் இலக்கிய வரலாறு ஒரு இருநூறு ஆண்டுகள் கொண்டது என்றால் அதிலும் கிடைத்தது பாதி காணாமல் போனது மீதி.

தமிழ் நாட்டில் உள்ள ஆய்வாளர்கள் குமரிக்கு அப்பால் தமிழ் இலக்கியத்தில் என்ன நடக்கிறது என்பதை அறியாமலேயே இருக்கிறார்கள். அவர்களின் ஊர்களில் உள்ள குட்டைகளில் கிடைக்கும் தெப்பக் கட்டைகளைப் பிடித்துக்கொண்டு நீச்சல் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

மலேசியாவில் தனிநாயக அடிகளார் மலாயா பல்கலைக்கழகத்தில் தமிழ்துறைத் தலைவராக இருந்தபொழுது நம்பகமாகச் சில செயல்களைச் செய்தார். அவற்றில் முதலில் குறிப்பிட வேண்டியது கல்கி கருத்தரங்கமாகும். 'கல்கி' அவர்களுக்கு மலாயா எழுத்தாளர் சங்கத்தோடு அவர் இணைந்து நடத்திய அக்கருத்தரங்கம் ஒரு மாற்றுப்

சை.பீர்முகம்மது
(மலேசிய எழுத்தாளர்)



பார்வையை ஏற்படுத்தியது மட்டுமல்லாது மலேசிய தமிழ் இலக்கிய உலகிலும் புதியதொரு சிந்தனைப் போக்கைக் கொண்டு வந்தது.

அவர் ஆற்றிய பெரும்பங்கு உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு, மாநாட்டுக் குழுவில் நானும் இருந்த காரணத்தால் அவர் ஒரு வாலிபனைப் போல் ஓடி ஓடி வேலை பார்த்ததை நேரில் பார்த்தவன்.

அடிகளார் இலங்கையைச் சேர்ந்தவர். இலங்கையர்கள் மலேசிய தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய பங்கு போலவே இப்பொழுது ஒரு உலகப்பார்வைக்கு எங்களைக் கொண்டு வந்துள்ளார் நூலக வியலாளர் என்.செல்வராஜா அவர்கள்.

இலக்கியப் போக்குகள் ஒவ்வொரு தலைமுறையிலும் மாற்றங்களைப் பெற்றே வளர்ந்துள்ளன. நமது சங்க இலக்கியங் களிருந்து இன்றைய இலக்கியப் போக்கின் வரலாற்றைக் திரும்பிப் பார்த்தால் இது விளங்கும். இலக்கிய வரலாறு ஒவ்வொரு மொழிக்கும் மிக முக்கியமானது. ஆனால் தமிழைப் பொறுத்தவரையில் 'வரலாறு' என்பது கண்டு கொள்ளப்படவேயில்லை.

தமிழ் இலக்கியத்தை நமது இலக்கணத்தில் கூறப்படுவது போல் ஐந்திணைகளில் இப்பொழுது அடக்கிவிட முடியாது. தென்குமரி,வடவேங்கடம் வரையிருந்த தமிழ் வேறு இன்றுள்ள தமிழின் பரப்பு வேறு. ஐந்திணைகளில் பனி கொட்டும் நாடுகளில் வளர்ந்து வரும் தமிழ் இலக்கியத்தை நாம் அடக்கிவிட முடியாது. வட வேங்கடம் தென்குமரிக்கு அப்பால் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மட்டுமல்லாது உலகின் ஐந்து கண்டங்களிலும் தமிழ் இலக்கியம் அதனதன் போக்கில் உருப்பெற்று வளர்ந்து வருகிறது.

திரு.என்.செல்வராஜா அவர்கள் இந்தத் தமிழகத்துக்கு வெளியே யுள்ளபடைப்புகளை அடை யாளப்படுத்துவதை தன் நோக்கமாகக் கொண்டு பல அருமையான பணிகளைச் செய்து வருகிறார்.

இலங்கையில் ஒரு நூலகராகப் பணியாற்றிய அவரின் அரிய பணிகளில் மிகச் சிரமத்துடன் அவர் திரட்டிவருகின்ற 'நூல்தேட்டம்' சாதாரணமாக இப்பொழுது தெரிந்தாலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் எதிர்காலத்தில் அது எவ்வளவு பெரிய பணி என்பதை உலகம் அறியும்.

இதுவரை இலங்கையில் வந்த நூல்களின் விபரங்களை சிறிய குறிப்புரையுடன் வகுப்புவாரியாக அவர் தொகுத்துள்ளார் என்பதோடு, தொடர்ந்து வெளிவரும் நூல்களை யும் தேடித்தேடி அவற்றை ஆவணப்படுத்தும் வேலையிலும் ஈடுபாடு கொண்டுள்ளார். மலேசிய தமிழ் நூல்களின் பட்டியலை தயாரிக்க அவர் பட்டபாடு நான் பக்கத்தில் இருந்து பார்த்தவன்.

மலாயா பல்கலைக்கழகத்தின் இந்தியப் பிரிவுக்குத் தலைவராக வந்த டாக்டர் இராம. சுப்பையா அவர்கள் 'தமிழ் மலேசியானா' என்ற பெயரில் ஒரு நூல் திரட்டைக் கொண்டு வந்தார். அதன்பிறகு அதைத் தொடர பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் யாரும் முயற்சிக்கவில்லை. 1969ல் வெளிவந்த அந்த நூல் அப்பொழுது எனக்குச் சாதாரண முயற்சி எனப்பட்டது. 1968 வரை வெளியான நூல் களின் பட்டியலில் 401 தமிழ் நூல்களும் 271 தமிழ் சஞ்சிகைகளும் இடம் பெற்றுள்ளன.

இந்த நூல் எவ்வளவு பெரிய புதையல் என்பதை காலம் எனக்கு உணர்த்தியது. இலங்கையில் நூல் திரட்டு வெளியிட்ட திரு. என்.செல்வராஜா அவர்கள் லண்டனிலிருந்து மலேசியா வந்து பல நாட்கள் தன் சொந்த

செலவில் தங்கி 'மலேசிய-சிங்கப்பூர் நூல் தேட்டத்தை' உருவாக்கினார். என்னோடு தங்கி எனது நூலகத்தில் நான் சேர்த்து வைத்திருந்த மலேசிய நூல்களை விடாமல் குறிப்பெடுத்து சேர்த்தபொழுது தான் இப்படியான நூல் திரட்டு எதிர்கால சந்ததியினருக்கு எவ்வளவு முக்கியம் என்பதை அறிந்தேன்.

இந்த நேரத்தில் ஒரு மலேசிய எழுத்தாளன் என்ற முறையில் டாக்டர் இராம. சுப்பையா அவர்களுக்கும் என்.செல்வராஜா அவர்களுக்கும் எனது நன்றிக்குரிய வணக் கத்தைச் செலுத்துகிறேன்.

செல்வராஜாவின் மலேசிய வருகைக்குப் பிறகு அவர் லண்டனில் நடத்திய மலேசிய இலக்கிய விழாவும் அதையொட்டிய நூற் காட்சியும் தேசம் இதழின் மலேசிய சிறப்பி தழும் வரலாற்றுப்பதிவு. மலேசிய தமிழ் நூல் களைத் திரட்டி அந்த நூற்காட்சிக்கு என் சொந்த செலவில் அனுப்பிவைத்தேன். இப்பொழுது லண்டனில் உள்ள அவரதுஆய்வு நூலகத்தில் (ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகம்) அந்த நூல்கள் பாதகாப்பாக இருப்பது, எதிர் காலத்தில் அது தரப்போகும் நன்மைக ளுக்காகவே. திரு.செல்வராஜா என்ற தன்ன லமற்ற ஒரு இலங்கைக்காரரால் தான் இது சாத்தியமாகியுள்ளது. மீண்டும் ஒரு சல்யூட் உங்களுக்கு செல்வராஜா.

'மலேசியாவில் தமிழ்: பார்வையும் பதிவும்' என்ற இந்த நூல் சிறிய அடையாளமாக இருந்தாலும், எதிர்காலத்தில் விரிவான தொகுப்புகள் வெளிவர இதுவே முதல் தூண்டு தலான நூல். இதை யார் தொடங்குவார் என்ற நீண்டநாள் கேள்விக்கு இலங்கையில் பிறந்து இப்பொழுது லண்டனில் வாழும் செல்வராஜா அவர்களின் மூலமே விடை கிடைத்துள்ளது.

இலங்கையர்கள் - குறிப்பாக யாழ்ப் பாணத் தமிழர்களின் பங்களிப்பு ஆரம்ப காலகட்டத்தில் மிகுதியாக இருந்தது. இதற்கு அவர்கள் கல்வி கற்றவர்களாக இருந்தது ஒரு காரணம்.கூலித் தொழிலாளர்களாக மலாயா வந்த தமிழர்கள் பிற்காலத்தில்தான் கல்வி கற்று இரண்டாம் உலகப் போரின் பொழுது இலக்கியம் படைத்தார்கள்.

செல்வராஜாவின் இந்த நூலை மட்டுமல்லாது அவரது மலேசிய நூல் திரட்டையும் இணைத்துப் பார்த்தால் ஒரு காலகட்டத்திற்குப் பிறகு யாழ்ப்பாணத் தமிழர்களின் இலக்கியப் பங்களிப்பு குறைந்து விட்டது என்பதைக் காணலாம். ஆங்கில வழிக் கல்வி அவர்களின் பாதையை மாற்றி விட்டது. இன்ஜினீயர், டாக்டர், வழக்கறிஞர் என்று போன பிறகு தமிழ் இலக்கியம் படைக்கும் பாதை மாறிவிட்டது. சென்ற தலைமுறையினர் தமிழ் வாசிப்பில் மட்டுமல்ல படைப்புகளிலும் கவனம், மிகக் குறைந்து விட்டது.

தோட்டத்துத் தமிழ்ப்பள்ளிகளில் கல்வி கற்ற சாதாரண தமிழர்களே பிற்காலத்தில் இலக்கிய ஈடுபாடு கொண்டு இன்றளவும் படைப்புகளைப் படைத்து வருகிறார்கள்.

மலாயா 1957 ஆகஸ்ட் 31ம் நாள் சுதந்திரம் பெற்ற பிறகே தமிழர்களுக்கு சற்றே சிறிதாக பல்கலைக்கழகத்தின் கதவு திறந்தது. 1960களில் கூட ஒரு தமிழ்ப் பட்டதாரியை ஆச்சரியத்தோடு பார்க்க வைத்த காலம் ஒன்று இங்கு இருந்தது. மலேசியாவிற்கு வெளியே மலேசியப் படைப்புகளைக் கொண்டு செல்வதில் செல்வராஜா அவர்களின் பங்களிப்பு மிகப் பெரியது.

இப்பொழுதும் இந்த நூலைக் கொண்டு வருவதின் மூலம் தனது பாதையை எங்களுக்காக விரிவாக்கியுள்ளார். இதை மலேசிய இலக்கியப் படைப்பாளிகள் தொடர வேண்டும். எந்த ஒரு செயலுக்கும் ஒரு தொடக்கம் வேண்டும். அதை தொடக்கியுள்ளார் இந்த நூலாசிரியர்.

வரலாறுகள்தான் ஓர் இனத்தின் அடை யாளம். அதை பதிவு செய்துள்ள செல்வராஜா அவர்களின் பங்கு இத்தோடு நின்று விடக் கூடாது என்ற கேட்டுக் கொள்கிறேன். தமிழர் களுக்கு நன்றி உணர்வு குறைவு. அதை மனதில் கொள்ளாமல் மேலும் மேலும் இந்த முயற்சியில் அவர் ஈடுபட வேண்டும்.அவர் மலேசியாவில் வெளியான அண்மைய நூ ல்களின் ஒரு திரட்டையும் கொண்டு வரும் முயற்சியில் உள்ளார்.

ஒரு போர் வீரனுக்கு எப்பொழுதும் கடமைகள் இருந்து கொண்டே இருக்கும். அவர் ஓர் இலக்கியப் போராளி. இந்த நூல் அவர் பல காலம் பல ஏடுகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. எதை மனதில் நினைத்துக் கொண்டே இருந்தாரோ அவை களை ஆவணப்படுத்தியுள்ளார்.

தொடருங்கள் செல்வராஜா!

○○○

பிரயோக ஒழுக்கவியலில் பேசப்படும் ஒழுக்க நியமங்கள் ஒரு நோக்கு

ஆரம்ப காலத்தில் ஒழுக்கவியல் மெய்யியலின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்தது. காலப் போக்கில் அதன் ஆய்வுப் பரப்பு விரிந்து கொண்டே சென்றபோது அதனை ஒரு தனிப் பிரிவாக நோக்க ஆரம்பித்தனர். இவ்வகையில் அண்மைக் காலமாக நியமரீதியான ஒழுக்கவியல் அதீத ஒழுக்கவியல் என்ற வரிசையிலே பிரயோக ஒழுக்கவியலும் ஒழுக்கவியல் பரப்பில் கூடுதலான இடத்தினை வகிக்கின்றது. இது நாளாந்த நடைமுறைப் பிரச்சினை தொடர்பாகத் தனது ஆராய்ச்சியினை முன்னெடுக்கின்றது. இவ்வகையில் இவ் ஒழுக்கவியலானது மனித வாழ்க்கையுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்ற ஒவ்வோரு துறையுடனும் அதிகளவில் தொடர்புபட்டுக் காணப்படுவதுடன் அந்தந்தத் துறைக்குரிய ஒழுக்க விழுமியங்களை எடுத்துரைப்பதாகவும் உள்ளது எனலாம். இவ்வகையில் நோக்குகின்ற போது

1. பாலியல் ஒழுக்கம்
2. மருத்துவ ஒழுக்கம்
3. வியாபார ஒழுக்கம்
4. விஞ்ஞான தொழில்நுட்ப ஒழுக்கம்
5. மிருகங்களது உரிமை தொடர்பான ஒழுக்கம்

என்றவாறாகப் பிரயோக ஒழுக்கவியலின் பரப்பு விரிந்து செல்வதைக் காணலாம்.

எனவே பிரயோக ஒழுக்கவியல் என்பது நடைமுறைப் பிரச்சினைகளுடன் அதிகளவில் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளமையினைக் காணலாம். பிரயோக ஒழுக்கவியலுக்கான சிந்தனைகள் ஆரம்ப காலங்களில் அதிகளவில் இடம்பெற்றிருக்கவில்லை. தனி மனித ஒழுக்கம் சமூக ஒழுக்கம் என்பவற்றுடன் ஏனையவர்களுடன் நடந்து கொள்வது எப்படி போன்ற வாதங்கள் பிரயோக ஒழுக்கவியலில் அடிப்படையாக அமைந்துள்ளது எனலாம். சிலர் பிரயோக ஒழுக்கவியலையும் மெய்யியலையும் ஒரே விடயமாகக் கருதுகின்றனர் ஆனால் இவற்றுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரயோக ஒழுக்கவியல் பல பிரிவுகளுடன் தொடர்புடைய ஒரு துறையாக உள்ள அதேவேளை பிரயோக ஒழுக்கவியலும் மெய்யியலின் ஒரு வகையாகும். பிரயோக ஒழுக்கவியல் நடைமுறைப் பிரச்சனைகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

இவ்வகையில் பிரயோக ஒழுக்கவியலில் பயன்படுத்தப்படுகின்ற பிரயோகம் (Applied) என்ற சொல் விமர்சிக்கப்படுகின்றது. ஏனெனில் பிரயோகிக்கப்படாமல் ஒழுக்கங்கள் இல்லை என்ற வாதமும் சிலரால் முன்வைக்கப்படுகின்றது. இவ்வகையில் தனிநபர் ஒழுக்கங்களை மட்டுமன்றி பொது ஒழுக்கவியலையும் பிரயோக ஒழுக்கவியல் அடிப்படையாகக் கொண்டுள்ளது எனலாம். எனவே பிரயோக ஒழுக்கவியல் பாடப்பரப்பினுள் உள்வாங்கப்பட்டுள்ள விடயங்களை இங்கு சுருக்கமாக தனித் தனியாக நோக்குவோம்.



புலேந்திரன் நேசன்,
(மெய்யியல் உளவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.)

வைத்திய ஒழுக்கவியல்

பிரயோக ஒழுக்கவியலில் ஆய்வுப் பரப்புக்களில் ஒன்றான வைத்திய ஒழுக்கவியல் பற்றி நோக்கும் போது அங்கு வைத்தியர்கள் தமது வைத்தியத் தொழிலில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் யாவை அதாவது

எவற்றினை பின்பற்றுதல் வேண்டும் எவற்றினை பின்பற்றுதல்கூடாது என்பன பற்றிக் கூறுகின்றது. நினைவுக்கு எட்டாத காலம் முதலே வைத்தியத் தொழிலுக்கு ஒழுக்கங்கள் இருந்து வந்துள்ளன. பபிலோனியா ஹமுறாபிப் பிராமணங்கள் இத்தகையன ஆகும். இவற்றுள் ஹிப்போக்ரடீஸின் சத்தியப்பிரமாணம் (The Hippocratic oath) 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். வைத்தியர்களின் கடமையும் அவர்களின் தொழில்ரீதியான கட்டுப்பாடுகளையும் ஒழுக்க அடிப்படையில் இது வற்புறுத்துகின்றது. இன்று வைத்தியர்களுக்கான ஒழுக்க வழிகாட்டுதல்களை சர்வதேச வைத்தியத் தொழில் நிறுவனங்கள் புதிதாக உருவாக் கியுள்ளன.

1. The Geneva Convention of Medical Ethics Was adopted by the world Medical Association in 1949
2. The international Council of Nurse- 1953 International code of Nursing Ethics

இவ்வகையில் பிரயோக ஒழுக்க வியலானது மருத்துவ ஒழுக்கவியலில் கூறப்படுகின்ற மரணம் தற்கொலை சுகமரணம் கருக்கலைப்பு நோயாளர் வைத்தியர் உறவு செயற்கை குழந்தைப்பேறு போன்ற விடயப் பொருட்கள் குறித்த ஒழுக்கவியல் பெறுமானங்களை நடைமுறையில் பொருத்தப் பாடு காண்கின்றது. மருத்துவ ஒழுக்கவியலின் முக்கியத்துவம் யாது? அதனை எந்த அடிப் படையில் பின்பற்றுதல் வேண்டும்? மருத்துவ ஒழுக்கவியலை மீறுவதனால் ஏற்படும் விளை வுகள் யாவை? மருத்துவ ஒழுக்கவியல் மீறப் படாது இருப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை? என்றவாறாக வினாக்களை எழுப்பி விடை காண முற்படு கின்றது.

எடுத்துக்காட்டாக வைத்திய ஒழுக்க வியலில் கருக்கலைப்பினால் ஏற்படும் ஒழுக்கவியல் பிரச்சினைகள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. கருக்கலைப்பு பற்றிய ஆதரவான கருத்துக்களும் எதிரான கருத்துக் களும் காணப்படினும் ஒழுக்கவியல் அல்லது மருத்துவ ஒழுக்கம் என்ற அடிப்படையில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. உதார ணமாக பாடசாலை மாணவி ஒருத்தி கருக் கலைப்பை மேற்கொள்ளும்படி தனது குடும்ப வைத்தியரிடம் கேட்கும்போது அவர் கருக்கலைப்பிற்குரிய மருந்தை எழுதிக் கொடுப்பதா அல்லது மாணவி கருவுற்றிருப்பதை அவளது பெற்றோரிடம் கூறுவதா? இங்கு கருக்கலைப்பிற்கு மாத்திரை எழுதிக் கொடுத்தால் கருக்கலைப்பிற்கு உடந்தையாகமாட்டேன் (Hippocratic oath) என்ற அவரது வைத்திய ஒழுக்கவியலை மீறுபவராகக் கருதப்படுவார். மாறாக மாணவியின் கருக்கலைப்பை பற்றி அவளின் பெற்றோரிடம் கூறினால் நோயாளிகளின் இரகசியத்தினை பாதுகாப்பேன் என்ற வைத்திய ஒழுக்கம் மீறப்பட்டுவிடும் எனவே இத்தகைய பிரச்சினைகள் தொடர்பாக பிரயோக ஒழுக்கவியலானது நடைமுறைப் பிரயோகத்தின் மூலமாக ஆராய்கின்றது எனலாம்.

பாலியல் ஒழுக்கம்

பிரயோக ஒழுக்கவியலின் ஆய்வுப் பரப்பில் உள்வாங்கப்பட்ட விடயங்களுள் பாலியல் ஒழுக்கமும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பாலியல் பற்றிய ஆய்வுகள் ஆரம்பகாலம் முதல் ஒழுக்கவியல் பரப்பிற்குள் உள்வாங்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வந்தாலும் தற்காலத்தில் பிரயோக ஒழுக்கவியல் ரீதியாக அதன் ஆய்வுகள் பாலியல் என்பதற்கான உண்மை விளக்கம் முறையான முறையற்ற பாலியல் நிலமைகள் பாலியலில் நீதியும் நீதியற்ற தன்மையும் பாலியலின் சட்டரீதியான சட்டரீதியற்ற நிலைமைகள் என்பவற்றோடு பாலியல் தொடர்பாக காணப்படுகின்ற அடிப்படை

கருக்கலைப்பு பற்றிய ஆதரவான கருத்துக்களும் எதிரான கருத்துக்களும் காணப்படினும் ஒழுக்கவியல் அல்லது மருத்துவ ஒழுக்கம் என்ற அடிப்படையில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. உதாரணமாக பாடசாலை மாணவி ஒருத்தி கருக்கலைப்பை மேற்கொள்ளும்படி தனது குடும்ப வைத்தியரிடம் கேட்கும்போது அவஉ கருக்கலைப்பிற்குரிய மருந்தை எழுதிக் கொடுப்பதா அல்லது மாணவி கருவுற்றிருப்பதை அவளது பெற்றோரிடம் கூறுவதா?

ஒழுக்கவியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்ற ரீதியில் விரிந்து செல்வதைப் பிரயோக ஒழுக்கவியல் பரப்பிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வகையில் பாலியல் நடத்தையின் போதான ஒழுக்கவியலை நோக்குவோமாயின் பல்வேறுபட்ட வடிவங்களில் மேற்குறித்த விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன'.

முதலாவது விடயம் இயற்கைச் சட்டத்திற்கும் பாலியலிற்குமுள்ள தொடர்பாகும். இக் கருத்து தோமஸ் அக்குவைனாஸ் தொடக்கம் இமானுவல் கான்ற் வரைக்கும் பேசப்பட்டு வந்தது. இங்கு பாலியல் என்பது சமயரீதியாக ஒழுக்கமற்றது என்றும் எனவே அது தடுக்கப்பட வேண்டியது என்றும் மீள் கட்டுமானத்திற்குரியது என்றும் வலியுறுத்தப்பட்டது.

இரண்டாவது வாதம் பாலியல் என்பது இருவரின் மனம் சம்பந்தப்பட்டது ஆனாலும் அது மூன்றாவது நபரைத் தாக்கக் கூடியதா என்பதுடன் தொடர்புடையதாகும். அதாவது பாலியல் நடத்தையில் ஈடுபடுகின்ற இருவரும் பாலியலில் திருப்தியடைய வேண்டும் என்பதாகும். இருவருள் ஒருவர் மட்டும் பாலியல் நடத்தையின்போது திருப்தியடைவாராயின் அது ஒழுக்கத்திற்கு மாறானதாகும். எனவே இங்கு இமானுவல் கான்ற் முதலானோர் சட்டரீதியாக பாலியல் இன்பம் பெறுவதற்கான வழிமுறையாக திருமணத்தையே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மூன்றாவது வாதம் தனிப்பட்ட பாலியல் நடத்தை என்றால் என்ன? அது பாலியல் ஒழுக்க வரையறைக்குட்பட்டதா? என்பதாகும். இதனை மாக்சிஸ வாதிகளும் தற்காலப் பெண்ணிலைவாதிகளும் ஏற்கின்றனர். இது மனித இன உடல் உள வேறுபாடுகளை மறுக்க முயலும் ஒரு ஒழுக்க முரணாகும்.

நான்காவது வாதம் பாலியல் இன்பத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டதா என்பதாகும். இன்ப பயனிலை வாதிகள் இதனை ஏற்றனர். அத்துடன் J.S.Mill Steavansan போன்ற பயனிலைவாதிகள் இதனை மறுக்கின்றனர்.

எது எவ்வாறாக இருப்பினும் மனிதனது வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி அவனது பிறப்பு வாழ்வின் நோக்கம் என்பவற்றை அடைய அவனுடைய பாலியல் வாழ்வு ஒழுக்க ரீதியாக நெறிப்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய நெறிமுறைகளையும் வழிமுறைகளையுமே பிரயோக ஒழுக்கவியலில் ஆராயப்படுகின்றது என்பது தெளிவாகும்.

விஞ்ஞான தொழில்நுட்ப ஒழுக்கம்

அவ்வாறே பிரயோக ஒழுக்கவியலின் ஆய்வுப் பரப்புக்களில் ஒன்றான விஞ்ஞான தொழில்நுட்ப ஒழுக்கங்கள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனித வாழ்க்கையில் விஞ்ஞான தொழில்நுட்பங்களின் தாக்கம் அதன் எல்லைகளைக் கடந்துள்ளது. விஞ்ஞான தொழில்நுட்பங்கள் தந்துள்ள நன்மைகளை (For example computer internet email...etc) அளவிட்டுக் கூறமுடியாதாயினும் விஞ்ஞானத்தினால் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் (For example 1st and 2nd world war ....etc) சாதாரணமானதன்று. மனித வாழ்வையும் இருப்பையும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளன. மறுபுறம் மனித விழுமியங்களிலும் மனிதப் பண்பாடுகளிலும் விஞ்ஞானம் பெரும் தாக்கத்தினையும் அறநெறிகளில் பெரும் விரிசலையும் தோற்றுவித்துள்ளது எனலாம்.

இவ்வகையிலே பிரயோக ஒழுக்கவியலானது விஞ்ஞானிகள் தொழில் நுட்பவியலாளர்கள் என்போர்க்குரிய ஒழுக்கங்கள் யாவை? விஞ்ஞான தொழில்நுட்பங்களில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள் யாவை? அவற்றினை மீறும்போது ஏற்படும் விளைவுகள் யாவை? இத்தகைய விளைவுகள் ஏற்படாது தவிர்ப்பது எப்படி? என்றவாறாக ஆய்வினை மேற் கொள்வதினைக் காணலாம்.

இன்று பிறப்பு மரபியல் பொறிமுறையானது மனித வாழ்வில் பல முன்னேற்றகரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன் பல பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகின்றது. நிறமூர்த்தங்கள் அல்லது உயிரணுக் கோல்களின் (Chromosomes) கட்டமைப்பு மனிதனால் மாற்றப்படுகின்றது. ஜீன்கள் (Genes) ஒரு உயிரிலிருந்து மற்றொரு உயிருக்கு மாற்றப்படுகின்றது. இங்கு மனித ஜீன்கள் மட்டுமல்ல ஒரு தாவரத்தின் ஜீன் இன்னொரு விலங்கிற்கும் மாற்றப்பட்டு விளைச்சல் அதிகரிப்பது உட்பட பிறப்பு மரபியல் பொறியியலும் உயிரியல் தொழில்நுட்பமும் இணைந்து பயனுள்ள பல முன்னேற்றங்களை நிகழ்த்தியுள்ளன.

முன்னேற்றங்கள் ஒரு புறம் இருந்தாலும் இத்தகைய பிறப்பு மரபியல் பொறியியலானது மனித வாழ்வின் யதார்த்தத்தினைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. மனித உறவுகளில் பல மாறுதல்களினை ஏற்படுத்தியுள்ளதுடன் மரணத்தினைப் பற்றிக்கூட மனிதன் தற்போது கொண்டுள்ள கருத்துக்களைப்

புதிது புனையும் இது போன்ற விஞ்ஞான நடவடிக்கைகள் மாற்றியமைக்கலாம். பிறப்பு மரபியல் பொறிமுறையில். இன்று ஏற்பட்டுள்ள பிரதான ஐயம் மனிதன் தனது கைகளினாலேயே மாறுபட்ட மற்றொரு மனித வகையை உருவாக்கக்கூடும் என்பதாகும். இது தவிரவும் மனித குலத்திற்கு அழிவினை ஏற்படுத்தும் நுண்ணுயிர்களையோ ஆய்வு கூட விலங்கினங்களையோ உருவாக்கக்கூடும் என்ற ஐயமும் மனிதனுக்கு வளர்ந்து வருகின்றது.

இவ்வாறாக இன்று பிரயோக ஒழுக்கவியலில் விஞ்ஞான தொழில்நுட்பம் தொடர்பான ஒழுக்கக் கருத்துக்கள் நடைமுறையில் பல பிரச்சினைகளும் எடுத்துக் காட்டப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன எனலாம்.

விலங்குகளின் ஒழுக்கம்

பிரயோக ஒழுக்கவியலின் பாடப்பரப்புக்களில் ஒன்றாகிய விலங்குகளின் ஒழுக்கம் பற்றிய ஆய்வானது விலங்குகளின் உரிமை தொடர்பாக மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள் ஒழுக்க விதிகளினை மீறுவதனால் ஏற்படும் விளைவுகள் என்பன தெளிவு படுத்தப்படுகின்றது. அதாவது மனிதனுக்குள்ள சுதந்திரம் போன்று விலங்குகளுக்கும் சுதந்திரமுண்டு. அவற்றிற்கும் தமது ஆயுட்காலம் வரைக்கும் இந்த பூமியில் வாழ்வதற்கான சுதந்திரம் உண்டு. அவற்றினை வருத்துதல் கூடாது அல்லது வேறு வழிகளில் துன்புறுத்தல் கூடாது என்பன போன்ற எண்ணக் கருக்கள் விலங்கு ஒழுக்கவியல் தொடர்பாக வலியுறுத்தப்படுவதோடு பின்வரும் விடயங்கள் தொடர்பாக பிரயோக ஒழுக்கவியல் விலங்குகளின் ஒழுக்கவியல் தொடர்பாக நடைமுறையில் அக்கறை கொள்கின்றது.

1. மனித ருசிக்காகவும் பசிக்காகவும் விலங்குகளைக் கொலை செய்வது ஒழுக்கவியல் ரீதியானதா?

2. விலங்குப்பண்ணை செயல் முறைகள் ஒழுக்கரீதியானதா?

3. விலங்குகளுக்கு உரிமைகள் உள்ளதா?

அதாவது விலங்குகளின் உரிமைகள் ஒழுக்கங்கள் மீறப்படும் இடங்களாக பின்வருவன எடுத்துக்காட்டப்பட்டு அவை பிரயோக ஒழுக்கவியலில் நடைமுறையில் ஆய்வுக்குட்படுத்தப்படுவதை காணலாம். அத்தகைய சந்தர்ப்பங்கள் வருமாறு.

1. விலங்குகளை மிகவும் கொடூரமான முறையில் அறுத்து உணவுக்காகப் பயன்படுத்துதல் நியாயமானதா?
2. விலங்குகளை காட்சிப் பொருட்களாகப் பயன்படுத்துதல் பொருத்தமுடைய செயலா?
3. விலங்குகளை உளவியல் பரிசோதனைகளுக்காக பயன்படுத்துதல் ஏற்கப்படக் கூடியதா?
4. விலங்குகள் மீது இரசாயனப் பொருட்களை பரிசோதித்துப் பார்ப்பது நியாயமான செயற்பாடா?
5. விலங்குகளை மனிதனது பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்துவது பொருத்தமுடைய செயலா?
6. விலங்குகளை கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்காக கருவி நிலையில் பயன்படுத்துவது பொருத்தமுடையதா?
7. விலங்குகளை வீட்டுச் செல்லப்பிராணி என்ற பெயரில் தன் இனத்திலிருந்து பிரித்து வளர்ப்பது பொருத்தமுடையதா?

எடுத்துக்காட்டாக இஸ்லாமிய மதக் கருத்தின்படி நோக்குகின்றபோது விலங்குகளை உணவுக்காக பயன்படுத்தலாம் ஆனால் அவற்றினை அறுப்பதற்கு முதல் அதன் தேவைகள் நிறைவு செய்யப்படுவதுடன் மிகவும் கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி நோவின்றி அறுத்தல் வேண்டும் எனக் கூறுவதுடன் ஒரு விலங்கினை அறுக்கும் போது மற்றய விலங்குகள் அதனைப் பார்க்கவும் கூடாது ஏனெனில் அறுபடுவதற்கு முன்னே வலியை உணர்ந்துவிடுவதாகக் கூறுகின்றது. ஆனால் நடைமுறையில் நோக்கும்போது இன்று விலங்குகளை மிகவும் கொடூரமான முறையில் அறுக்கின்றனர். இதற்காக கொளுக்கி, மடத்தல் முதலான கொடிய ஆயுதங்களையும் பயன்படுத்துகின்றனர். அதிர்வுகளினாலும் விலங்குகளை அறுக்கின்ற முறைகள் காணப்படுகின்றன. இவற்றின் பொருத்தப்பாடுகள் பற்றி பிரயோக ஒழுக்கவியல் நடைமுறையில் ஆராய்கின்றது.

வியாபார ஒழுக்கவியல்

பிரயோக ஒழுக்கவியலின் பாடப் பரப்புக்களில் ஒன்றான வியாபார ஒழுக்கவியல் பற்றி நோக்குகின்ற போது வர்த்தகத்தின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுக்கவியல் எண்ணக்கருக்கள் எவை? அவ்வாறான ஒழுக்கவியல் விடயங்கள் வர்த்தகர்களினால்

சரியாகப் பின்பற்றப்படுகின்றதா? அவர்களால் பின்பற்றப்படாதபோது ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை? என்றவாறாக பிரயோக ஒழுக்கவியலானது நடைமுறையில் வர்த்தக ஒழுக்கவியலின் பொருத்தப்பாடு யாது என விடை காணமுற்படுகின்றது. எடுத்துக் காட்டாக இன்று வர்த்தகமானது ஒழுக்கத்தினை கடைப்பிடிப்பதற்கு வாய்ப்பற்ற ஓர் இடமாகவே உள்ளது. ஏனெனில் இது அதிகளவில் பணத்துடன் தொடர்புடையதாக பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது. இதனால் வர்த்தகன் ஒருவன் தீய வழிகளிலும் பணத்தைச் சம்பாதிக்க முற்படுகின்றான். உதாரணமாக காலாவதியான பொருட்களை மக்களிடம் விற்று ஏமாற்றுகின்றனர். இவ்வாறான செயற் பாடுகளின் பொருத்தப்பாடு யாது? இதனால் ஏற்படும் விளைவுகள் யாவை? என்றவாறாக பிரயோக ஒழுக்கவியலானது நடைமுறையில் பொருத்தப்பாடு காண முனைகின்றது.

இங்கு வர்த்தக ஒழுக்கம் மீறப்படும் சந்தர்ப் பங்களாக பின்வருவன எடுத்துக்காட்டப்பட்டு அவற்றுக்கான நியாயங்கள் பிரயோக ஒழுக்கவியலில் ஆய்வு செய்யப்படுகின்றன.

1. காலாவதியான பொருட்களை மக்களுக்கு விற்றல்
2. குறைந்த தரமுடைய பொருட்களைக் கூடிய விலைக்கு விற்றல்
3. போலிப் பொருட்களை விற்றல்
4. பொருட்களைப் பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடல்
5. கள்ளச் சந்தை நடவடிக்கைகள்
6. விற்பனைப் பொருட்களுக்கு அதிகளவில் இரசாயனப் பொருட்களைப் பாவித்தல்
7. போலிப் பொருட்களுக்கான அபாரமான விளம்பரங்கள்
8. வர்த்தகர்கள் விற்பனைப் பொருட்களை சுகாதாரமற்ற முறையில் களஞ்சியப் படுத்தி விற்றல்

இன்னும் இன்றைய காலகட்டத்தில் இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி பொருட்களின் தரக்கோட்பாட்டு அமைப்புக் களும் பொருட்களின் விற்பனை தொடர்பாகச் சுகாதார நடவடிக்கைகளினை மேற்பார்வை செய்கின்ற அமைப்புக்களும் விற்பனை நிறுவனங்கள் கொடுக்கின்ற பணத்திற்கு (லஞ்சப்பணத்திற்கு) அடிமையாகிவிடுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. இது வர்த்தக ஒழுக்கத்தினை மீறுகின்ற நடவடிக்கையாகும் இவ்வாறான செயற்பாடுகள் வியாபார ஒழுக்க வியல் தொடர்பாகப் பிரயோக ஒழுக்கவியலில் சுட்டிக் காட்டப்படுவதுடன் நடைமுறைப் பொருத்தப்பாடு காணப்படுகின்றது.

குளோனிங் முறையினைப் பயன்படுத்தி உயிரணு ஆய்வு மற்றும் மருத்துவ குளோனிங் மூலம் புதிய தசைகளையும் உறுப்புக்களையும் வளர்க்கலாம். அத்துடன் பலவகையான நோய்களுக்கும் தீர்வு காண்பதற்கும் இக் குளோனிங் முறையானது பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக குளோனிங் முறையின் பயன்பாட்டுத் தன்மையானது நீண்டு செல்கின்றதாயினும் அதன் தீமைகள் அதாவது சவால்களே மிகவும் பாரதூ ரமானதாகக் காணப்படுகின்றது. அவற்றுள் முக்கியமாக குளோனிங் முறையானது குடும்ப உறவுகளை மாற்றிவிடுவதோடு மனித உறவுகளையும் சமூக இயல்புகளையும் மாற்றிவிடுவதாகவும் உலக ரீதியாகப் பல எதிர்ப்புக்கள் முன் வைக்கப்படுகின்றன.

குளோனிங் (CLONING)

பிரயோக ஒழுக்கவியலின் பாடப் பரப்பினுள் இன்று முக்கியப்படுத்தப்பட்டுள்ளதும் முதன்மை மிக்க பிரச்சினையாகவும் காணப்படுவது மனித குளோனிங் (CLONING) ஆகும். ஏனெனில் இதனால் குறிப்பிடத்தக்க அளவில் மனித சமூகத்திற்கு பயன்பாடுகள் காணப்படினும் இன்று மனிதனது ஒழுக்க விழுமியங்களையெல்லாம் பெரும் சர்ச்சைக் குரியதாக்கியுமுள்ளது. இங்கு குளோனிங் என்பது ஒரு கரு முட்டையிலுள்ள உட் கருவின் மரபணுவை (DNA) தனியே எடுத்து தந்தை ஒருவரின் தோலில் இருந்து எடுத்த ஒரு உயிரணுவுடன் (Shell) சேர்ப்பதன் மூலம் குளோனிங் செய்யப்படுகிறது.

நினைவு மாளிகை

நினைவு மாளிகையில்
முன்னர் சேமித்த
பொருட்கள் யாவும்
இன்னும் அவ்வாறே
உள்ளது
அவற்றால் அதிக
சேவைகளைப் பெற்றுக்
கொண்டேன்
இன்னும் பெறுகிறேன்
எனினும்
நேற்று முன்தினம்
கொண்டுவந்த
பொருட்கள்
வெயிலில் காய்ந்து
மழையில் நனைந்து
புயலுக்குள் சிக்கி
உடைந்து காணப்படுகிறது.

- கலாபூஷணம் எம்.எம். மன்ஸூர்

இந்த குளோனிங் முறையினைப் பயன் படுத்தி உயிரணு ஆய்வு மற்றும் மருத்துவ குளோனிங் மூலம் புதிய தசைகளையும் உறுப்புக்களையும் வளர்க்கலாம். அத்துடன் பலவகையான நோய்களுக்கும் தீர்வு காண்பதற்கும் இக் குளோனிங் முறையானது பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக குளோனிங் முறையின் பயன்பாட்டுத் தன்மையானது நீண்டு செல்கின்றதாயினும் அதன் தீமைகள் அதாவது சவால்களே மிகவும் பாரதூரமானதாகக் காணப்படுகின்றது. அவற்றுள் முக்கியமாக குளோனிங் முறையானது குடும்ப உறவுகளை மாற்றிவிடுவதோடு மனித உறவுகளையும் சமூக இயல்புகளையும் மாற்றிவிடுவதாகவும் உலக ரீதியாகப் பல எதிர்ப்புக்கள் முன் வைக்கப்படுகின்றன.

இன்று அனைத்து வகையான குளோனிங் களையும் தடை செய்ய வேண்டும் என்று அமெரிக்க ஆதரவுடன் ஹோன்ஸ்ராஸ் நாடு கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் குழு ஆதரவு அளித்துள்ளது. இதற்கு ஆதரவாக 71 நாடுகளும் எதிர்த்து 35 நாடுகளும் வாக்களித்துள்ளன. 43 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் இப்போது இத்தீர்மானமானது பொதுச்சபைக்கு செல்லவுள்ளது. இவ்வகையிலேதான் பிரயோக ஒழுக்கவியலானது இத்தகைய குளோனிங் முறையினை மனித சமுதாயத்தில் பயன் படுத்தப்படுவதினால் ஏற்படும் பிரச்சினைகள் யாது? குளோனிங் மேற்கொள்பவர்கள் தமது ஒழுக்க விதிமுறைகளினை சரியாகக் கடைப் பிடிக்கின்றார்களா? என்றவாறாக குளோனிங் முறையின் பொருத்தப்பாடு பொருத்தமற்ற தன்மை என்பன பற்றித் தெளிவாக ஆராய்கின்றது எனலாம்.

இக் குளோனிங் முறையில் தீமையும் உண்டு நன்மையும் உண்டு ஆனால் நோயைக் குணப்படுத்த குளோனிங் உதவலாமே தவிர கருவை உருவாக்கப் பயன்படுத்தல் ஆகாது என்பது பலரின் கருத்து. எனவே குளோனிங் தொடர்பாகப் பின்வரும் ஆட்சேபங்கள் முன்வைக்கப்படுகின்ற அதேவேளை அவற்றிற்கான நியாயத்தினைக் காண்பதற்குப் பிரயோக ஒழுக்கவியலானது முற்படுகின்றது எனலாம்.

1. குளோனிங் மனித கௌரவத்தினை மீறுவதாகும் மாற்றியமைக்கக் கூடிய பொருட்களாக மக்களை அது மாற்றிவிடும்.
2. குளோனிங்கில் உருவாக்கப்படும் கருக்கள் அழிக்கப்படுகின்றன இது மக்கள் மீது நியாயமற்ற சோதனை செய்வதாகும்.
3. சாதாரண மக்களை விட குளோனிங் மக்கள் இழந்தவர்களாகவே கருதப்படுவர்.
4. குளோனிங் குடும்ப உறவுகளை மாற்றி விடும் அத்துடன் குளோனிங் மனித உறவுகளையும் சமூக இயல்பையும் மாற்றிவிடும்.

ஆகவே இங்கு பிரயோக ஒழுக்கவியலானது நடைமுறைப்பிரச்சனைகளுடன் அதிக தொடர்புடையது. எனவே தற்காலத்தில் பிரயோக ஒழுக்கவியலானது தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம் ஏனையவர்களுடன் எவ்வாறு ஒழுங்காக நடந்து கொள்வது போன்ற வாதங்களைத் தன்னுள் உள்வாங்கியுள்ளதுடன் மனிதனுடன் தொடர்புபட்டுள்ள ஒவ்வொரு துறைகளிலும் மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒழுக்கவியல் நடைமுறையில் எவ்வாறு காணப்படுகின்றது என ஆராய்வதுடன் மட்டுமல்லாது விலங்குகளின் உரிமைகள் தொடர்பாக நடைமுறையில் காணப்படும் ஒழுக்கவியல் பிரச்சனைகள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொள்கின்ற தன்மையானது இங்கு பிரயோக ஒழுக்கவியலின் ஆய்வுப்பரப்பு என்ற வகையில் எடுத்துக்காட்டத்தக்கதாகும்.

○○○

என்.செல்வராஜா

ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள்

ஒரு நூலியல்சார்ந்த பார்வை - 11

கடந்த மாத இதழில் ஒரு நூலுக்குப் பக்கங்களைக் குறிப்பிடும் பாரம்பரியம் எவ்வாறு வந்தது என்றும், பின்னாளைய அச்சக/ வடிவமைப்புத்துறை மாற்றங்களை உள்வாங்கி பக்கங்களுக்கு எண்ணிடப்படும் முறைமை எவ்வாறு மாற்றங்கண்டது என்பது பற்றியும் கண்டிருந்தோம்.

இவ்விதழில் ஒரு நூலுக்கு சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் முறை பற்றிய விளக்கத்தைத் தர முயல்கின்றேன்.

இன்று இலங்கையில் வெளியிடப்படும் பல நூல்களின் பின்னட்டையிலும் உட்புறமும் காணப்படும் பத்து அல்லது பதின்மூன்று இலக்கத்தொடரையே சர்வதேசத் தராதர நூல் எண் அல்லது International Standard Book Number (ISBN) என்று குறிப்பிடுகின்றோம். எழுபதுகளுக்குப்பின் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகி, உலகெங்கும் அந்தந்த நாட்டுத் தேசிய நூலகங்களாலும் வெளியீட்டு முகவர்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின் மூலம் மொழிவழியாகவன்றி, இலக்கங்களால் ஒரு நூலின் குறிப்பிட்ட சில வர்த்தகத் தகவல்களைப் பதிவு செய்து வைப்பதன் மூலம் அனைத்துலகரீதியாக மொழித்தடையைத் தாண்டி குறித்தவொரு நூலுக்கான ஒரு நூலியல் அடையாளத்தை, அல்லது நூல் பற்றிய தகவலைப் பரிமாறிக்கொள்ள முடிகின்றது.

ஆரம்பத்தில் இருந்து டிசம்பர் 2006 வரை இத்தராதர எண் 10 இலக்கங்களையே

ISBN-13: 978-1-888799-97-2
ISBN-10: 1-888799-97-8
9 781888 799972

கொண்டிருந்தது. தகவல் மூலங்களின் பௌதிக அமைப்பை வேறுபடுத்தும் வகையில் ஜனவரி 2007 முதல் மூன்று இலக்கங்கள் முன்னால் சேர்க்கப்பட்டு இப்பொது 13 இலக்கங்கள் கொண்டதாக வழங்கப்படுகின்றது. இன்றைய நிலையில் இம் மூன்று இலக்கங்களும் 977,978 அல்லது 979 ஆக இருக்கின்றன. *(977- சஞ்சிகை வடிவம், 978- நூல் வடிவம், 979- இசைவடிவம்).

சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் முறையானது ஜெனிவாவிலுள்ள சர்வதேச தராதர நிறுவனத்தினால் International Standard Organisation (ISO) 1972 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

நூல் வெளியீட்டகங்கள், தமது வெளியீடுகளை இலகுவில் இனம் கண்டு கொள்ளும் நோக்குடன் தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஒவ்வொரு ஒழுங்கில் நூலுக்கான அடையாள இலக்கங்களை வழங்கி வந்துள்ளன. நிறுவனங்களுக்கிடையே இவ்வகையான இலக்கம் வழங்கும் முறையில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த வேறுபாடுகள், நூலீட்டல் கடமைகளில் ஈடுபடும் நூலகர்களுக்கும், புத்தகவிற்பனையாளர்களுக்கும் பல நடைமுறைச் சிக்கல்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி வந்துள்ளன.1960களின் பிற்பகுதியில் கணனியின் பாவனை நூல் வர்த்தகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதையடுத்து நூல் வெளியீட்டு நிறுவனங்கள் தமது நூலியல் தரவுகளைக் கணனி மயப்படுத்துவதில் படிப் படியாக ஈடுபட்டனர். அவ்வேளையில் தத்தமது நூல்களுக்கான குறியீட்டு எண்களை வழங்குவதில் பொதுவானதொரு முறை பின்பற்றப்படவேண்டும் என்று கருதினர். அதாவது அனைத்து நூல்வெளியீட்டு நிறுவனங்களும் தாம் தமது நூல்களுக்கு வழங்கும் அடையாள இலக்கம் பொதுமைத் தன்மையுடையதாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டன.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு ஸ்தாபனமே இத்தகைய குறியீட்டு இலக்கங்களை வழங்க அதிகாரமளிக்கப்பட வேண்டியதன் அவசியம் அவ்வேளையில் உணரப்பட்டதன் பயனாக ஜெனீவாவில் 1972ஆம் ஆண்டு சர்வதேச தராதர ஸ்தாபனம் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஐக்கிய இராச்சியத்தில் 1967 ஆம் ஆண்டுகளில் விட்டேக்கர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவந்த நூல் களுக்குக் குறியீட்டுஎண் வழங்கும் முறை சில மாற்றங்களுடன் சர்வதேசதராதர நூல்எண் வழங்குவதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் படிப்படியாக இது உலகநாடுகளெங்கும் பரவலாயிற்று.

சர்வதேச தராதர நூல் எண் ஐந்து பகுதிகளைக் கொண்டது. வர்த்தகஉலகில் உருவாக்கப்படும் ஒரு உற்பத்திப்பொருளுக்கு கோட்டுரு அடையாளம் வழங்குவதென்பது



தவிர்க்கமுடியாத ஒன்றாக இன்றைய கணனிமயப்படுத்தப்பட்ட வாழ்நிலையில் மாறிவிட்டது. ஒரு வர்த்தக நிலையத்தில் நீங்கள் வாங்கும் எந்தவொரு பண்டத்திலும் கோட்டுரு அடையாளம் இருப்பதை அவதானிக்கலாம். நூல்கள் இதற்கு விதிவிலக்காகிவிட முடியாது. நாங்கள் நூல்களுக்கு வழங்கப்படும் கோட்டுரு அடையாளம் (Bar Code) பற்றியே இங்கு கவனத்தைச் செலுத்த முனைகின்றோம்.

சர்வதேச தராதர நூல் எண்ணுக்கான முதலாவது பகுதி EAN Prefix. இதனை European Article Number என்ற சொற்றொடரின் சுருக்கமாகக் கொள்வர். இரண்டாவது பகுதி நூல் வெளியிடப்பட்ட நாட்டைக் குறிக்கும். மூன்றாவது பகுதி அந்த நூலின் வெளியீட்டாளரைக் குறிக்கும். நான்காவது பகுதி அந்த வெளியீட்டு நிறுவனத்தால் அல்லது ஆசிரிய வெளியீட்டாளரால் (Author-Publisher) ஐ.எஸ்.பீ.என். இலக்கத்துடன் வெளியிடப்பட்ட எத்தனையாவது நூல் என்பதைக் குறிக்கும். இறுதிப்பகுதி பரிசோதனை இலக்கம் எனப்படும். இது ஐ.எஸ்.பீ.என். இலக்கம் வழங்கும்அதிகார மையம் பயன்படுத்தும் ஒரு கணிதக் குறியீட்டுக் கணிப்பு எண். இது எப்போதும் 0 முதல் 9 வரையிலான ஒற்றைத் தானத்தைக் கொண்டதாகவே இருக்கும். இந்த ஐந்து பிரிவுகளும் இடைவெளிவிட்டு அல்லது ஒரு தரிப்புக் குறியீட்டுடன் (-) குறிப்பிடப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகவும்.

மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து இலக்கத் தொகுதிகளையும் உள்ளடக்கிய சர்வதேச தராதர நூல் எண் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சர்வதேச தராதர நிறுவனத்தின் பிரதிநிதியாக விளங்கும் தேசிய நூலகத்தினால் மட்டுமே வழங்கப்படுவது வழமையாகும்.

தகவல் மூலங்களின் பௌதிக அமைப்பை வேறுபடுத்தும் வகையில் EAN Prefix எனப்படும் மூன்று இலக்கம் கொண்ட தொகுதி, ஜனவரி 2007 முதல் ISBN இலக்கத்தொடரில் முன் பகுதியில் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டு இப்போது 13 இலக்கங்கள் கொண்டதாக இலக்கத் தொடராக வழங்கப்படுகின்றது. பிரசுர வடிவங்களைப் பொறுத்தவரையில்,இன்றைய நிலையில் இம் மூன்று இலக்கங்களும் 977, 978 அல்லது 979 ஆக ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. (977- சஞ்சிகை வடிவம், 978- நூல் வடிவம், 979- இசைவடிவம்).

ஜெனீவாவில் இயங்கும் தலைமை நிலையத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலக்கம் வழங்கப்படுகின்றது. அதுவே அந்த நாட்டுக்குரிய தனித்துவ எண்ணாகக் கருதப்பட்டு சர்வதேச தராதர நூல் எண்ணின் முதலாவது பகுதியில் குறிப்பிடப்படுகின்றது. இலங்கை 1986ம் ஆண்டு நடுப்பகுதியில் சர்வதேச தராதர நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தகுந்தது. இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள தனித்துவ எண் 955 என்பதாகும். இலங்கையில் வெளியாகும் நூல் கள் அனைத்தினதும் தராதர எண் 955 இல் ஆரம்பமாவதை அவதானிக்கலாம். சில நாடுகளுக்க இரண்டு இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக மலேசியாவில் 967, 983 ஆகிய இரு இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சிங்கப்பூர் 981, 9971 ஆகிய இரு இலக்கத் தொடர்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தியா

81, 93 ஆகிய இரண்டு இலக்கங்களையும் பயன்படுத்துகின்றது.

இரண்டாவது பிரிவு இலக்கமான வெளியீட்டாளர் குறியீடு ஒரு குறித்த நாட்டில் பதிவு பெற்ற வெளியீட்டாளருக்கு வழங்கப்படும் தனித்துவமான தொடர் இலக்கமாகும். தமது வெளியீட்டு நிறுவனத்தை அல்லது தம்மை ஒரு வெளியீட்டாளராகப் பதிவு செய்து கொள்வது சிரமமானதொரு காரியமில்லை. முதலில் ISBN நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பப்படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து அவர்களுக்கு அனுப்பி வைத்தால் போதுமானது. அவ்விண்ணப்பப் படிவத்தில் வெளியீட்டாளரின் பெயர், முகவரி, கடந்த காலங்களில் வெளியிட்ட நூல்கள், திட்டமிடப்பட்டுள்ள நூல்கள் போன்றவை தொடர்பான விபரங்கள் கேட்கப்பட்டிருக்கும்.

வெளியீட்டாளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டு பத்து தொடர் இலக்கங்களை வழங்குவதற்கு 125 பவுண்கள் வரை (விற்பனை வரி நீங்கலாக) பிரிட்டனில் அறவிடப்படுகின்றது. மற்றைய நாடுகளில் அமைந்துள்ள தேசிய நூல கங்களில் அந்தந்த நாட்டுச் செலவினங்களைக் கேட்டறிந்து கொள்ளமுடியும்.

ஒரு வெளியீட்டாளர் தனது தலைமை அலுவலகம் இயங்கும் நாட்டிலேயே தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும். நூல் எங்கு அச்சிடப்படுகின்றது அல்லது எங்கு சந்தைப்படுத்தப்படுகின்றது என்பது இங்கு முக்கியமல்ல. சர்வதேச தராதர எண் வெளியீட்டாளரை முதன்மைப்படுத்தியே வெளியிடப்படுகின்றது. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் களைப்பொறுத்தவரை, ஒரு எழுத்தாளர் தானே நூலை எழுதி வெ்ளியிடுவதாலும், முதலீட்டைத் தானே மேற்கொள்வதாலும் தன்னை ஒரு வெளியீட்டாளராகப் பதிந்து கொள்ள உரித்துடையவராவார். ஜேர்மனியில் இருக்கும் ஒரு எழுத்தாளர் தனது சொந்தப்பணச்செலவில் ஒரு நூலை பிரித்தானியாவில் அச்சிட்டு வெளியிடுவாராயினும் அவர் ஜேர்மன் வெளியீட்டாளராகவே கருதப்படுவார். அவரது நூலுக்கான தராதரஎண் ஜேர்மனியிலுள்ள தராதரஎண் வழங்கும் நிறுவனத்திடமிருந்தே பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அதேவேளை அவர் பிரித்தானியாவில் நூலை அச்சிடுவதால், அந்நாட்டிலுள்ள பதிப்பகத்தின் ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும் முடியும். ஐ.எஸ்.பீ.என். இலக்கம் எவ்விதமான சட்டபூர்வமான அதிகாரங்களையோ பாதுகாப்பையோ கொண்டிராதபோதிலும், சில

பாலமுனை பாறூக் கவிதைகள்

இளமையில் கல்

இளமையிலே "கல்" என்று
இயம்புவது இதைத் தானோ?
இச்சிறுமி-
தலையில் கல் சுமந்தாள்
தான் கற்கச் செல்லாமல்!!
பிழையெங்கே,?
கல்லாகிப் போன
உள்ளங்கள் மலிந்த தனால்
கல் சுமக்கப் போனாளோ
பிள்ளை இவள்?

மூப்பு

தள்ளாத மூப்பினிலும் தாமே தொழில்செய்து
உள்ள பொழுதுகளை ஓட்டுகிறார்-
பொல்லாத
பிள்ளை பிரித்துப் புறமொதுக்கிப் போனாலும்
சொல்லார்கள் "சீ"யென் றிவர்!

நாடுகள் தமது நாட்டு ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தைப் பெற்ற நூல்களுக்கு சிறப்புச் சலுகைகள், விற்பனை வசதிகள், பரிசுப்போட்டிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் என்பவற்றை வழங்குகின்றன.

காலச்சுவடு, வடலி போன்ற தமிழகத்தில் இயங்கும் வெளியீட்டகங்களினூடாக தமது நூலை வெளியிடும் ஈழத்துப் படைபாளிகள் தமது நூல்களுக்கு அந்தந்த வெளியீட்டகத்தின் கீழேயே ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தைப் பெற்றுப் பதிகின்றனர். தமது நூலை இந்தியாவிலோ, புலம்பெயர் நாடுகளிலோ எளிதாகச் சந்தைப்படுத்துவதில் ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் இதனால் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள நேரிடலாம். இந்தியாவில் வெளிவரும் தமிழ் நூல்களில் ஐ.எஸ்.பீ.என். தராதர எண் பரவலாகப் புழக்கத்தில் உள்ளதால் நூலீட் டலில் தராதரஎண் வழங்கப்படாத நூல்கள் ஓரங்கட்டப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. இலங்கைத் தேசிய நூலகமும், இலங்கை கலாசார அமைபபுகளும் வழங்கும் முன்னுரிமைகளால்,அண்மைக்காலங்களில் இலங்கையில் வெளியாகும் பல தமிழ் நூல்கள் இவ்விலக்கத்தைத் தாங்கி வருவதும் கவனிக்கப்படல் வேண்டும்.சாகித்திய மண்டலப் பரிசுக்குத் தேர்வுசெய்யப்படும் நூல்களுக்கும் இலங்கை நூலகங்களில் கொள்வனவு செய்யப்படும் நூல்களுக்கும் இவ்விலக்கம் கட்டாயப்படுத்தப்பட்டால், இலங்கையில் ஐ.எஸ். பீ.என். இலக்கத்தைப் பதிவுசெய்யும் ஆர்வத்தை மேலும் அதிகரிக்கச்செய்யலாம்.

வெளியீட்டாளர்களுக்குப் பதிவிலக்கம் வழங்கப்பட்டதும் அப்பதிவுகள் யாவும் காலத்துக்குக் காலம் வெளியீட்டாளர் வழிகாட்டி (ஆண்டு நூல்) நூலில் பிரசுரிக்கப்படும் நடைமுறை ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்றது. பதிவுசெய்யப்படும் நூல் களில் 5 பிரதிகள் தேசிய நூலகத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்ற கட்டாயமும் உண்டு. அப்படிப்பெறப்படும் நூல்களின் பிரதிகள் அங்கத்துவ தேசிய நூலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழமை. ஜெனீவாவில் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் காலத்துக்குக் காலம் இவை சேர்த்துக்கொள்ளப்படும். குறிப்பிட்டதொரு வெளியீட்டாளருக்கு வழங்கப்பட்ட இலக்கம் எக்காரணம் கொண்டும் அந்நாட்டில் மற்றொரு வெளியீட்டாளருக்கு வழங்கப்படமாட்டாது. வெளியீட்டாளர் தான் ஒரு நூலை வெளியிடத் தீர்மானித்ததும் உத்தேச நூல் பற்றிய நூலியல் தரவுகளை அதற்கென இருக்கும் ஒரு படிவத்தில் நிரப்பி அனுப்ப வேண்டும்.

சில நூல்கள் நூலகப்பதிப்பு, சாதாரண பதிப்பு என்று இரு வகையில் வெளியிடப்படுவதுண்டு. ஒரே நூலின் சாதாரண பதிப்புக்கும் நூலகப் பதிப்புக்கும் வெவ்வேறு சர்வதேச தராதர நூல் எண்கள் வழங்கப்படும்.

ஒரு நூல் வெளியிடப்பட்டு சில காலங்களின் பின் அதன் இரண்டாவது பதிப்பு மாற்றமெதுவுமின்றி மறுபிரசுரமாக வெளியிடப்பட்டால் (Reprint) முதலாம் பதிப்புக்கு வழங்கப்பட்ட நூல் இலக்கத்தையே மறுபதிப்பு நூலுக்கும் பயன்படுத்தலாம். ஆனால் மாற்றங்களுடன் திருத்திய பதிப்பாக (Revised Edition) வெளியிடப்படுமேயானால் அது இரண்டாவது பதிப்பு என்று கணக்கிடப்பட்டுப் புதிய தராதர நூல் எண் வழங்கப்படும்.

ஒரு வெளியீட்டாளர் பதிவுசெய்யும் நூல்கள் தொடர்இலக்க ஒழுங்கில் பதியப்படும் அந்தத் தொடரிலக்கம் சர்வதேச தராதர நூல் எண்ணின் மூன்றாவது பிரிவில் தரப்படுகின்றது. கொழும்பு குமரன் புத்தக இல்லம் "சுவாமி விபுலாநந்தர் பன்முகப் பார்வை" என்ற செ.யோகராசா அவர்களின் நூலை 2015இல் வெளியிட்டிருந்தது. அந்நூலுக்கான **ISBN** இலக்கம் 978-955-659-455-3. என்பதாகும். இதில் 659 என்பது குமரன் பதிப்பகத்திற்கு இலங்கையில் சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் அமைப்பினர் வழங்கிய தனித்துவமான இலக்கமாகும். 455- என்பது மேற்படி 659 என்ற வெளியீட்டகம் (குமரன் புத்தக இல்லம்) பெற்றுக்கொண்ட 455ஆவது நூலாகின்றது. இறுதிப் பகுதியில் உள்ள 3- என்ற இலக்கம், ஐ.எஸ்.பீ.என். இலக்கத்தை உருவாக்கி வழங்கிய நிறுவனம் மேற்கொள்ளும் ஒரு கணிதக் கணிப்பீட்டுக் குறியீடாகும். இது 0 முதல் 9 வரையிலான ஒற்றைத் தானத்திலேயே எப்பொழுதும் இருக்கும்.

சர்வதேச தராதர நூல் எண் பின்வரும் உருவஅமைப்புள்ள வெளியீடுகளுக்கு வழங்கப்பட மாட்டாது. நாட்குறிப்புகள்(Diaries), கலண்டர்கள், விளம்பரப் பிரசுரங்கள், நாடக கலை நிகழ்ச்சி நிரல்கள், நிறுவன வழிகாட்டிகள் (Prospectus), தலைப்புப்பக்கம், விளக்கம் போன்றவற்றைக் கொண்டிராத படங்கள் ஆகியன தவிர்ந்த சஞ்சிகை பருவவெளியீடுகள் ஆகியனவும் சர்வதேச தராதர நூல் எண் பெறத் தகுதியற்றவையாகும். சஞ்சிகைகளைப் பொறுத்த மட்டில் சர்வதேச பருவ வெளியீட்டுத் தராதர எண் (ISSN) வழங்கும் திட்டம் அமுலிலுள்ளது. இதுபற்றி இக்கட்டுரையின் இறுதிப்பகுதியில் விளக்கப்படும்.

ஒரு வெளியீட்டாளர் தனது தனிநூல் அல்லாததொரு வெளியீடொன்றுக்கு சர்வதேச தராதர நூல் எண் (ISBN) பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானதாவென்பதை முன்கூட்டியே தராதர எண் வழங்கும் நிறுவனத்திடமிருந்து தெரிந்து கொள்ளலாம். மேலும், இலங்கையில் சர்வதேச தராதர நூல் எண் இல்லாமல் ஏற்கெனவே வெளியிடப்பட்டு விட்ட நூலொன்றுக்கு சர்வதேச தராதர நூல் எண் கோரி விண்ணப்பிக்க முடியாது. அது அர்த்தமற்றது. குறிப்பிட்ட நூலை மறு பிரசுரம் செய்ய முற்படும் வேளையில் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். இலங்கையில் முதற் பதிப்பைக் கண்ட நூலொன்றை தமிழகத்தில் இரண்டாம் பதிப்பாக அல்லது, தமிழகப் பதிப்பாளர் ஒருவரின் வாயிலாக வெளியிடுமிடத்து இந்திய சர்வதேச தராதர நூல் எண் ஒன்றை அந்த மண்ணில் இயங்கும் வெளியீட்டகத்தின் பதிவின்கீழ் பெற்றுக்கொள்ளலாம். அவ்வேளையில் இலங்கையில் வழங்கப்பட்ட சர்வதேச தராதர நூல் எண்ணை அங்கு மேலதிகமாகப் பயன்படத்தலாகாது.

தராதர இலக்கத் தொகுதியின் இறுதிப்பிரிவு (நான்காவது பிரிவு) பரிசோதனை இலக்கமாகும். முன்னைய மூன்று பிரிவு இலக்கங்களும் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை ஒரு கட்டளை விதி (Formula) மூலம் அறிந்து கொள்வதற்காக இப்பிரிவு இலக்கம் பயன்படுத்தப்படும். இவ்விலக்கம் எப்போதும் ஒரு தான இலக்கமாகவே காணப்படும்.

சர்வதேச தராதர நூல் எண் வழங்குவதால் ஒரு ஈழத்து ஆசிரிய, வெளியீட்டாளருக்கு என்ன நன்மை கிட்டப்போகின்றது என்று சிந்திக்கக்கூடும். சர்வதேச தராதர நூல் எண்ணைப் பெறுவதால் நவீனமயப்படுத்தப்பட்டு வரும் தேசிய நூல்வெளியீட்டாளர் வரிசையில் எம்மவரும் இடம்பெற்று விடுகின்றனர். காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சர்வதேச வெளியீட்டாளர் வழிகாட்டியில் எம்மவரின் பெயரும் இடம்பெறுமாகையால் காலக்கிரமத்தில் சர்வதேச மட்டத்தில் அனைவரும் அறிமுகமாவது சாத்தியமாகிறது. நூலகங்களில் நூற் தேர்வு நடவடிக்கைகளை நவீனமயமாக்கும் இவ்வேளையில் இத்தகைய வழிகாட்டி நூல்களில் இடம்பெறுவதால் எமது வெளியீட்டாளர்கள் தமது வெளியீடுகளை சந்தைப்படுத்த மிகநல்ல வாய்ப்பும் கிட்டுகின்றது.இலங்கைச் சாகித்திய மண்டலப் போட்டிகளுக்கு வழங்கப்படும் நூல்களில் சர்வதேச தராதர நூல் எண் உள்ள நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு நூல் உருவாகிய நாடு பற்றிய அடையாளத்தை சர்வதேச தராதர நூல் எண் தருகின்றது.

சர்வதேச தராதர நூல் எண் பெற்றதும் அவ்விலக்கத்தை நூலின் பின்புற அட்டையில் தெளிவாக அச்சிடல் வேண்டும் என்பது விதிமுறையாகும். இதை நூலின் பின்னட்டையின் அடிப்பகுதியில் (10 பொயின்ட் எழுத்தில்) அச்சிட வேண்டும் என்பது விதியாகும். நூலுக்கு மேலுறை(Jacket) இடப்பட்டு விற்பனை செய்யப்படுமிடத்து அந்த மேலுறையிலும் இவ்விலக்கம் பொறிக்கப்படல் வேண்டும். மேலும் இவ்விலக்கம் நூலின் தலைப்புப் பக்கத்தின் பின்புறத்திலும் (Verso) அச்சிடப்படல் வேண்டும். ISBN என்ற நான்கு ஆங்கில எழுத்துக்களுடன் நூலுக்கான எண்ணை அதன் நான்கு பிரிவுகளையும் வேறுபடுத்தத் தக்கவாறு குறுக்குக்கோடிட்டு அச்சிட வேண்டும். சர்வதேச தராதர நூல் எண் பெற்றுக்கொண்டதும் அவ்வெண்ணுக்குப் பொருத்தமான கோட்டுரு அடையாளம் (Bar Code) பதிப்பகங்கள் அல்லது பக்க வடிவமைப்பாளரின் உதவியுடன் இணையத்தளத்திலிருந்து எளிதாகத் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இனி வரும் தொடரில், ஒரு ஈழத்துத் தமிழ் நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் பதிவதில் காணப்பட்ட குறைபாடுகள், தவறான எண்ணக்கருக்கள் பற்றிய எமது கணிப்பீடுகளையும், சஞ்சிகைகளுக்காக வழங்கப்படும் ISSN இலக்கம் பற்றியும் ஆராய்வோம்.

(இன்னும் வரும்)

○○○

தமிழகச் செய்திகள்

கே.ஜி.மகாதேவா



தமிழகத்தேர்தல்: அராஜகத்தின் உச்சம்! மற்றுமொரு சேஷன் உருவாகுவாரா?

"என்ன வாங்கியாச்சா..... ஒன்றா இரண்டா....... எல்லோருக்கும் கிடைச்சிட்டா...... ஹலோ வேட்பாளர், உதவியாளர் யாரும் இருக்கிறாங்களா..... பலபகுதிகளிலும் கரண்ட் கட் ஆகியிடுச்சு. எப்ப ஸார் ஏரியாவில் கரண்ட் கட் பண்ணுவீங்க....... இதை நாளை இரவுக்குள் செய்திடுங்க......" இதுபோன்ற கேள்வி -பதில்தான் தமிழகத் தேர்தலில் வாக்களிப்புக்கு முன்னர் இரண்டு நாட்கள் தமிழ் நாட்டில் எங்கும் சுதந்திரமாக ஒலித்தது.!

கடந்த இதழில், 'அ.தி.மு.கவின் சுதந்திரமான பணப்பட்டுவாடா! ஜனநாயகம் விலைபேசப்படுகிறது' என்று எழுதி, 'இன்றைய அரசியல் நிலைப்பாட்டில், பணநாயக ஜாம்பவான் அ.தி.மு.க நாளைநமதே. என்கிறது. தி.மு.க. நம்பிக்கையே வாழ்க்கை என்கிறது. சீமானின் நாம் தமிழர் விஜயகாந்தின் தே.மு.தி.க. 'மக்கள் நலக்கூட்டணி இன்றுபோய் நாளைவாறாய் நிலை, பாட்டாளி மக்கள் கட்சி மணல் கோபுரம், பாரதீய ஜனதாகட்சி சிறுபிள்ளை விவசாயம்" என்று வர்ணித்திருந்தேன். எந்தக் கட்சியும் வெற்றிபெறவில்லை. 2.6 சதவிகிதமே வாக்குப் பெற்ற தே.மு.தி.க. தனதுகட்சி, சின்னம், கட்டுப்பணம் எல்லாம் பறிகொடுத்து தேர்தல் அங்கீகாரத்தையும் இழந்துள்ளது. இங்குள்ள மற்றைய கட்சிகள் பற்றிய எமது கணிப்பில் எந்தக் கட்சிக்கும் ஒருதொகுதியில் கூட வெற்றிகிடைக்கவில்லை. கட்டுப்பணம் தான் பறிபோயிற்று.

ஒருகாலத்தில், இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. அது பல் பிடுங்கப்பட்ட பாம்பு என்று மக்கள் வர்ணித்தனர். தேர்தல் ஆணையம் ஒரு வேடிக்கை பார்க்கிற பார்வையாளராகவே இருந்தது. அந்தநிலையில், டி.என்.சேஷன் தேர்தல் ஆணையரானதும், மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினார். அதன் அதிகாரங்களை சேஷன் வெளிப்படுத்தினார். அவரின் கிடுக்குப்பிடி, கெடுபிடிகள், அதிரடி நடவடிக்கைகள் காரணமாக தேர்தல் வன்முறை, விதிமீறல்கள் குறைந்ததுடன், அரசுயந்திரமும் தேர்தல் ஆணையத்துக்குக் கட்டுப்பட்டது. டி.என்.சேஷனின் 'நெருப்பு', முறைகேடுகளில் நம்பிக்கை கொண்டவர்களைச் சுட்டெரித்தது! தேர்தலில் இந்தியாவின் நேர்மை உலக அளவில் பேசப்பட்டது. ஆனால், சேஷனுக்குப் பின்னர் வந்ததேர்தல் ஆணையாளர்கள் தங்கள் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள, சேஷன் வழி நடக்கத் தவறிவிட்டார்கள்!

பணப்பட்டுவாடாவுக்கு உடந்தை, தேர்தல் ஆணையம் மீது குற்றச்சாட்டு!

2014 பாராளுமன்றத் தேர்தலில் காரணம் எதுவுமின்றி தமிழகம் முழுக்க மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த, திடீரென தமிழகம் முழுக்க 144வது தடை உத்தரவைப் பிறப்பித்து, ஆளும் கட்சியின் சுதந்திரமான பணப்பட்டுவாடாவுக்கு வழிவகுத்த தேர்தல் ஆணையம், ஆளும் கட்சியின் பலகோடிரூபாவை காவல்துறை வாகனங்களிலேயே கொண்டுசெல்ல அனுமதித்தது. இதுபற்றி அன்று எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையம் மீது கணைதொடுத்தபோது "பணப்பட்டுவாடாவை

தவிர்க்க முடியவில்லை' என்று ஒப்புதல் வாக்கு மூலமளித்து தனது அடிமைத்தனத்தை வெளிப்படுத்தியது! இதனையும் இம்முறைசாதித்து, பணப்பட்டுவாடாவுக்கு உடந்தையாக (ஈவி.கே.எஸ்.இளங்கோவன் - தமிழககாங்கிரஸ் தலைவர்) தேர்தல் ஆணையம் செயல்பட்டதாக தமிழகத்தின் அ.தி.மு.க தவிர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரேகுரலில் குற்றம் சுமத்தியது. இரண்டுமுறை முதல் அமைச்சராகவும், நிதிஅமைச்சராகவும் இருந்த பன்னீர்செல்வம், ஜெயலலிதா தேர்தல் பிரச்சாரத்துக்கு பயணிக்கும் காரின் டயரையும், இன்னுமொரு அமைச்சர், அந்தக் கார் பயணிக்கும் வீதியையும் தொட்டுக்கும்பிட்டார்கள் என்றால், ஜனநாயக கேலிக் கூத்துகளை அளவிடமுடியுமா?

ஜனநாயகம் தோல்விகண்டு, பணநாயகமே என்பது ஒருபக்கம் என்றால், ஜெயலலிதா தொகுதியிலேயே, அழியாமைக்குப் பதிலாக (வாக்களித்ததைக் காட்ட) போலி அடையாள மை (மையைஅழித்து, உடனேயே மீண்டும் வாக்களிக்க) பயன்படுத்தப்பட்டது. ஜெயலலிதா பிரசாரக் கூட்டத்தில் வெயில் கொடுமைதாங்காது ஏழு பேர் உயிர்நீத்தது. கரூரில் அன்புநாதன் வீட்டில் ஐந்துகோடி பிடிபட்டது, அதேநாள் சென்னையில் அன்புநாதன் நண்பர் வீட்டில் பலலட்சம் ரூபா நாடுமுழுக்க பலகோடிகள் பிடிபட்டதாக தகவல் வந்தாலும், 15 நாட்களாகியும் சம்பந்தப்பட்டவர்கள், தேர்தல் ஆணையத்தால் கைதுசெய்யப்பட்வில்லை, நடவடிக்கையும் இல்லை. தேர்தல் காலத்தில் மின்வெட்டு இருக்கக் கூடாது என்றுதேர்தல் ஆணையம் எச்சரித்தது. தேர்தல் முதல்நாள் வரை தமிழகத்தில் அங்குமிங்கும் மின்வெட்டு நீடித்தது! பணப்பட்டுவாடா கனஜோர்! தேர்தல் ஆணையம் நடுநிலை தவறி கலைஞர் கண்டனப்படி ஜெயலலிதாவின் அடிமையாக செயல்பட்டது போலும்.

பணப்பட்டுவாடாவுக்கு தேர்தல் ஆணையம் உடந்தை

தேர்தலில் நேர்மையைப் பறிகொடுத்து செயலிழந்த தேர்தல் ஆணையம் ஒருபக்கம் என்றால், பணநாயகத்தின் மீதுமட்டுமே குறிவைத்து அரசியலில் குதித்து, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, இறைக்கும் அரசியல் கட்சிகள் மறுபுறம் காணப்படுகிறது. பணநாயகத்தாரை கௌரவித்து, வெளிப்படையாக வரவேற்று ' பெருமைப்படுத்தியதில் முன்னணிவகித்தது. அ.தி.மு.க.தான்! சுயநலம் மட்டுமே ஊற்றெடுத்ததே தவிர, அ.தி.மு.கவுக்கு பயமே ஏற்படவில்லை! தமிழக தேர்தல் வரலாற்றில் இதுவரை அரங்கேறாத வகையில் பணப்பட்டுவா்டாவில் புதியதொழில்நுட்பம், புதிய வியூகங்கள், வீட்டுக்கு வீடு. தாராளம் - செயற்கைமின் தடை கையாள்வதில் அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் போட்டிபோட்டன. கட்சிகளின் பணப்பட்டுவாடாவுக்கு தேர்தல் ஆணையம் உடந்தை என்று, காங்கிரஸ் கட்சி தமிழ் மாநிலத்தலைவர் ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன் பகிரங்கமாகக் குற்றம் சுமத்த, ஜெயலலிதாவின் அடிமையாக தேர்தல் ஆணையம் செயல்பட்டது என்று தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி கணைதொடுக்க, மத்தியஅரசின் மாநிலகட்சியின் தலைவர் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன், நடுநிலைவகிக்கவில்லை, அரசின் ஊதுகுழலாகச் செயல்பட்டது என்று தேர்தல் ஆணையம் மீது விரல்நீட்ட, பணபலத்தை முறியடித்து, மக்கள் ஆதரவைப் பெறமுடியவில்லை என்று கம்யூனிஸ்ட்டுகள் உட்பட கட்சிகள் அனைத்தும் குரல் எழுப்பின.

பணப்பட்டுவாடா சம்பந்தமாக தேர்தல் ஆணையம் கைப்பற்றியது 105 கோடிரூபா. 101 பேர் மீது வழக்குதாக்கலானாலும், இவர்களில் யாரும், எந்த அரசியல் கட்சியிலும் அடிப்படை உறுப்பினர்கள் இல்லை. போட்டியிட்ட 3728 வேட்பாளர்களில் ஒருவரைக் கூட தேர்தல் ஆணையம் கைதுசெய்யவில்லை. குற்றமும் சுமத்தவில்லை. பணம் கொடுக்கிறார்கள் என்று பொதுமக்கள் புகார் செய்தால், பட்டுவாடாமுடிந்து மாலையில் தான் பொலிஸார் விசாரித்தனர். எதிர்க்கட்சிக்காரர்களால் மற்றக்கட்சிக்காரர்கள் காட்டிக் கொடுத்தால் சிலவழக்குகள் கண்துடைப்பாகியதே தவிர, மற்றப்படி, தேர்தல் ஆணையம் தானாக முன்வந்து எந்தத் தேடுதல் வேட்டையும் நடத்தவில்லை. தஞ்சை, அரவாக்குறிச்சியில் தேர்தல் ரத்துச் செய்யப்பட்டதில், பணம் பட்டுவாடா செய்தது யார், எந்தக் கட்சிசார்பில் விநியோகிக்கப்பட்டது குறித்து தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவில்லை. அவர்களைக் கேள்விக்குட்படுத்தும் நோட்டீஸ்

கூட அனுப்பப்படவில்லை. பல் ஆண்டுவாழ்க என்பது சமீபத்திய ஒருபற்பசை விளம்பரம். பல் இல்லாத ஆணையமாகிவிட்டது தேர்தல் ஆணையம்! மற்றுமொரு சேஷன் உருவாகவேண்டும்.

6ஆவது தடவையாக ஜெயா முதல் அமைச்சர்! மீண்டும் சினிமாவில் நுழைகிறார் விஜி!

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழாமண்டபத்தில் கடந்தமாதம் 23ஆம் திகதி ஜெயலலிதா 6ஆவது முறையாக தமிழகமுதல்வராக 28 அமைச்சர்களுடன் பதவியேற்றுக் கொண்டார். பதவியேற்பு விழாவை தமிழகம் முழுவதுமுள்ள பொதுமக்கள் கண்டுகொள்ளும் வகையில், தமிழக செய்தித் துறையின் பிரசாரவாகனங்கள், மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் எல்லாம் நிறுத்தப்பட்டு, அதில் உள்ள திரையில் திரையிடப்பட்டது. பதவியேற்பு விழாநடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள பலசாலைகளில் டிஜிட்டல் திரைகள் அமைக்கப்பட்டிருந்தன. சர்ச்சைகளுக்குள் சிக்கிய நிலையில் தனித்துவம் பேசிய தேசியமுற்போக்கு திராவிடக்கழகத் தலைவர் விஜயகாந்த் தனது கட்சியை 2005-இல் ஆரம்பித்து, 2006 சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் போட்டியிட்டு 8.38 சதவீத வாக்குவங்கியுடன் ஒரேதொகுதியில் வென்று 2009 பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு, வாக்குவீதத்தை 10.1 சதவீதமாக உயர்த்தினார். பின்னர் அவருக்கு இறங்குமுகம்தான்! 2011 இல் 7.88, 2014 5.1 இவ்வருடதேர்தலில் ஒரு இடத்தையும் கைப்பற்ற முடியாதநிலையில் 2.4 சதவிகித மிகக்குறைந்த வாக்குகளே பெற்றார். தமிழகத்தில் அ.தி.மு.க, தி.மு.க, தே.மு.தி.க ஆகிய மூன்றும் மட்டுமே அங்கீகாரம் பெற்ற நிலையில் தே.மு.தி.கவுக்கு ஏற்பட்ட படுதோல்வியால் கட்சி, சின்னம் அங்கீகாரத்தை இழந்து இனிமேல் அரசியல் பக்கமே தலைவைப்பதில்லை என்று நினைக்கும் விஜயகாந்த் கோடம்பாக்கம் நுழைகின்றார். கடந்தமாதம் இறுதிவாரம் தன்னைச் சந்தித்த மக்கள் நலக்கூட்டணித் தலைவர்களுடன் மனம் விட்டுப் பேசவில்லை. உரியமரியாதையும் கொடுக்காமல், மனம் நொந்து அதனை வார்த்தைகளால் வெளிப்படுத்ததாமல் கண்களால் அளந்தார். சினிமா துறவறத்துக்குப் பின்னர் விஜயகாந்த் மீண்டும் கோடம்பாக்கம் நுழைந்து "தமிழன் என்றுசொல்" திரைப்படத்தில் நடிக்கின்றார். இந்த நிலையில், தேர்தலில் படுதோல்விகண்ட இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி தேசியகட்சி அந்தஸ்தை இழந்துவிட்டது! தேசியகட்சி என்றால், மக்களவை அல்லது மாநிலசட்டமன்றத் தேர்தலில் 4 அல்லது அதற்கு அதிகமான மாநிலங்களில் பதிவானவாக்குகளில் 6 சதவீதம் பெற்றிருக்கவேண்டும். இதுகிடைக்காததால், தேசியஅந்தஸ்தை மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி இழந்துவிட்டது. இனிமேல், காங்கிரஸும், பாரதீய ஜனதாகட்சியுமே தேசியகட்சிகள்.

'ஜெயா'வின் அடுத்த எதிர்பார்ப்பு: சொத்துவழக்கு விஷப்பரீட்சை!

அ.தி.மு.க சாம்ராஜ்யத்தை கோடிக் கோபுரத்தால் சரியாவிடாமல், எவ்வித சேதாரமுமின்றி நிமித்துவைத்த அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தலைக்குவந்தது (தேர்தலில்) தலப்பாவுடன் தப்பிய நிலையில், இம்மாதம் மீண்டும் ஆரம்பித்திருக்கும் சொத்துக்குவிப்பு மேல்முறையீடு இறுதிவிசாரணை மூலம் ஜெயலலிதாவின் தலைமீது தீர்ப்புக்கத்தி தொங்குகிறது. இந்நிலையில் கர்நாடக அரசுவழக்கறிஞர் ஆச்சார்யாவுக்கு மிரட்டல்கள் அதிகமாகவந்ததால், இவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று ஆச்சாரியாவுக்கு ஆதரவாக மதுரை வழக்கறிஞர் ரத்னம் உச்சநீதிமன்றத்தில் கோரி, விசாரணையும் நடைபெறவிருக்கிறது. அரசு வழக்கறிஞரைமிரட்டிய விவகாரத்தை உச்சநீதிமன்றம் சாதாரணமாக எடுக்காது. இந்தமனுவின் தீர்ப்பு வழக்கின் தீர்ப்பையும் மாற்றக் கூடியதான்! 'தலை' தப்புமா?

OOO

எழுதத் தூண்டும் எண்ணங்கள்

பேராசிரியர் துரை மனோகரன்

நல்லதே நடக்க வேண்டும்!

ஒருவாறு தமிழ்நாட்டின் சட்டசபைத் தேர்தல் முடிவடைந்து, முடிவுகளும் வெளிவந்துவிட்டன. ஜெயலலிதாவுக்கு மீண்டும் முதல்வர் பதவி கிடைத்துள்ளது. இம்முறை தமிழ்நாட்டின் தேர்தலின் மூலம் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படும் என்று ஒரு கருத்து நிலவியது. ஆனால், அக்கருத்தைத் தமிழ்நாட்டு மக்கள் மாற்றிவிட்டார்கள். ஜெயலலிதா அரசுக்கு எதிரான வெள்ளப் பாதிப்பு, ஊழல் மோசடிகள், அதிகாரத் துர்ப்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுக்கள் எவையும் பெரும்பாலான தமிழ்நாட்டு மக்கள் மனத்தை மாற்றிவிடவில்லை. பெரும்பாலும் நடுத்தர வயதுப் பெண்கள் 'அம்மா'வின் ஆட்சியை விரும்புகிறார்கள் போலத் தெரிகிறது.

இந்தத் தேர்தலில் ஜெயலலிதா மீண்டும் வெற்றி பெற்றமைக்கு, ஜனநாயக அம்சங்களை விடப் பணநாயக அம்சங்களே அதிக ஆதிக்கம் செலுத்தின என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்துகின்றனர். அதை முற்றாகப் புறக்கணிக்க முடியாது. தேர்தலில் பணம் வெள்ளம் போல் பாய்ந்தது. அதற்கு ஓரளவுதான் தேர்தல் அலுவலகத்தால் அணைகட்ட முடிந்தது.

அ.தி.மு.கவின் மீள்வெற்றிக்கு அரசின் நல்லபக்கச் செயல்பாடுகள், மக்கள் மனத்தைக் கவரும் வாக்குறுதிகள், பணவிளையாட்டு, இலங்கைத் தமிழர் விடயத்தில் (தேர்தலுக்காக) கவர்ச்சிகரமான பேச்சுகள், அறிக்கைகள் போன்றவற்றோடு, இன்னோர் இரகசிய அம்சமும் முக்கிய பங்களிப்புச் செய்திருக்கும் என்று நம்ப இடம் உண்டு. இத்தேர்தலில் பெரும்பாலான கட்சிகள் மதுவிலக்குத் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தின. தாம் ஆட்சிக்கு வந்தால், முதல்வேலையாக மதுவிலக்கை அமுல்படுத்தும் என்று வாக்குறுதிகள் வழங்கின. அவை ஆட்சிக்கு வந்திருந்தால், தமது வாக்குறுதியை நிறைவேற்ற முடிந்திருக்குமா என்பது வேறு விடயம். அப்படி நிறைவேற்ற முடிந்தாலும், மறுபுறத்தில் கள்ளச்சாராய உற்பத்திதான் பெருகும். அது இதைவிட ஆபத்தானது. மதுவிலக்குப் பற்றி மற்றைய கட்சிகள் அதிக அக்கறை செலுத்தியபோது, ஜெயலலிதா படிப்படியாக மதுவிலக்கு அமுல்படுத்தப்படும் என்று தேர்தலின்போது குறிப்பிட்டுவந்தார். இதனை, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், 'ஒரு படியே ஏறமுடியாத ஜெயலலிதா, எவ்வாறு படிப்படியாக மதுவிலக்கை அமுல்படுத்துவார்?' என்று கிண்டல் செய்திருந்தார். ஆனால், ஜெயலலிதா தேர்தல் களத்தில் மதுவிலக்கு விடயத்தில் புத்திசாதுர்யமாகக் காயை நகர்த்தியுள்ளார் என்றே சொல்லவேண்டும். மற்றைய கட்சிகள் மதுவிலக்கு விடயத்தில் தம்மை அறியாமலேயே 'பெருங்குடி மக்களை'ப் பகைத்துக்கொண்டுவிட்டன. மதுவிலக்குப் பற்றி வாக்குறுதிகள் வழங்கிய கட்சியினர் ஆட்சிக்கு வந்தால், தமது வயிற்றில் அடித்துவிடுவார்கள் என்று தமிழ்நாட்டின் 'பெருங்குடி மக்கள்' பயந்திருக்கலாம். அதனால், தமது வாய்க்கும், வயிற்றுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத, பாதுகாப்பான கட்சியைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் 'பெருங்குடி மக்கள்' தனிப்பட்ட முறையில் தம்மளவில் தீர்மானம் எடுத்திருக்கலாம். தமிழ்நாட்டின் 'பெருங்குடி மக்கள்' தொகை அப்படி ஒன்றும் சாமானியமானது அல்ல. அவர்களைப் பகைத்துக் கொள்ளாமையும் அ.தி.மு.கவின் வெற்றியின் இரகசியங்களில் ஒன்று.

இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரையில், கருணாநிதியைவிட ஜெயலலிதாமீது அதிக அபிமானம் காணப்படுகிறது. அதேவேளை, கருணாநிதிமீது விருப்பம் இல்லாவிடினும், தேர்தலில் ஒரு மாற்றத்தை விரும்பியதும் உண்டு. இலங்கைத் தமிழர்களுக்குத் தமது ஆட்சிக்காலத்தில் தனிநாடு பெற்றுக்கொடுக்கப்படும் என்று ஜெயலலிதா வாக்குறுதி வழங்கினார். ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு இப்போது தேவைப்படுவது தனிநாடு அல்ல. ராஜீவ் காந்தி - ஜே.ஆர். ஜெயவர்த்தனா இடையிலான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கு

இணைப்பு, காணி அதிகாரம், காவல்துறை அதிகாரம் உள்ளடங்கிய மாகாண சுயாட்சி, நிம்மதியான மக்கள் வாழ்க்கை போன்றவையே இன்று தேவை. இவை பற்றித் தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில் ஜெயலலிதா இந்திய மத்திய அரசுடன் பேசி, நல்ல முடிவு எடுப்பதே சிறந்தது. இதையே இலங்கைத் தமிழ்மக்கள் விரும்புவர். அதை விட்டுவிட்டுத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தனிநாடு பற்றி வாய்கிழியப் பேசுவது இலங்கைத் தமிழருக்கு எந்தப் பயனையும் தராது. வெறும் வாய்ஜாலங்கள் இலங்கைத் தமிழ்மக்களுக்கு எரிச்சலையே ஏற்படுத்தும்.

ஜெயலலிதா தமக்கு மீண்டும் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை, இயன்றவரை விமர்சனத்துக்கு உள்ளாகாத நல்லாட்சி மூலம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். தேர்தலில் அவர் வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் முதல்வராகியபோதிலும், அவரை அச்சுறுத்தும் பிரச்சினை ஒன்று இருக்கத்தான் செய்கிறது.

இந்தத் தேர்தலில் தனக்கு மீண்டும் ஆட்சியமைக்க ஒரு வாய்ப்பு நிச்சயம் ஏற்படும் என்று தி.மு.க நம்பிக்கையுடன் இருந்தது. ஆனால், அதன் அந்த நம்பிக்கை தவிடுபொடியாகிவிட்டது. ஆயினும், கடந்த தேர்தலில் தான் இழந்த செல்வாக்கை அது மீண்டும் பல மடங்காகப் பெற்றுவிட்டது. தமிழ்நாடு சட்டசபையில் பலம்வாய்ந்த ஓர் எதிர்க்கட்சியாக அது விளங்கப்போகிறது. தி.மு.கவின் இந்தப் பலத்துக்குக் காரணம், கருணாநிதியின் மனப்பலமும், மு.க.ஸ்டாலினின் கடும் உழைப்புமேயாகும். அத்தோடு, தேர்தல் தொடர்பான தி.மு.க வின் தொலைக்காட்சி விளம்பரங்கள் மக்களைக் கவரும் முறையில் மிகச் சிறப்பாக இருந்தன. மிகத் திட்டமிட்டு அருமையாகச் செய்திருந்தார்கள். தி.மு.க வின் விளம்பரங்களோடு ஒப்பிடுகையில், தேர்தல் தொடர்பான அ.தி.மு.க வின் தொலைக்காட்சி விளம்பரங்கள் சப்பென்று இருந்தன.

இப்போதெல்லாம் கருணாநிதி பெயருக்குத்தான் தி.மு.க வின் தலைவர். அதன் மறைமுகமான தலைவர் ஸ்டாலினே. தமிழ்நாட்டில் குடும்ப ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் பெருமை தி.மு.கவுக்கு உரியது. அது இந்தியாவில் குடும்ப ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் இன்னொரு கட்சியான காங்கிரஸோடு கூட்டுச்சேர்ந்துள்ளமை சுவாரசியமான ஒரு சங்கமம். இத்தகைய குடும்பக் கட்சிகளை வாழையடி வாழையாக 'வாழவைக்கும்'மக்களும் இருப்பது இன்னொரு சுவாரசியமான அம்சமாகும். முன்பு ஒருமுறை காங்கிரஸோடு தி.மு.க கொண்டிருந்த கூட்டணி பற்றிக் கருணாநிதி சுயவிமர்சனம் செய்தபோது, 'கூடாநட்பு கேடாய் முடியும்' என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், அண்மைய தேர்தலில் அதே காங்கிரஸோடு கருணாநிதி மீண்டும் கூட்டுச்சேர்ந்து தேர்தலைச் சந்தித்தார். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, தி.மு.க - காங்கிரஸ் கூட்டணிமீது அவர்களது நிரந்தரச் சாபம் உள்ளது.

தமிழ்நாட்டுத் தேர்தல்களத்தில் தேவையற்ற முறையில் முக்கியஸ்தராகக் கருதப்பட்டவர், விஜயகாந்த். அவரது அரசியல் செல்வாக்கின் வண்டவாளம் இப்போது நன்கு தெரிந்துவிட்டது. அ.தி.மு.கவைத் தவிர, அநேகமாக எல்லாக் கட்சிகளுமே அவரைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடின. ஒன்றுக்கும் உதவாத அரசியல் தலைவர், அவர். சினிமாவில் சம்பாதித்த ஓரளவு நற்பெயரை, அவர் அரசியலில் கொட்டித் தீர்த்துவிட்டார். விஜயகாந்துக்கு இனி அரசியல் எதிர்காலம் என்பது இல்லை. அவரை நம்பி, தங்களுக்கு இருந்த நற்பெயரையும் மக்கள் நலக் கூட்டணியினர் வீணாக இழந்துவிட்டதுதான் மிச்சம். விஜயகாந்தை உள்நுழைக்காமல் மக்கள் நலக் கூட்டணி செயல்பட்டிருந்தால், ஓரளவாவது தன் பெயரைத் தக்கவைத்திருக்கும். தி.மு.க, அதி.மு.க ஆகியவற்றுக்கு மாற்று அணியாகச் செயல்பட்டிருக்கவேண்டிய மக்கள் நலக் கூட்டணி, விஜயகாந்தின் உள்நுழைவால் தன் மதிப்பைத் தானே இழந்து தவிக்கிறது.

தமிழ்நாட்டின் சட்டசபைத் தேர்தல் தொடர்பாக இலங்கைவாழ் தமிழர் உட்பட, உலகத் தமிழர் அனைவரும் அக்கறை செலுத்தினர். தமிழ்நாட்டில் ஊழல் அற்ற, அதிகாரத் துர்ப்பிரயோகம் அற்ற, திறமையான நல்லாட்சி நிலவவேண்டும் என்பதே அனைத்துத் தமிழரின் பிரார்த்தனையும் ஆகும்.

புதியதொரு தமிழ்க் கட்சி – தேவை என்ன?

இலங்கையில் இப்போது இருக்கின்ற தமிழ்க்கட்சிகள் போதாது என்று புதிய ஒரு கட்சியும் தொடங்கப்பட்டிருக்கிறது. இப்போது இக்கட்சியின் தேவை என்னவென்று எதுவும் விளங்கவில்லை. தமிழ்மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற முக்கிய கட்சியொன்று நீண்டகாலமாக இருந்துவருகிறது. அக்கட்சி அப்படியொன்றும் அப்பழுக்கற்ற புனிதமான கட்சி என்று முத்திரை குத்துவதற்கு இல்லை. ஆனாலும், நெடுங்காலமாகத் தமிழ்மக்களின் பிரச்சினைகளோடு அதற்கு நெருங்கிய

பரிச்சயம் உண்டு. அக்கட்சி தொடர்பாகத் தமிழ்மக்கள் மத்தியில் விமர்சனங்களும் உண்டு. அதேவேளை, விமர்சனங்களை மீறிய ஆதரவும் அக்கட்சிமீது தமிழ்மக்களுக்கு உண்டு. அக்கட்சியின் செயல்பாடுகளைத் தமிழ்மக்கள் முழுமனத்தோடு ஏற்றுக்கொள்வதும் இல்லை. அதேவேளை, அதனை முழுமையாகத் தமிழ்மக்கள் நிராகரிப்பதும் இல்லை. கடந்த காலங்களில் தனிநபர்களாகச் சிலர் அக்கட்சியில் இருந்து வெளியேறித் தமது தனிநலத்துக்காகவும், அரசியல் ஆதாயத்துக்காகவும் அவ்வப்போதைய அரசாங்கங்களுடன் ஒட்டி உறவாடியவர்களைத் தவிர்த்துப் பார்க்கும்போது, மந்திரிப் பதவி மாயைகளில் சிக்கி மண்டியிடாமல், தனது தனித்துவத்தைப் பாதுகாத்துவந்தமை அதன் முக்கிய பலமாகும்.

தமிழ்மக்களின் முக்கிய கட்சியாக விளங்கும் அதற்குள்ளேயே இணக்க அரசியலுக்குச் சார்பான போக்குள்ளோரும், எதிர்ப்பு அரசியலைக் கையாள்வோரும் உள்ளனர். தமிழ்மக்கள் தொடர்பான நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக அக்கட்சிக்குள்ளேயே ஒருசாரார் இணக்க அரசியலைக் கையாள்கின்றனர். அவர்கள் விரைவில் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு வரும் என்றும் நம்புகின்றனர். ஆனால், மறுசாரார் தமிழ்மக்களின் மனச்சாட்சியின் குரலை ஒலிக்கின்றனர். அவர்கள் இன்றைய அரசும் தமிழ்மக்களுக்கு நன்மையைச் செய்யக்கூடியது அல்ல என்ற யதார்த்தக் கருத்துகளை முன்வைக்கின்றனர். இதுதான் அக்கட்சிக்குள்ளே உள்ள முக்கிய பிரச்சினையாகும். ஆனால், இருசாராரில் எவரும் தமிழ்மக்களுக்குப் பாதகமான செயல்பாடுகளில் ஈடுபட்டதும் இல்லை அரசின் பதவிகளுக்காகப் பணிந்துபோனதும் இல்லை. அதேவேளை, அக்கட்சி விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதும் அல்ல.

நிலைமை இவ்வாறு இருக்க, தமிழ்மக்கள் மத்தியில் புதிதான அரசியல் கட்சி ஒன்று முளைத்தமை வேடிக்கையானது. தேவை ஒன்று இல்லாமலே தமிழ்க்கட்சி ஒன்று தோன்றியமை வியப்புக்கு உரியது. ஒரு ஜனநாயக நாட்டில் புதிய கட்சிகள் தோன்றுவதில் தவறு என்ன இருக்கமுடியும் என்று கேட்கலாம். தோன்றுவதில் தவறு காணமுடியாது. ஆனால், தோன்றுவதற்குத் தேவை ஒன்று இருக்கவேண்டும்.

புதிதாகத் தோன்றிய தமிழ்க்கட்சியில் ஒருவர், வாழ்நாள் முழுக்க அறிக்கை அறிக்கையாகவே எழுதிக்கொண்டிருப்பவர். எதற்கெடுத்தாலும் முக்கிய தமிழ்க்கட்சியைக் குறைகூறியே காலத்தைக் கடத்துபவர். தமிழ்மக்களின் ஆனந்தத்தைச் சங்கரித்துவந்தவர். தமிழ்மக்களுக்குரிய கட்சியைத் தமது சுயநலத்துக்காகத் தமது கையில் எடுத்துக்கொண்டவர். அரசியலில் எவருடனும் ஒத்துப்போகாமல் தமது தனிவழியில் செல்பவர். அதனால், தமிழ்மக்களால் அரசியலில் தனித்துவிடப்பட்டவர்.

புதிய கட்சியில் அங்கம் வகிக்கும் இன்னொருவர், முன்னைய காலங்களில் எந்த அரசிலும் அமைச்சுப் பதவி வகித்துச் சுகம் கண்டவர். எடுத்ததற்கெல்லாம் தமிழ்மக்களின் ஆதரவு பெற்றவர்களை வசைபாடிக்கொண்டிருப்பதை வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர். தாம் அமைச்சுப் பதவிகளை வகித்தபோது செய்திருக்கவேண்டியவற்றைச் செய்யாமல் இருந்துவிட்டு, இப்போது மட்டும் மற்றவர்கள் செய்யவேண்டும் என்று வலியுறுத்துபவர். கொடுங்கோல் ஆட்சியாளர்களுடன் கூடிக்குலாவி இருந்துவிட்டு, அமைச்சுப் பதவி எதுவும் இல்லாத நிலையில் தமிழ்மக்களுக்குச் 'சேவை' செய்யப்போவதாகக் கூறித் திரிபவர். எப்போது மீண்டும் அமைச்சுப் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பவர்.

இந்தக் கட்சியில் இணைந்துள்ள பிறிதொருவர், அரசியல்வாதி அல்லர். சோதிடத்தில் வல்லவர். தம்மையொத்த பிற சமயவாதிகளுடன் இணைந்து முன்னாள் கொடுங்கோல் ஆட்சியாளருக்காகச் 'சமயப் பிரசாரம்' செய்தவர். தமது இருப்பை வலுப்படுத்திக் கொள்வதற்காகத் தமிழ்மக்களின் துன்பங்களையும் தூசாக மதித்தவர். வெளிநாட்டில் இருந்து வருகை தந்த முக்கியஸ்தர்கள் சிலருக்கு முன்னாள் ஆட்சியாளர் தமிழ்மக்களுக்குச் செய்த 'நன்மைகள்' பற்றித் 'தர்மோபதேசம்' செய்தவர். முன்னாள் ஆட்சியாளரின் வெற்றிகளுக்காகக் கோயில்கள்தோறும் வழிபாடுகள் இயற்றியவர். ஆட்சி மாறியதால் முகவரியை இழந்தவர். புதிய முகவரிக்காகப் புதிய கட்சியுடன் இணைந்தவர்.

இத்தகையவர்களுடன் சில நல்ல பண்பாளர்களும் இக்கட்சியில் இணைந்திருப்பதுதான் ஆச்சரியமானது. எவ்வாறாயினும், இப்புதியகட்சிக்குத் தமிழ்மக்களின் ஆசி கிடைக்காது என்பது நிச்சயம்.

○○○

கலாபூஷணம் கே. பொன்னுத்துரை

சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

அறிவோர் ஒன்றுகூடலில் சட்ட ஆலோசகர் க.மு. தர்மராஜா

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் புதன்கிழமைகளில் நடைபெறும் "அறிவோர் ஒன்றுகூடல்" நிகழ்வில் (04.05.2016) சட்டஆலோசகர் க.மு. தர்மராஜா கலந்துகொண்டு "சட்டத்துறையும் வல்லுநர்களும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்நிகழ்விற்கு ஆட்சிக்குழு உறுப்பினர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமைவகித்தார்.

தேவலோகேஸ்வரகுருக்கள் எழுதிய "தேவ ஜோதிஷ அமிர்தம்" நூல் வெளியீட்டுவிழா

கொழும்பு சாரதாபீடம் தேவலோக கேஸ்வரகுருக்கள் எழுதிய "தேவ ஜோதிஷ அமிர்தம்" நூல் வெளியீட்டுவிழா (07.05.2016) பிரம்மஸ்ரீ விஸ்வ. நாராயணக்குருக்கள் தலைமையில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. பால கைலாசநாத சர்மா நூல் ஆய்வுரை நிகழ்த்தினார். தமிழருவி த. சிவகுமாரன் சிறப்புரையாற்றினார். வெளியீட்டுரையை கோப்பாய் சிவம் நிகழ்த்த, தமிழருவி த. சிவகுமாரன் சிறப்புரையாற்றினார். 'விடைகொடிச் செல்வர்' சின்னத்துரை தனபாலா முதற்பிரதியை மூத்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ சுப. சந்திரசேகரக் குருக்களிடம் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதியை புனர்வாழ்வு மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனிடம் தொழிலதிபர் சுப்பிரமணியம் சிவகுமார் பெற்றுச் சிறப்புச் செய்தார்.

கர்நாடக இசை பரதநாட்டிய அரங்கேற்றம்

கொழும்பு நடேஷ்வராலயா நுண்கலைக் கல்லூரியினதும், திரு. வைத்திலிங்கம், கணேசலிங்கம் அவர்களினதும், ஸ்ரீமதி ஜீவா இரட்ணராஜா அவர்களினதும் மாணவியான வைத்தியகலாநிதி ஜெயலக்ஷ்மி யுதிஷ்டிரன் அவர்களின் கர்நாடக இசை, பரதநாட்டிய அரங்கேற்றம் வெள்ளவத்தை ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் (07.05.2016) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கவிஞர் சடாகோபன் திருமதி ராஜீ சடகோபன் கலந்து சிறப்பித்தார்கள். கர்நாடகத்துறையிலும், பரதநாட்டியத்திலும் சிறந்துவிளங்கும் இவர் தனது இரு ஆற்றல்களாலும் சபையினரை வெகுவாக மகிழ்வித்தார்.

கொழும்பில் சிறப்புற நிகழ்ந்த 'மறுமலர்ச்சி அறிமுகவிழா

ஈழத்தின் முதலாவது தமிழ் இலக்கிய இதழாகிய 'மறுமலர்ச்சி' இதழ்களின் தொகுப்பு அறிமுகவிழா பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் (08.05.2016) கொழும்புத் தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெற்றது. செல்வி சௌதாமினி மோகனசுந்தரத்தின் தமிழ்வாழ்த்துடன் ஆரம்பமாகிய இவ்விழாவின் வரவேற்புரையை கணபதி சர்வானந்தா நிகழ்த்த, வாழ்த்துரையை கொழும்புத் தமிழ்ச்சங்கப் பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி வழங்கினார். தொடக்கவுரையை ஞானம் பாலச்சந்திரன் நிகழ்த்தினார். அறிமுகவுரையை கோப்பாய் சிவம்

அவர்களும் ஆய்வுரையை அரசியல் விமர்சகர் நிலாந்தன் அவர்களும் நிகழ்த்தினார்கள். நூலின் முதற்பிரதியை பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஆர். பி. ஸ்ரீதரசிங் பெற்றுச் சிறப்புசெய்ய, சிறப்புப் பிரதியை சங்கர் புத்தகசாலை அதிபர் ந. பஞ்சாட்சரம் பெற்றுச் சிறப்புச்செய்தார்.

“சுகவாழ்க்கை –பாகம் 4 நூல்” வெளியீடும் மூத்தோர் கௌரவிப்பும்

கொழும்பு சுகவாழ்க்கைப் பேரவையின் “சுகவாழ்க்கை–பாகம் 4” நூல் வெளியீடும் மூத்தோர் கௌரவிப்பும் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சுகவாழ்க்கைப் பேரவைத்தலைவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் (08.05.2016) நடைபெற்றது. தமிழ் வாழ்த்தினை எஸ். சிவயோகநாதன் பாடிமகிழ்வித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சபா. ஜெயராசா கலந்து சிறப்பிக்க, சிறப்பு விருந்தினர்களாக அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் உடுவை எஸ். தில்லைநடராசா, பேராசிரியர் அருள்நிதி சி முருகானந்தவேல் தம்பதியினர், நாவலர் நற்பணி மன்றத்தலைவர் ந. கருணைஆனந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். இறை ஆராதனையை செல்வன் ஸ்ரீராம் நவரட்ணலிங்கமும், வரவேற்புரையை செல்வி காயத்திரி நவரட்ணலிங்கமும் நிகழ்த்தினார்கள். “சுகவாழ்க்கை–பாகம் 4 நூல்” வெளியீட்டுரையை கலாபூஷணம் தம்பு சிவசுப்பிரமணியம் நிகழ்த்த, அதன் முதற் பிரதியை திருமதி மாலதி சுப்பிரமணியம் பெற்றுச் சிறப்பித்தார். சமூகத்தின் மூத்த முன்னோடிகள் 10 பேர் சுகவாழ்க்கைப் பேரவையினரால் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியர் எஸ். கேசவன், வைத்தியகலாநிதி செ.சண்முகநாதன் ஆகியோர் கருத்துரை தெரிவித்தனர். ஏற்புரையை நூலாசிரியர் சுகநலக்கல்வியாளர், உளவள ஆலோசகர் கா. வைத்தீஸ்வரன் அவர்களும், நன்றியுரையை செல்வன் யோகபிரணவன் நவரட்ணலிங்கமும் வழ்கினார்கள்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுச் சொற்பொழிவு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுச் சொற்பொழிவு (13.05.2016) பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமையில் நடைபெற்றது. தென் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் க. இரகுபரன் கலந்துகொண்டு உரையாற்றினார். பெருந்திரளான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

பிரபலஎழுத்தாளர் மு. பொன்னம்பலம் அவர்களின் ‘சங்கிலியன் தரை’ நாவல் வெளியீடு

இலங்கையின் பிரபல எழுத்தாளர் மு. பொன்னம்பலம் (மு.பொ.) அவர்களின் ‘சங்கிலியன் தரை’ நாவல் வெளியீட்டுவிழா கொழும்புத் தமிழ்ச்சங்க வினோதன் கருத்தரங்கு மண்டபத்தில் தெளிவத்தைஜோசப் தலைமையில் (13.05.2016) நடைபெற்றது. நூல் அறிமுக உரையை வைத்தியகலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன் நிகழ்த்த, விமர்சன உரைகளை விமர்சகர் த. இராஜரத்தினம், குணரத்தினம் செந்தீபன் ஆகியோர் முன்வைத்தனர். ஏற்புரையை மு. பொன்னம்பலம் (மு.பொ) அவர்கள் நிகழ்த்தினார்.

நயினாதீவு சமூகபொருளாதார கல்விஅபிவிருத்தி சங்கத்தின் ஒன்று கூடலும் சமூகப் பெரியார்களின் நினைவேந்தலும்.

நயினாதீவு சமூகபொருளாதார கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஒன்று கூடலும் சமூகப் பெரியார்களின் நினைவேந்தல் நிகழ்வும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ப.க. பரமலிங்கம் தலைமையில் (14.05.2016) நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசஅதிபர் நா. வேதநாயகன், வடமாகாண கல்விகலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகப் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள். வரவேற்புரையை இணைச் செயலாளர் நாக. பஞ்சாட்சரம் நிகழ்த்தினார். அஞ்சலி நிகழ்வில் அமரத்துவமடைந்த சங்கத்துணைத் தலைவர்கள், சமூகசேவையாளர்களான அமரர் சி. சிதம்பரநாதன், அமரர் மு. கதிர்காமநாதன், அமரர் செ. குகதாசன் ஆகியோருக்கான கௌரவம் அவர்களின் துணைவிமார்களுக்கு வழங்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் சிறப்புரை ஆற்றினார். பிரதமவிருந்தினர் உரையைத் தொடர்ந்து கொழும்பு அபிநயஷேத்திரா நடனப்பள்ளி இயக்குநர் “நாட்டியகலாரத்னா” திவ்யாசுகேன் அவர்களதும் மாணவிகளினதும் நடனவிருந்து இடம்பெற்றது. இணைச் செயலாளர் ப.ந. உருத்திரலிங்கம் நன்றியுரை வழங்கினார்.

"வான்மதி கவிதைகள்" வெளியீட்டுவிழா

கவிஞானி ஷமீலா இஸ்மத் எழுதிய "வான்மதிகவிதைகள்" வெளியீட்டுவிழாவும் 'மாண்புறு மங்கையருக்குக் கௌரவமும்' கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் புரவலர் புத்தகபூங்கா நிறுவனர் இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலையில், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. சேந்தில்வேலவர் தலைமையில் (15.05.2016)நடைபெற்றது. வைத்தியகலாநிதி தாஸிம் அகமது, 'பொன்மனச் செல்வி' கௌசலாதேவி கோவிந்தபிள்ளையிடம் நூலைவழங்கி வெளியிட்டுவைத்தார். நூல் நயவுரையை 'தாயகஒளி' பிரதம ஆசிரியர் தம்பு. சிவசுப்ரமணியம் நிகழ்த்த, வாழ்த்துரை வழங்கிய கலைஞர் கலைச்செல்வன் அவர்களுக்கு நூலாசிரியர் ஷமீலா இஸ்மத், தேசமான்ய எம்.எஸ்.எம். ரிஷான் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவம் செய்தனர். சிரேஸ்ட ஊடகவியளாலர் திருமதி ஆனந்தி பாலசிங்கம், திருமதி ஹூஸ்னா ஆகியோரை மூத்தபெண் படைப்பாளி திருமதி அன்னலெட்சுமி இராஜதுரை, சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, 'பொன்மனச் செல்வி' கௌசலாதேவி கோவிந்தபிள்ளை ஆகியோர் பாராட்டிக் கௌரவம் செய்தனர்.

மூத்த எழுத்தாளர் துய்யோனின் "ஒரு பூ மீண்டும் மலர்கிறது" என்ற நாவல் வெளியீட்டுவிழா

மூத்த எழுத்தாளர் துய்யோனின் "ஒரு பூ மீண்டும் மலர்கிறது' என்ற நாவல் வெளியீட்டுவிழா மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் தலைமையில் (19.05.2016) தெமட்டகொட வை.எம். எம். ஏ. கேட்போர் கூடத்தில் நடந்தது. டாக்டர் ஸனூஸ் காரியப்பர் வரவேற்புரையையும், ஓய்வுநிலை சுங்க அதிகாரி அல்ஹாஜ் எஸ்.எச். முகமட் அலி அறிமுகவுரையையும் நிகழ்த்தினார்கள். வாழ்த்துரையை ஊடகவியலாளர் ஜனாப் முஸ்டீன் அவர்களும், நூல் நயத்தலுரையை ஊடகவியலாளர் அஷ்ர..ப் சிஹாப்தீன் அவர்களும் நிகழ்த்தினார்கள். நூலின் முதற் பிரதியை பிரபல் தொழிலதிபர் தேசமான்ய கலாநிதி அப்துல் கையும் பெற்றுச் சிறப்பித்தார். நூலாசிரியர் துய்யோன் (ஏ.எச்.ஏ.பஷீர்) ஏற்புரையும், நன்றியுரையையும் நிகழ்த்த, கவிஞர் கிண்ணியா அமீர் அலி, ஷப்னா அன்சார் ஆகியோர் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்கள்.



இராக அளிக்கை

கொழும்புத் தமிழ்ச் சங்கம் மாதந்தோறும் நடத்தும் 'இராக அளிக்கை' நிகழ்வு (25.05.2016) இசை ஆசிரியர் திருமதி ஹேமவதி கபிலதாஸ் தலைமையில் செல்வி பைரவி பத்மனாதன் அவர்களால் காபி

இராகம் அளிக்கை செய்யப்பட்டது. நிகழ்விற் குயிலுவக் கலைஞர்களாக வயலின் திருமதி மதுராபாலச்சந்திரன், மிருதங்கம் சுவாமிநாதன் சர்மா, மோர்சிங் விபிரபாஆகியோர் பங்குபற்றி சிறப்புசெய்தார்கள்.

சிலப்பதிகாரவிழா

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நிகழ்த்திய சிலப்பதிகாரவிழா மே 20,21.22 ஆகிய திகதிகளில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

'சிலம்பு போற்றுதும்' என்ற சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. சிறப்புச் சொற்பொழிவுகள், 'சிலப்பதிகாரம்: பன்மைநோக்கு' என்ற தலைப்பில் பேராசிரியர் சபா. ஜெயராசா, பேராசிரியர் செ. யோகராசா, தெ. மதுசூதனன், க. இரகுபரன் ஆகியோர் தலைமையில் இரண்டு நாட்களும் அமர்வுகள் இடம்பெற்று ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக் கப்பட்டன. மாலையில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.







மூத்த எழுத்தாளர்களைக் கெளரவிக்கும் விருதுவிழா

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் கொடகே புத்தகமாளிகை இணைந்து நடத்திய மூத்த எழுத்தாளர்களைக் கெளரவிக்கும் விருதுவிழா கூட்டுத்தாபன ஆனந்தசமரக்கோன் கலையகத்தில் பாராளுமன்ற புனரமைப்பு ஊடக அமைச்சர் கயந்தகருணாதிலகா தலைமையில் 24.05.2016 அன்று நடைபெற்றது. மூத்த சிங்கள தமிழ்மொழி எழுத்தாளர்கள் விருதுவழங்கிக் கெளரவிக்கப்பட்டனர். தமிழ்மொழி எழுத்தாளர்களில் அந்தனி ஜீவா, திருமதி மாதினியார் ஆனந்தநடராஜா, கவிஞர் மேமன்கவி ஆகிய மூவர் கெளரவிக்கப்பட்டனர்.

ஞானம் ஆசிரியர் தி ஞானசேகரன் பவளவிழாவும் விருது வழங்கலும்

ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன் அவர்களின் பவளவிழாவையொட்டி அவுஸ்திரேலிய சிட்னி உயர்திணை இலக்கிய அமைப்பினர் நிகழ்த்திய பாராட்டுவைபவமும் விருது வழங்கலும் 29-05-2016 அன்று இடம்பெற்றது. திரு. திருமதி ஈழலிங்கம் தம்பதியினர் மங்கலவிளக்கற்றி நிகழ்வை ஆரம்பித்தனர். தேசிய கீதமும் தமிழ்த்தாய் வாழ்த்தும் செல்வி லக்ஷினி லோகேஸ்வரன், கேசினி கேதீசன் ஆகியோரால் பாடப்பட்டது. நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசரின் வரவேற்புரையைத் தொடர்ந்து பாராட்டுரையை பேராசிரியர் ஆசி. கந்தராஜா வழங்கினார் கௌரவ விருது திரு. தனபாலசிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. 'ஈழத்து இலக்கிய மரபின் இன்றைய நிலை' என்ற தலைப்பில் திரு. ஞானசேகரன் உரையாற்றினார். திருமதி கீதமஞ்சரி மதிவாணன் நன்றி உரை வழங்கினார். உயர்திணை அமைப்பாளர் யசோதா பத்மநாதன் நிகழ்ச்சியை ஆற்றுப்படுத்தினார். கலாநிதி மகேந்திரராஜா பிரவீனன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். தொடர்ந்து இராவணேசன் ஒளிப்படக்காட்சி இடம்பெற்றது.



அவுஸ்திரேலியா – மெல்பன் நினைவரங்கில் – மறைந்த ஆளுமைகளுக்கு புகழாரம் "புலம்பெயர் இலக்கியம் தேசம் சார்ந்த இலக்கியமாகிவிட்டது" ஞானம் ஆசிரியர் ஞானசேகரன் புதுவிளக்கம்.

'அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் இலக்கியத்தையோ, கனடாவிலிருந்தும் அய்ரோப்பிய நாடுகளிலிருந்தும் சமகாலத்தில் உருவாகும் இலக்கியத்தையோ புலம்பெயர் இலக்கிய வகைக்குள் தொடர்ந்தும் அடக்கமுடியாது. இனி நாம் அவுஸ்திரேலியா தமிழ் இலக்கியம், கனேடிய தமிழ் இலக்கியம், அய்ரோப்பிய தமிழ் இலக்கியம் என்று பேசும் காலம்தான் கனிந்துள்ளது." என்று ஈழத்து எழுத்தாளரும் ஞானம் இதழின் ஆசிரியருமான டொக்டர் தி. ஞானசேகரன் அண்மையில் அவுஸ்திரேலியா, மெல்பனில் நடந்த இலக்கிய நிகழ்வில் குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம், மெல்பனில் நடத்திய இலக்கிய ஒன்று கூடலும் நினைவரங்கும் சங்கத்தின் தலைவர் படைப்பாளி பேராசிரியர் ஆசி. கந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு மெல்பனில் வேர்மண் கிழக்கு சமூக மண்டபத்தில் அண்மையில் இலங்கையில் மறைந்த மூத்த படைப்பாளி செங்கைஆழியான், ஆவணக்காப்பாளர் புன்னியாமீன், ஊடகவியலாளரும் படைப்பாளியுமான கே. விஜயன் ஆகியோருக்கான நினைவரங்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

"கடந்த கால்நூற்றாண்டுகளில் - ஈழத் தமிழ் இலக்கிய தடங்கள் - இனிவரும் மாற்றங்கள்" என்னும் தலைப்பில் ஞானசேகரன் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

"பொதுவாக தமிழ் இலக்கியவளர்ச்சியை வளப்படுத்தியதிலும் மறுமலர்ச்சி காலம் முதல், அதன் பின்னர் உருவான முற்போக்கு இலக்கியம், பிரதேச இலக்கியம், போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் என கட்டம் கட்டமாக தோன்றிய பரிணாம வளர்ச்சியை செழுமைப் படுத்தியதிலும் ஈழத்தமிழ் படைப்பாளிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொண்டனர்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் சில முக்கியமான கால கட்டங்களை நாம் கடந்து வந்துள்ளோம். இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்திலிங்கம் முதலான மூத்த எழுத்தாளர்களின் எழுத்துக்களின் காலம், அதன்பின்னர் வரதர், சொக்கன், இராசநாயகம், பொன்னுத்துரை, கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், டொமினிக் ஜீவா, இளங்கீரன் உட்பட பலரதும் படைப்புக்காலம். அதனையடுத்து செங்கைஆழியான், கதிர்காமநாதன், செம்பியன் செல்வன், யோகநாதன், தெணியான், என்று ஒரு நீண்ட பட்டியல் வருகிறது.

இவ்வாறு பலரையும் கட்டம் கட்டமாக நாம் குறிப்பிடலாம். கவிதையில் சிறுகதையில், நாவலில், விமர்சனத்தில் ஈழத்து படைப்பாளிகள் தமது ஆளுமையை சிறப்பாக பதிவுசெய்துள்ளனர்.

விமர்சனத்துறையிலும் 1970களில் அறிமுகமான புதுக்கவிதைத் துறையிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. அதேசமயம் புறக்கணிப்புகளும் நிகழ்ந்துள்ளன. அணியாக இயங்கும் மனோபாவமும் தோன்றியது. படைப்பு மொழியும் மாற்றங்களை சந்தித்தது.

நாம், மறுமலர்ச்சி காலத்திலிருந்து புலம்பெயர் இலக்கியம் என்று பேசும் வரைக்கும் வளர்ச்சியடைந்துள்ளோம். ஈழத்து இலக்கியத்தின் வரலாறே நீட்சியான பெரியதொரு ஆவணம்தான்.

ஈழத்திலிருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் ஆரம்பத்தில் படைத்த இலக்கியவகைகள், புலம்பெயர் இலக்கியமாகப் பேசப்பட்டாலும், அத்தகைய எழுத்துக்களை எழுதியவர்கள் 'புலம்பெயர் தேசங்களில் கால்பதித்து மூன்று தசாப்தங்களும் கடந்துவிட்டன.

இனியும் அவர்களின் படைப்புகளை புலம்பெயர் இலக்கியம் என நாம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அவுஸ்திரேலியாவில் கால்பதித்து கால்நூற்றாண்டு காலத்தின் பின்னரும் ஒருவர் தமிழில் எழுதிக்கொண்டிருந்தால், அது அவுஸ்திரேலியா தமிழ் இலக்கியம் என்றுதான் பொருள்படும். அவ்வாறுதான் அய்ரோப்பிய தமிழ் எழுத்துகள், கனேடிய தமிழ் எழுத்துக்கள் என்று பேசப்படும் காலத்தில் நாம் வாழ்கின்றோம்.

இத்தகைய எழுத்துக்களின் படைப்புமொழி மாறியிருக்கிறது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் மற்றும் ஒரு நீட்சியாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

செங்கைஆழியான்

'மறைந்த படைப்பாளி செங்கைஆழியான், தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தமிழ் வாசகர்களை பெரிதும் ஈர்த்துக்கொண்டவர். அதனால் அவரை ஜனரஞ்சக எழுத்தாளர் என்று ஒரு சிமிழுக்குள் அடைக்கப்பார்க்கிறார்கள். என்போன்ற பலரும் தமது பாடசாலைக் காலத்திலேயே செங்கைஆழியானின் எழுத்துக்களினால் கவரப்பட்டனர். பல தசாப்த காலமாக அவர் தட்டச்சு இயந்திரத்தின் ஊடாக எழுதிக்குவித்தவர். அவர் இலக்கியத்துடன் நில்லாமல், மாணவர்களுக்கு பயன்படும் புவியியல் கல்வி சார்ந்த பல நூல்களையும், இலங்கையின் அரசியல் வரலாற்றையும் தந்தவர். கணினி அறிமுகமானதும் அதன் ஊடாக எழுதிக்கொண்டே இருந்தவர். அவருடைய இறுதிக்காலத்தில் நேரில் சென்று பார்த்துவிட்டு வந்தும் எழுதியிருக்கின்றேன்." என்று செங்கைஆழியான் நினைவுரையை மெல்பனில் வதியும் இளம் படைப்பாளி ஜே.கே. ஜெயக்குமாரன் தெரிவித்தார்.

கே. விஜயன்

'கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நிகழ்வுகளுக்கெல்லாம் அடிக்கடி வருகைதரும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான கே. விஜயனை எமது சங்கத்தில் அங்கத்தவராக இணைந்துகொள்ளுமாறு பல தடவைகள் வற்புறுத்தியிருக்கின்றேன். ஆனால், அவர் மறுத்துவிட்டார். அதற்கு அவருடைய சுதந்திரமாக இயங்கும் மனோபாவம்தான் முக்கிய காரணம். தயவுதாட்சண்யம் இல்லாமல் விமர்சனம் செய்வதில் விஜயன் வல்லவர். சிறுகதை, நாவல், பத்தி எழுத்துக்கள் என்று பலதும் எழுதியவர். அவருடைய மரணச்செய்திகூட உடனடியாக வெளியே வரவில்லை. கொழும்பில் பத்திரிகை மற்றும் தமிழ் அமைப்புகள் மத்தியிலும் எழுத்தாளர்கள், வாசகர் மட்டத்திலும் நன்கு அறிமுகமான விஜயனின் மறைவு பலருக்கும் அவர் நல்லடக்கமானதன் பின்னரே தெரியவந்திருக்கிறது என்பது ஆழ்ந்த சோகமாகும்" என்று கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நடப்பாண்டு இலக்கியக் குழுச்செயலாளர் திரு. இரகுபதி பாலஸ்ரீதரன் தமது நினைவுரையில் குறிப்பிட்டார்.

பி.எம். புன்னியாமீன்

இலங்கையின் மத்திய மலையகப் பிராந்தியத்தில் உடதலவின்ன என்ற பிரதேசத்திலிருந்து பரபரப்பின்றி அமைதியாகவும் நிதானமாகவும் தமிழ் இலக்கிய மற்றும் ஊடகத்துறை சார்ந்தவர்கள் பற்றி பதிவு செய்து ஆவணமாக்கியவர் மறைந்த பி.எம். புன்னியாமீன் அவர்கள். அவருடைய சேவைகளுக்காக இலங்கையிலும் தமிழகத்திலும் பாராட்டப்பட்டிருக்கிறார். சில இதழ்கள் அவரை அட்டைப்பட அதிதியாகவும் கௌரவித்துள்ளன. தமிழ் விக்கிபீடியாவின் ஊடாக நூற்றுக் கணக்கான இலக்கியவாதிகளையும் ஊடகவியலாளர்களையும் பற்றிய விபரங்களை ஆவணப்படுத்தியவர். அவருடைய ஆவணப்பதிவுகள் எமக்கு உசாத்துணையாக விளங்குகின்றன." என்று மறைந்த புன்னியாமீன் பற்றிய நினைவுரையை நிகழ்த்திய யாழ்ப்பாணம் சாந்திகம் தொண்டு நிறுவனத்தின் ஆலோசகரும் எழுத்தாளருமான திரு. சந்திரசேகரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் இறுதியில் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் செயலாளர் டொக்டர் நடேசன் நன்றியுரை நிகழ்த்தினார்.

–ரஸஞானி – மெல்பன்

○○○

வாசகர் பேசுகிறார்

ஞானம் 192ஆவது இதழில் வெளியான கவிஞர் சோ. பத்மநாதனின் நேர்காணல் சிறப்பாக இருந்தது. அவர் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட கவிஞர் என்பதை நேர்காணல் சிறப்பாக வெளிக்கொணர்ந்தது. அத்தகைய கவிஞர் உருவாகி வளர்ந்த இளமைக்காலம், குடும்பப் பின்னணி, கவிஞராக வளர்ந்த வரலாறு போன்றவையும் நேர்காணலில் இடம்பெற்றிருந்தால் முழுமையானதாக இருந்திருக்கும் கவிஞருக்கும், நேர்காணல் செய்த கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களுக்கும் வாழ்த்துக்கள்.

– இரா. அ. இராமன், கண்டி.

எழுத்தாளராகவும் திரைப்பட இயக்குநராகவும் திகழ்ந்த திரைப்படத்துறையின் தந்தை செம்பின் உஸ்மான் அவர்கள் பற்றிய அறிமுகக் கட்டுரை சிறப்பானது. இத்தகைய பிறநாட்டுக் கலைஞர் பற்றிய கட்டுரைகளை ஞானம் தொடர்ந்து வெளியிடுதல் நல்லது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் சிவனு மனோகரனின் கதையை ஞானத்தில் படிக்க முடிந்தது. சமீபகாலத்தில் நான் வாசித்த நல்ல சிறுகதை. கதையின் முடிவில் பொட்டு ஏன் தற்கொலை செய்தாள் என்பது விளங்கவில்லை. மலையகத்தில் இருந்து சிறுகதைகள் வருவது குறைந்து விட்டது. மலையக எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களை எழுதச்செய்யவேண்டும். அது ஞானம் சஞ்சிகையின் ஒரு பணியாக அமையவேண்டும்.

– சந்தனம் மாரிமுத்து, நுவரெலியா

முந்தையோர் ஈழத்தவரே என்ற ஞா. பாலச்சந்திரன் எழுதிய கட்டுரை சிறிதாக இருந்தாலும் விடயம் உள்ளது. பல புதிய விடயங்களைத் தேடி எழுதுகிறார். சி. வை. தாமோதரம்பிள்ளை பழைய நூல்களைத் தேடி பதிப்புச் செய்தவர் என்பது தெரியும். ஆனாலும் அவர்தான் தமிழ் இலக்கியத்தில் காலவகுப்புச் சிந்தனைக்கு வித்திட்டவர் என்பது புதிய செய்தி. பாலச்சந்திரனின் ஈழமும் தமிழும் நூல்கள் தொடர்பான கருத்தாடல் நிகழ்வு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்றதாக செய்தியைப் பார்த்தேன். அந்த நூல்களைப் பெறுவது எப்படி என்பதை அறியத்தரவும்

– ச.மனோகரன், சாவகச்சேரி

சென்ற இதழில் சக்திவேல் கமலகாந்தன் எழுதிய சமூக வலைத்தளங்களும் அதிகரித்து வரும் குற்றங்களும் என்ற கட்டுரை இன்றைய காலகட்டத்துக்கு முக்கியமானது. ஆனாலும் அக்கட்டுரையில் இக்குற்றங்களைத் தடுக்கும் வழிகளை சற்று விரிவாக எழுதியிருக்கலாம் போலத் தெரிகிறது. ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் சமூகவலைத்தளங்களால் ஏற்படுகின்ற பாதிப்புகள் அதிகரிப்பதைப் பத்திரிகைச் செய்திகளில் காணமுடிகிறது

– மேனகா தாமோதரம், கோண்டாவில்.

நூலகர் செல்வராஜாவின் ஒரு நூலியல் சார்ந்த பார்வை தொடர் பலவிடயங்களைக் கூறுகிறது. பதிப்புத்துறை சார்ந்த பல விடயங்களை அறிய முடிகிறது. இத்தொடர் நூல்வடிவம் பெற்றால் மிகவும் பயனுள்ளதாக அமையும். ஒவ்வொரு எழுத்தாளரும், வெளியீட்டாளரும், அச்சகத்தாரும் அறிந்துகொள்ளவேண்டிய பல விடயங்கள் கட்டுரையில் காணமுடிகிறது

– எஸ். ரமேஷ், திருகோணமலை

தங்களைப்பற்றி ஏழைதாசன் இதழில் அட்டைப்படத்துடன் வந்த கட்டுரை படித்தேன். பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. கடல்கடந்து இருந்தாலும் அன்னை தமிழுக்கு மகுடம் சூட்டிவரும் தங்களைப் போன்றவர்களால்தான் தமிழ் உலகெங்கும பரவி வளர்ந்து வருகிறது. இதயம் நிறைந்த வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்

– கவிஞர் சா. அரிராசு, எழுத்தாணி மாதஇதழ், சென்னை – 45

ஈழமும் தமிழும்

ஞானம் பாலச்சந்திரன்

நூல் எண் : 1



நூல் எண் : 2



நூல் எண் : 3

நூல் எண் : 4

நூல் எண் : 5



இந்துமதம்
என்ன சொல்கிறது?
– பாகம் 3
'தத்துவ சாரம்'
திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்
விலை: ரூபா. 300/=

ஞானம் பதிப்பகம்

3B 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06
+94 11 258 6013 +94 777 306 506
editor@gnanam.info

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/45/News/2016

Luckyland

BISCUIT
MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
T: +94 081 2420574, 2420217. F: +94 081 2420740
E: luckyland@sltnet.lk

9 772478 034009